

ஒரே படம்!
....இன்பமூட்டவும் அறிவை
வளர்த்திடவும் துணைசெய்கின்ற.."ஒரேபடம்"
வெற்றிமேல் வெற்றி பெற்றுத்
திரளான மக்கள் தினமும்
கண்டு களிக்கின்ற.............."ஒரேபடம்"
......பெருவாரியான மக்களின்
உள்ளத்தைக் கவர்ந்துவிட்ட "ஒரேபடம்"
.........மக்களிடை மகத்தான
மதிப்பைப் பெற்று மட்டற்ற
மகிழ்ச்சியை அளித்திட்ட.... "ஒரேபடம்"
அந்தப் படம் "வேலைக்காரி" தான்
என்று திரண்டெழுந்து வரும் மக்கள்
தீர்ப்புக்கூறுகின்றனர்
வேலைக்காரி
ஒரு · ஜூபிடர் · வெற்றி
அறிஞர் அண்ணாதுரை
......தீட்டியது...
ஏ.எஸ்.ஏ.சாமி......
உருவாக்கியது......
சென்னை பாரகன் · கிரௌன் · லக்ஷ்மி
· மற்றும் · ராஜதானி · பூராவும் · நடைபெறுகிறது

How'd you like being on the Sea-beach!



ஆயாஸமாக இருக்கிறதா? ஆம்...... உக்கிரமான கோடை வெயில் உடம்பை பலஹீனப் படுத்துகிறது. அதிர்ஷ்டவசமாக கோடைக் களைப்பைப் போக்கி உதவ E. W. I. போனிக்ஸ் மின்சார விசிறிகள் இருக்கின்றன. அவைகள் மிகவும் வலுவாக அமைக்கப்பட்டவை. இந்திய சர்க்காரின் அலிபூர் பரிசோதனை சாலையாரால் பரீக்ஷை செய்யப்பட்டு அத்தாட்சி பெற்றவை. சிறந்த நீடித்த உழைப்புக்குப் பிரக்யாதி வாய்ந்தது E. W. I. மின்சார விசிறிகள்தான் என்று நீங்கள் திடமாக நம்பலாம்.

1949 MODEL

EWI LTD. SYMBOL OF QUALITY

PHŒNIX Fans

GOVT. TESTED

AC/DC

FA 440

Sole Distributors for Madras Presidency inclusive of all States:

R M. S. & CO. LTD., 16, BROADWAY, MADRAS. I.

மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு ஸப் - டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

இண்டர் நேஷனல் டிரேடிங் கோ.,
த. பெ. நெ 75, டவுன் ஹால் ரோடு, மதுரை

மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு பொது ஸ்டாக்கிஸ்ட்டுகள் :

இந்தியா எலக்ட்ரிக் கோ.,
154, தெற்கு மாசி வீதி, மதுரை

திருவாங்கூர், கொச்சின் ஸமஸ்தானங்களுக்கு ஸப் - டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

மெஸர்ஸ். ஸௌத் இந்தியா சேல்ஸ் கார்ப்பொரேஷன்
கல்லன் ரோடு, ஆலப்புழை

தஞ்சை ஜில்லாவுக்கு ஸப் - டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

மெஸர்ஸ். செல்வா எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ்
பெரிய கடைத் தெரு, கும்பகோணம்


. . . AFTER THAT I'M CONVINCED
Tussanol
IS THE
ONLY WAY
TUSSANOL
பரீட்சைகள் செய்வது நேரத்துக்கும் பணத்துக்கும் வீண் செலவுதான். எப்போதுமே நிச்சயமாக குணத்தை யளிக்கும் "டஸ்ஸனல்" உபயோகித்து ஜலதோஷம் இருமலினின்றும் மிக எளிதில் சௌகரியமடைந்த அநேகம் பேர்களின் புத்திமதியையே நீங்களும் மேற்கொள்ளுங்கள்.
TUSSANOL
for COUGHS
MARTIN & HARRIS LTD., CALCUTTA

எக்ஸிமா

"உடனே நிவாரணமடைகிறது"

—ஹென்றி, கெமிஸ்டு



"கால்களில் எரிச்சலளித்து வந்த எக்ஸிமாவை உங்கள் அற்புதமான தயாரிப்புதான் உடனே நிவாரணமளித்தது என்று கூற முன் வருகிறேன். தடிப்பான தோலை மென்மையாக்கவும், ஏற்பட்ட எரிச்சலைப் போக்கவும் ஒரே ஒரு பாட்டில் வெல்டர்மா சரியாக இருந்தது. இதே சரும நோயினாலோ அல்லது இதைப்போல வேறுவித சரும நோயினாலோ அல்லல் படுகிறவர்களுக்கு வெல்டர்மாவைத்தான் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கூறத் தேவையில்லை." — CL.


வைத்தியர்களும் வற்புறுத்துவது:

எக்ஸிமா, கொப்புளங்கள், சிராய்ப்பு பருக்கள் முதலிய சகல சரும நோய்களும் வெல்டர்மாவிலுள்ள 'கிருமி நாசன சக்திகளிரண்டுக்கும்' அடங்கி குணமாகி விடுகின்றன. இந்த நவீன மருந்து முற்றிலும் விநோதமானது. 'நீரில் எண்ணெய் சேர்க்கை' என்னும் ஆதாரம் வைத்திய ஆராய்ச்சியிலேயே மிகவும் அபூர்வம். முதலாவதாக நோய்ப்பட்ட இடத்திலுள்ள விஷத்தை வெளியேற்ற உதவுகிறது. நோய் தொத்தி விடுமென்ற அபாயமே இல்லை. இரண்டாவதாக வெல்டர்மாவின் இருவித கிருமி நாசன சக்திகளும் (ஒவ்வொன்றும் வெவ்வேறு வித விஷக் கிருமிகளுக்குச் சத்துரு) போட்ட மாத்திரத்திலேயே வியாதி தொத்தியிருக்கும் மூலஸ்தானத்திற்கு சென்று விடும். எரிச்சல் அடங்கி விச்ராந்தி ஏற்படுகிறது. ஆனால், வெல்டர்மாவை முதல் தடவையாக உபயோகிக்கும்போது சற்று விருவிருப்பை உண்டாக்கும். வெல்டர்மாவிலுள்ள இருவித கிருமிநாசன சக்திகளும் வேலை செய்யத் தொடங்கி விட்டன என்பதற்கு இதுதான் அறிகுறி.

கிருமிகளைக் கொல்ல கார்பாலிக் களிம்பைவிட பத்து மடங்கு அதிக சக்தி வாய்ந்தது. இருந்தாலும் ஆறுதல் தரும். வெகு மோசமான சரும நோய்களுக்கெல்லாம் வெல்டர்மாவைத்தான் சரும வைத்திய நிபுணர்கள் வற்புறுத்துகிறார்கள். வைத்திய சாலைகளிலும் ஆராய்ச்சி சாலைகளிலும் பரிசீலனை செய்யப்பட்டது. தூய வெண்மையானது. கறை படாது. வழ வழுப்பானது, ஆனாலும் பிசுக்கற்றது. உபயோகிக்கத் தகுந்தது. வெட்டுக்காயங்களையும் சிராய்ப்புகளையும் விரைவில் ஆற்றி விடுகிறது.

ஜியாப்ரே மானர்ஸ் அன் கோ., லிமிடெட்


பம்பாய் — கல்கத்தா — டில்லி — மதராஸ்




DOUBLE-ANTISEPTIC

Valderma

THE *Non-Greasy* BALM


துணிமணிகள் கெடாமல் எப்படி சலவை
செய்வது என்பது ஓர் பெரிய பிரச்னை.
இப்பிரச்னையை சுலபமாக்க, உங்களுக்கு
தேவையானது கீழ்க்கண்ட இந்த நான்கு
சாதனங்கள் :—
777
ஸ்வான் சிப்ஸ்:
பருத்தியாலான
ஆடைகளுக்கு
777 சோப்புக்கட்டிகள்:
பருத்தியாலான ஆடைகளுக்கு
SAPOTEX
ஸெபோடெக்ஸ்:
பொதுவாக வீட்டுக்காரிய
ங்களுக்கும் தொழிற்சாலை.
காரியங்களுக்கும்
ஸெபைன் கேக்ஸ்:
ஸில்க், ரேயான் போன்ற மென்மைய
உயர்ந்த ஆடைகளுக்கு
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.
SHILPI
SOM 41 TAMIL



பவளக்கொடி

மதராஸ்

ப்ரபாத்..ஸன்..ஸரஸ்வதி


மற்றும் பல இடங்களிலும்


paillard

இரண்டு குற்றமற்ற ஸினி காமராக்கள்

H 8

H 16





ஆம். போட்டோ எடுக்கும் பொழுதுபோக்கை தொழிலாகக் கொள்வோருக்கு (தொழிலைப் பொழுது போக்காகக் கொள்வோருக்கும் சரி) பிரபலமான "பைலார்டு" மாடல்கள் H 8 அல்லது H 16ஐத் தவிர சிறந்த ஸினி கேமிரா வேறு கிடையாது. ஸ்டூடியோ கேமிராவைப்போலவே அமைப்பிலும் தன்மையிலும் ஒன்றான இக் கேமிராக்களை தொழில் முறையில் கையாளுவதில் எவ்வித சிரமமும் இல்லை. அருகாமையிலுள்ள A.P.L. டீலரிடம் ஸினி கேமிராக்களைப் பார்வையிட வேண்டுமென்று கேளுங்கள்.

சேர்க்கவல்ல 1½" F/1.1 லென்ஸ்

இந்தியாவுக்குப்
பூரண டிஸ்ட்ரிபியூட்டர்கள் :

Allied Photographics Limited

பம்பாய் ★ கல்கத்தா ★ மதராஸ்

கல்கி பொருளடக்கம்

மலர் 8
இதழ் 39

ஏப்ரல் 24

விரோதி ஆ
சித்திரை 12உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 39

என்ன சேதி?

அவர்கள் கொள்கை

மலாய் நாட்டில் பிரிட்டிஷாரின் காடி தளர்ந்து வருகிறது என்பது பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிரதம மந்திரி ஆட்லி விடுத்துள்ள அறிக்கையிலிருந்து வெளியாகிறது. மலாயா ஜனங்களுக்கு இது வரையில் ஜனநாயக ஆட்சி முறையை மறுத்துவந்த பிரிட்டிஷார் இப்போது என்ன சொல்கிறார்கள், தெரியுமா? "மலாய் நாட்டில் நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள கடமை பூர்த்தியாகும் வரையில், எங்களுடைய நிர்வாகப் பொறுப்பைக் கைவிடும் உத்தேசம் எங்களுக்கு இல்லை. காமன்வெல்த் மண்டலத்துக்கு உட்பட்டு மலாயா ஜனங்களுக்குச் சுயாட்சி அளிப்பதே எங்களுடைய கொள்கை!" என்று ஸ்ரீ ஆட்லி பார்லிமெண்டில் கூறியிருக்கிறார்.

கொடிய தண்டனை


எனினும், பிரிட்டிஷ் அதிகாரிகள் வாயளவில் அவ்வாறு கூறுவதால் மாத்திரம் மலாய் நாட்டின் நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டு விடாது. அங்கு கலகக்காரர்களின் அட்டகாசங்கள் குறைந்து வருகின்றன என்று பிரிட்டிஷ் காலனி மந்திரி கூறுகிறார். கலகக்காரர்களின் அட்டகாசங்கள் குறைந்து வருகின்றன வென்றாலும், அதிகாரிகளின் அடக்கு முறைகள் குறைந்து வருவதாகத் தோன்றவில்லை! இந்தியா, இலங்கை முதலிய தேசங்களிலிருந்து புதிதாக மலாயா செல்வோருக்குப் புதிய நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள். துப்பாக்கி வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி ஒரு பிரபல இந்தியருக்குத் தூக்குத் தண்டனை விதித்திருக்கிறார்கள். அவர் மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணை சந்தேகத்துக்கு இடமின்றி நடந்ததாகத் தெரியவில்லை. மேலும் அவர் பயங்கரவாதிகளின் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் என்பதும் ருஜுவாகவில்லை. இவ்வளவு சந்தேகாஸ்பதமான ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிக்குத் தூக்குத் தண்டனை விதிப்பது எவ்வளவு கொடுமையானது?

தங்களுடைய பாதுகாப்புக்காகக் கலகக்காரர்களுக்குப் பணம் கொடுத்ததாகக் கைது செய்யப்பட்ட செட்டியார்கள் இன்னும் விடுதலை அடையவில்லை. இந்நிலையில், மலாயா ஜனங்களுக்குச் சுயாட்சி வழங்கப் போவதாக பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் கலகக்காரரின் கொட்டங்கள் குறைந்து விட்டன என்று பிரிட்டிஷ் காலனி மந்திரியும் கூறுவதால் அந்த நாட்டில் நெருக்கடி தீர்ந்து விடாது. மலாயா இந்தியர் காங்கிரசின் கோரிக்கைக்கு இணங்க பிரிட்டிஷார் சீக்கிரமாக அடக்கு முறைகளைக் கைவிட்டு ஜனநாயக ஆட்சி முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.


குடியரசுக் கொடி


சென்ற வாரம் வரையில் பிரிட்டிஷ் டொமினியன் நாடுகளில் ஒன்றாக இருந்த அயர்லாந்தில் இப்போது குடியரசுக் கொடி பறக்கிறது. அயர்லாந்து பிரிட்டனுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாத பூரணக் குடியரசு நாடாகிவிட்டது. சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமான பிரிட்டிஷ் ஆதிக்கத்தைச் சென்ற பதினெட்டாம் தேதி அயர்லாந்து அறவே ஒழித்த வைபவம் அத் தேசத்தில் மிகுந்த ஆடம்பரத்துடன் கொண்டாடப்பட்டது இயற்கையே. தற்போது ஐரிஷ் சர்க்காரை நிர்வகிக்கும் மந்திரிகளின் மூதாதையர் பிரிட்டிஷாரால் தூக்கி விடப்பட்டனர். பிரிட்டிஷாரின் பயங்கரமான அடக்கு முறையை எதிர்த்து அரசியல் போரில் ஈடுபட்டு ஆயிரக்கணக்கான ஐரிஷ் மக்கள் பலியாயினர். எனவே, பிரிட்டிஷார் மீது ஐரிஷ்காரர்களுக்கு ஏற்பட்ட வெறுப்புதான், அவர்கள் பிரிட்டிஷ் தொடர்பை அடியோடு கத்தரித்துக் கொள்வதற்குக் காரணம் என்று கூறுவது மிகையாகாது. அப்படியிருந்தும் ஐரிஷ் குடியரசு வைபவத்தை யொட்டி பிரிட்டிஷ் மன்னரும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருப்பது காலத்துக்கேற்ப நடந்து கொள்ளும் அவர்களுடைய ராஜதந்திரத்தைக் காட்டுகிறது.

நிகழ்ச்சிச் சித்திரம்



- சாஸ்திரி


வெள்ளையருக்கு
மாத்திரம்
தனி உரிமைப்
பிரதேசம்
ஆஸ்திரேலியா
நியூஜிலாந்து


யானை! ஜாக்கிரதை!
இந்தியா
டோரி
பத்திரிகைகள்
SHASTRY

பத்து லட்சம் தமிழர் தவிப்பு

"மனிதர் வருவார்கள்; மனிதர் போவார்கள்; அவர்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்படும். ஆனால், நான் எவ்வித மாறுதலுமின்றி இப்படியே என்றென்றும் போய்க் கொண்டிருப்பேன்" என்று ஒரு நீர் ஓடை கூறுவதாக மேனாட்டுக் கவிஞர் பாடியிருக்கிறார்.

"உலகிலும் இந்தியாவிலும் எத்தனை மாறுதல்கள் ஏற்பட்டாலும் எங்களுடைய கதி மாத்திரம் எவ்வித மாறுதலுமின்றி இப்படியே இருந்து வர வேண்டுமா?" என்று திருவாங்கூர் தமிழ் மகாஜனங்கள் தவித்து வருகிறார்கள்.

பாரத நாடு பெறுதற்கரிய சுதந்திரத்தைப் பெற்றது.

சமஸ்தானங்களின் எதேச்சாதிகாரம் ஒழிந்தது.

மற்ற சமஸ்தானங்களைப் போல் திருவாங்கூரின் அரசியல் அந்தஸ்தும் மாறியது. திவான் போனார். ஜனப்பிரதிநிதிகளான மந்திரிகள் வந்தனர். பிறகு அந்த மந்திரிகள் போய் வேறு மந்திரிகள் வந்தனர்.

இப்போது திருவாங்கூரும் கொச்சியும் ஐக்கியம் அடைந்து கேரள யூனியனாக விளங்கப் போகிறது.

திருவாங்கூரில் இத்தனை மாறுதல்கள் ஏற்பட்டும், அங்கு வசிக்கும் பத்து லட்சம் தமிழர்களின் நிலைமையில் மாத்திரம் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை!

சென்ற பதினெட்டு மாத காலமாக அவர்கள் படாத பாடுபட்டு வருகிறார்கள். திருவாங்கூர் தமிழர் வசிக்கும் பிரதேசங்களில் அதிகாரிகளின் அடக்குமுறை கோர தாண்டவமாடியது. ஒருபுறம் அதிகாரிகளும் மற்றொரு புறம் தமிழரின் அரசியல் விரோதிகளும் தமிழர் மீது தங்களுடைய கை வரிசையைக் காட்டி அவர்களை ஹிம்சித்தனர்.

திருவாங்கூர் அசெம்பிளிக்கு நடந்த தேர்தலில் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் நிறுத்திய அபேட்சகர்களே, தமிழர் பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பெரும்பாலான ஸ்தானங்களைக் கைப்பற்றினார்கள்.

அவ்வாறு தமிழ் மகா ஜனங்களின் தீர்ப்பு என்னவென்பது சந்தேகமின்றித் தெரிந்தும்கூட அவர்களுக்குக் கதி மோட்சம் ஏற்படவில்லை.

இரண்டாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள தமிழர் பிரதேசங்களில் பெரும்பாலான ஸ்தானங்களைப் பெற்ற அவர்களுக்குத் திருவாங்கூர் மந்திரி சபையில் ஒரு ஸ்தானம்கூட அளிக்கப்படவில்லை!

சர்க்கார் உத்தியோகங்களில் இனி தமிழருக்கு ஒரு ஸ்தானம் கூடக் கொடுப்பதில்லை என்று திருவாங்கூர் சர்க்கார் திட சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

அவர்கள் தமிழர் காங்கிரஸ் தலைவர்களுடன் சமாதானத்தையும் நாடவில்லை.

ஐக்கிய கேரளம் ஏற்படும்போது தமிழர்கள் தமிழ் நாட்டுடன் சேர்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று திருவாங்கூர் தலைவர்கள் வாயளவில் சொல்வதற்கும் விரும்பவில்லை.

தமிழர்களின் மனதில் நம்பிக்கை ஏற்படுமாறு அவர்கள் ஒரு காரியம் கூடச் செய்ததாகத் தெரியவில்லை.

• • •

இந்த நிலையில் திருவாங்கூர் தமிழர்கள் தங்களுடைய கதி என்ன என்று ஏங்குவது இயற்கைதானே?

எனவே, சென்ற பல மாதங்களாக நடத்திய வாய்ப்போரில் வெற்றி காண முடியாத அவர்கள் வேறு வகையின்றி, தமிழர் காங்கிரசின் தலைமை ஸ்தாபனம் அமைந்துள்ள நாகர்கோவிலில் புதுவருஷப் பிறப்பன்று சத்தியாக்கிரகப் போரை ஆரம்பித்தார்கள்.

அதையொட்டி ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடந்தன. தமிழர் காங்கிரஸ் தலைவரும் மற்றும் பல பிரமுகர்களும் கைதியாயினர்.

அவர்களைக் கைது செய்வதில் திருவாங்கூர் சர்க்கார் காட்டிய சிரத்தையிலும் வேகத்திலும் பத்தில் ஒரு மடங்கு அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதில் காட்டியிருப்பார்களாயின், நிலைமை இவ்வளவுக்கு முற்றியிராது.

எனினும், நல்லவேளையாக மூன்று நாட்களுக்குப் பின் சர்தார் பட்டேலின் யோசனைக் கிணங்க திருவாங்கூர் தமிழர்கள் சத்தியாக்கிரகப் போரை நிறுத்திவிட்டார்கள்.

தங்களுடைய லட்சியம் நிறைவேறும் வரை சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து நடத்தியே தீருவோம் என்று அவர்கள் பிடிவாதம் செய்யவில்லை.

அதிலிருந்து அவர்களுடைய பெருந்தன்மையும் சமாதான நோக்கமும் வெளியாகின்றன அல்லவா?

ஐக்கிய கேரளம் ஏற்படும்போது அவர்களுடைய கோரிக்கை கவனிக்கப்படும் என்று சர்தார் பட்டேல் உறுதி கூறியிருக்கிறார்.

சத்தியாக்கிரகம் நின்றதும், அதையொட்டிக் கைது செய்யப்பட்ட தலைவர்களைத் திருவாங்கூர் சர்க்கார் தாமதமின்றி விடுதலை செய்தது திருப்திகரமான விஷயமே.

*　　　*　　　*

திருவாங்கூர் தமிழர் காங்கிரஸ் தலைவர்களில் பலர் சட்டப் பரீட்சைகளில் தேறிப் பட்டம் பெற்றவர்கள்: பத்து லட்சம் தமிழர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்கள்.

எனவே, அவர்களுடைய கோரிக்கை விளைகக் கிளர்ச்சி செய்யும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதென்று சொல்ல முடியாது.

ஐக்கிய கேரள வாதிகளோ அல்லது திருவாங்கூர்—கொச்சி ஐக்கியத்தை ஆதரிப்பவர்களோ இதுவரையில் திருவாங்கூர் தமிழர்களைப் பற்றி வாயையே திறக்கவில்லை!

ஆனால் தங்களுடைய ஐக்கியத்தைப் பற்றி மாத்திரம் திருவாங்கூர் மந்திரிகள் உள்பட எல்லோரும் இடைவிடாது பிரசாரம்செய்து வருகின்றனர்.

அப்படி யிருக்க, திருவாங்கூர் தமிழர்கள் தாங்களும் தமிழ் நாட்டுடனும் தமிழர்களுடனும் ஐக்கியம் அடைய வேண்டும் என்று கூறுவதில் தவறு என்ன?

தவிர, மலையாள மாகாணத்தில் இருப்பதால் தங்களுக்கு எவ்வித மதிப்பும் உரிமையும் வசதியும் இராது என்பதை அவர்கள் நிதர்சனமாக அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

திருவாங்கூரிலுள்ள தமிழர் பிரதேசங்களைத் தமிழ் நாட்டுடன் இணைப்பது இந்திய சர்க்காரின் அதிகாரத்தில் இருக்கிறது என்பது உண்மைதான்.

எனினும், அதற்கு முட்டுக்கட்டை போடாமல் இருப்பதும், அவ்விஷயமாக முயற்சி செய்யும் தமிழர்களை ஹிம்சிக்காமல் இருப்பதும், அவர்களுக்கு அரசியல் உரிமைகளை மறுக்காமல் இருப்பதும் திருவாங்கூர் சர்க்காரைப் பொறுத்த விஷயம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

திருவாங்கூர் தமிழர்களின் கோரிக்கைக்குத் தமிழ் நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவு இருந்துவருகிறது.

தமிழ் நாட்டுத் தலைவர்களும் அவ்விஷயத்தில் அக்கரை கொள்ள வேண்டும். அது இந்திய சர்க்காரையும் திருவாங்கூர் சர்க்காரையும் பொறுத்தது என்று நினைத்துப் பேசாமல் இருக்கக் கூடாது.

அதற்கு மாறாக, திருவாங்கூர் தமிழர்கள் விஷயத்தில் தமிழ் நாட்டுத் தலைவர்களுக்குத்தான் அதிக கவலையும் சிரத்தையும் இருக்க வேண்டும்.

இந்திய சர்க்கார் தீர்க்க வேண்டிய பிரச்னைகள் எத்தனையோ இருப்பதால், அவர்களுக்கு மேற்படி விஷயம் ஆயிரத்தோடு ஆயிரத்து ஒன்றாகத் தோன்றலாம்.

ஆனால், தமிழ்நாடு சமாளிக்க வேண்டிய ஒரு சில முக்கிய பிரச்னைகளுள் திருவாங்கூர் தமிழர் பிரச்னையும் ஒன்றாக இருக்கவேண்டும்.

அதன் சம்பந்தமான முழுப் பொறுப்பையும் தமிழ்நாட்டுத் தலைவர்களே ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு நீதி கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

இலங்கை, மலாய் நாடு முதலிய இடங்களில் அல்லலுறும் இந்தியர்கள் விஷயத்தில் இந்திய சர்க்காரும் சென்னை சர்க்காரும் சிரத்தை கொள்ளவில்லையா?

அப்படியிருக்க, தமிழ் நாட்டின் எல்லையை அடுத்துள்ள பிரதேசங்களில் நியாயமான உரிமைகளின்றி கஷ்டப்பட்டு வரும் லட்சக்கணக்கான தமிழர்களுக்குக் கதிமோட்சம் ஏற்படும்படி செய்ய வேண்டிய முதல் பொறுப்பு சென்னை சர்க்காரைக் காட்டிலும், தமிழ்நாட்டுத் தலைவர்களைக் காட்டிலும் வேறு யாருக்கு உண்டு?

திருவாரூர்த் திருவிழா

✶

என்னுடைய சிறு பிராயத்தில் "ஊர் வர்த்தி" என்னும் வாய் மொழிப் பத்திரிகையில் ஆண்டுதோறும் ஒரு முக்கியமான செய்தி வெளியாகிறதுண்டு.

"திருவாரூர்த் தேர் கிளம்பிவிட்டதாம்!" என்று, ஒரு பெரிய மகா யுத்தம் ஆரம்பித்து விட்டது போன்ற முக்கியத்துடன், ஒரு செய்தி வெளியாகும்.

பிறகு சிலகால் வரையில், "திருவாரூர்த் தேர் தெற்கு வீதி முனையில் நிற்கிறதாம்!" "கிழக்கு வீதி முனைக்கு வந்துவிட்டதாம்!" "திருவாரூர்த் தேரின் அச்சு முறிந்துவிட்டதாம்! மறுபடி கிளம்ப ஒரு மாதம் ஆகுமாம்!" என்பவை போன்ற செய்திகள் வந்து கொண்டிருக்கும்.

கடைசியாக ஒரு நாள், ஒரு மகாயுத்தமே முடிந்துவிட்டது போன்ற முக்கிய பாவத்துடன், "திருவாரூர்த் தேர் நிலைக்கு வந்துவிட்டதாம்!" என்று சொல்லுவார்கள்.

முன்னொருதடவை திருவாரூருக்கு நான் போயிருந்தேன். பிரம்மாண்டமான கோயிலையும் குளத்தையும் விஸ்தாரமான வீதிகளையும் பார்த்துவிட்டு, "ஆகா! இப்படிப்பட்ட மகத்தான திருப்பணிகளைச் சாதித்த நம்முடைய முன்னோர்கள் எப்பேர்ப்பட்ட மகாபுருஷர்களாயிருந்திருக்க வேண்டும்?" என்று எண்ணி வியந்து விட்டுத் திரும்பினேன்.

மறுபடியும் சென்ற வாரத்தில் திருவாரூருக்குப் போகும் பேறு தமிழ்த்தாயின் அருளினாலே கிடைத்தது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் ஆண்டுதோறும் நடத்தும் தமிழ்த் திருவிழா இந்த மாதம் 16, 17ந் தேதிகளில் திருவாரூரில் சிறப்பாக நடைபெற்ற விவரங்களை நேயர்கள் பலர் பத்திரிகையில் படித்திருப்பார்கள். 'சிறப்பாக நடந்தது' என்று சொல்வது போதாதுதான். 'அபாரமாக நடந்தது' 'பிரமாதமாக நடந்தது' 'இம்மாதிரி முன்னாலும் நடந்ததில்லை' 'பின்னாலும் நடந்ததில்லை' என்றெல்லாம் சொன்ன போதிலும் போதாது என்று தோன்றும். அப்படிப்பட்ட வைபவமாகத் தமிழ்த் தாயின் திருவிழா நடந்தேறியது.

*   *   *

திருவிழாவுக்குச் சிறப்பு அளித்த அம்சங்களில் மிக முக்கியமானது டாக்டர் கே. என். கிருஷ்ணன் விஜயம் செய்து விஞ்ஞானப் பகுதி மகாநாட்டுக்குத் தலைமை வகித்ததாகும். தற்சமயம் இந்தியாவில் உள்ள பிரபல விஞ்ஞான நிபுணர்களில் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் ஒருவர். அதோடு அவர் தலைசிறந்த தமிழ் அன்பர். அவருக்கு 'ஸர்' முதலிய சர்க்கார் கௌரவப் பட்டங்களும் கல்வித்துறைப் பட்டங்களும் பல உண்டு. ஆனால் அவற்றைக் காட்டிலும், "கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்" என்னும் விருதை முழங்கிக் கொள்ளுவதிலேதான் தாம் பெருமிதம் கொள்ளுவதாக டாக்டர் கிருஷ்ணன் சொன்னார். விஞ்ஞான விஷயங்களை நன்றாகத் தமிழிலே சொல்லலாம் என்று அத்தாட்சி கூறினார். பல உதாரணங்களும் எடுத்துச் சொன்னார். சென்னை மாகாணம் விஞ்ஞானத்துக்கு அளித்த இரு ஒப்பிலா மணிகள் என்பதாக ஸர் ஸி. வி. ராமனையும் காலஞ்சென்ற கணித மேதாவி ஸ்ரீ ராமானுஜத்தையும் குறிப்பிட்டார். ஸர் ஸி. வி. ராமனுடைய ஆராய்ச்சிகளைப் பற்றிச் சொல்லியபோது "அணுவுக்குள்ளே அவர் கிழக்கு மேற்குப் பார்த்தார்" என்பதாகச் சொல்லியது, ரஸிகமணி டி. கே. ஸி. யிடமிருந்து 'சபாஷ்' பட்டத்தைப் பெற்றது. "மக்களின் நாவிலே வழங்குவதுதான் உண்மையான தமிழ்!" என்று ரஸிகமணி கூறுவது வழக்கம். "உழக்கிலே கிழக்கு மேற்குப் பார்த்தான்" என்னும் தமிழ் வழக்கை டாக்டர் கிருஷ்ணன் மேற்கண்ட இடத்தில் வழங்கியது அவ்வளவு ரஸமாயிருந்தது. அதோடு டாக்டர் கிருஷ்ணன் நல்ல தமிழ் அறிந்தவர் என்பதற்கும் அத்தாட்சியாயிருந்தது.

விஞ்ஞான மகாநாட்டில் இன்னொரு முக்கிய அம்சம் ஸ்ரீமதி ராஜேசுவரி அம்மையார் அணு சக்தியைப் பற்றிப் பேசியது. சைவ சித்தாந்தக் கூட்டங்களிலே ஸ்ரீமதி ராஜேசுவரி அம்மாள் அடிக்கடி பேசுவதுண்டு; சபையோரும் தூங்கி வழிந்து கொண்டு கேட்பதுண்டு. ஆனால் திருவாரூரில் அவர்கள் பேசிய அணு சக்தி விஷயம் சபையினருக்கு வந்த தூக்கத்தையும் துரத்தி விட்டது. விஞ்ஞான விஷயத்தைப் பற்றியே அறியாதவர்களும் தெரிந்து தெளியும்படியாக விளக்கமாகவும் ரஸமாகவும் நகைச்சுவையுடனும் பேசினார்கள். "அணுவுக்குள்ளே இரண்டு கிருஷ்ணர்கள்; வெளியிலே இரண்டு கோபிகள். கோபிகள் உள்ளே போகிறார்கள்; ஆனால் கிருஷ்ணர்கள் அவர்களைப் பிடித்துத் தள்ளி விடுகிறார்கள்..." என்று இந்த ரீதியில் உதாரணங் கொடுத்துப் பேசினார்கள். ஒரு நொடியில் லட்சக் கணக்கான மக்களை அழிக்கக்கூடிய அணுகுண்டு சக்தியைப் பற்றி ஏதோ கிருஷ்ண பகவானும் கோபிகளும் ராஸக்கிரீடை நடத்துகிற காரியத்தைப் போலப் பேசித் தெளிவு படுத்திச் சபையினர் அறிந்து ரஸிக்கும்படி செய்தார்கள். விஞ்ஞான விஷயங்களைத் தமிழ்ப் படுத்திச் சொல்லும் துறையில் ஸ்ரீமதி ராஜேசுவரி அம்மையார் அருமையான தொண்டு செய்யக்கூடியவர்கள் என்று தெரியவந்தது.

தமிழ் வளர்ச்சிக்குத் தற்சமயம் செய்ய வேண்டியிருக்கும் முக்கியமான திருப்பணி விஞ்ஞான ஆராய்ச்சி விஷயங்களைத் தமிழ்ப் படுத்தும் தொண்டேயாகும். திருவாரூர்த் தமிழ்த் திருவிழா இந்தத் தொண்டை மிக நல்ல முறையில் ஆரம்பித்து வைத்தது.

* * *

திருவிழாவை யொட்டி இன்னும் பொருளாதாரத் துறை மகாநாடும் இலக்கியத்துறை மகாநாடும் நடந்தேறின. பொருளாதாரத் துறையின் தலைவர் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் பேச்சுவன்மை படைத்தவர்; நல்ல தமிழ்ப் பயிற்சி பெற்றவர்; பொருளாதாரமோ அவருடைய சொந்த விஷயம். பிறகு, கேட்பானேன்? அழகான உபயோகமான சொற்பொழிவு ஒன்று கிடைத்தது. மக்கள் தமது சொந்த அரசாங்கத்துக்குக் கடன் கொடுத்து உதவ வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசினார். பொருளாதார விஷயம் எவ்வளவு சிக்கலானது என்பதைக் குறித்த ஒரு கதையும் சொன்னார். பதினைந்து வருஷத்துக்கு முன்பு இந்திய சட்டசபையில் ஓர் அங்கத்தினர் பொருளாதார சாஸ்திரம் எவ்வளவு கடினமானது என்பதைப் பின்வருமாறு எடுத்துச் சொன்னாராம்: "உலகத்தில் மூன்றே மூன்று பேர் பொருளாதாரப் பிரச்னைகளை நன்கு அறிந்தவர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் முதலாவது உலக மகா யுத்தத்தில் மாண்டு போனார். இன்னொருவர் தற்கொலை செய்து கொண்டு இறந்தார். மூன்றாவது மனிதர் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார்!" — இந்த முகவுரையுடன் ஆரம்பித்து மேற்படி அங்கத்தினர் பல மணி நேரம் பொருளாதாரப் பிரச்னைகளைப் பற்றித் தொடர்ந்து பேசினாராம். பிறகு சர்க்கார் வரவு செலவு அங்கத்தினர் பதில் சொல்வதற்கு எழுந்தார். அவர் கூறியது என்னவெனில்: "பொருளாதாரப் பிரச்னைகளை நன்கு அறிந்தவர்களில் ஒருவர் யுத்தத்தில் மாண்டுபோனது சரிதான்; இன்னொருவர் தற்கொலை செய்துகொண்டதும் சரிதான். ஆனால் மூன்றாவது மனிதர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்துக்கொண்டு இந்தச் சட்டசபைக்கு வந்து விட்டதாகக் காண்கிறது!"

டாக்டர் ஆர். கே. ஷண்முகம் மேற்படி கதையைச் சொல்லிச் சபையினரைக் குலுங்கச் சிரிக்க வைத்தார்.

சென்னை சர்க்காரின் பொருளாதார நிபுணர் டாக்டர் நடராஜன் "சென்னை மாகாணத்துக்கு ஐந்நூறு கோடி ரூபாய்த் திட்டம்" என்னும் பொருள் பற்றிப் பேசினார். வருகிற பத்து வருஷத்தில் ஐந்நூறு கோடி ரூபாயை எந்தெந்த இனங்களில் செலவிட்டுச் சென்னையின் பொருள் வளத்தைப் பெருக்கலாம் என்று கூறினார். சர்க்கார் நிபுணர்களின் பாரம்பரை வழக்கத்தை யொட்டி டாக்டர் நடராஜனுடைய 'ஐந்நூறு கோடி ரூபாய்த் திட்டம்' ஏட்டுச் சுரைக்காய்த் திட்டமாக இருந்தது! முக்கியமாக, ஐந்நூறு கோடி ரூபாய் மூலதனத்தை எப்படித் திரட்டுவது என்பதற்கு அவர் திட்டம் ஒன்றும் சொல்லவில்லை. எனினும், டாக்டர் நடராஜன் பேசிய தமிழ் மிக அழகாயிருந்தது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். பொருள் வளர்க்கும் திட்டம் எப்படியாவது போகட்டும்; தமிழ் வளர்க்கும் திட்டந்தானே திருவாரூரில் நமக்கு முக்கியமாயிருந்தது?

[அடுத்த இதழில் முடியும்]

மதராஸ் டெக்னலஜி இன்ஸ்டிட்யூட்



நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

5-6-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

கும்பகோணம், "பாலஸ் கார்ட"னில் விசேஷமாக அமைக்கப்படும் விஸ்தாரமான பந்தலில்

பிரதம மந்திரி கனம் **ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா** அவர்களது அன்பார்ந்த முன்னிலையிலும் மேலான ஆதரவிலும் நடைபெறும்

டிக்கட்டுகள்: ரூ. 250, 100, 25, 10, & ரூ. 5

கே. எஸ். சேஷாத்ரி,
கௌரவ காரியதரிசி



Sandal Soap.

rapturously alluring
& 'MYSTIC'
It will delight you

GANGA WORKS
ADYAR, INDIA

கங்கா ஒர்க்ஸ்
அடையாறு மதராஸ்-20

●

"காவோ சந்தன சோப் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப் பட்டிருக்கிறது. இது எல்லா வகையிலும் இங்கிலாந்தில் தயாராகும் சிறந்த வாசனை சோப்புகளுக்கு ஈடாக விளங்கு கிறது. நாங்கள் இதுவரை ரசித் திருக்கும் சந்தன வாசனைகளுக் குள் சிறந்தவைகளில் காவோ சோப்பின் இனிய சந்தன வாசனையும் ஒன்று."

—"சோப், பெர்பியூமரி & காஸ்மெடிக் ரெவியூ", லண்டன்

●

அட்டைப்பட விளக்கம்

சமூக ஊழியர் இருவர்

காந்தியம் என்னும் புது தர்மம் முப்பது வருஷத்துக்கு முன்னால் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கியபோது, முதன் முதலில் செட்டிமார் நாட்டில் அந்தத் தர்மத்துக்கு விசேஷ வரவேற்பு ஏற்பட்டது. செட்டிமார் நாட்டைச் சேர்ந்த கிராமந்தோறும் தூய கதர் ஆடை தரித்த இளைஞர்கள் காணப்படலாயினர். அவர்களுடைய ஊக்கம் நாட்டின் முன்னேற்றத்துக்குரிய பல துறைகளையும் நாடியது. தமிழார்வம் பொங்கித் ததும்பியது. சமூக சீர்திருத்தத்தில் பலர் ஆவேசம் கொண்டார்கள். விவாக முறைகளில் மாறுதல்கள் செய்தார்கள். விதவை மணத்தைத் தீவிரமாக ஆதரித்தார்கள். பேச்சுடன் நில்லாமல் மறுமணங்கள் செய்து வைத்தார்கள். பெண் குலத்தின் உயர்வைக் கருதிப் பல முயற்சிகள் தொடங்கினார்கள். ஒவ்வொரு ஊரிலும் ஆண் குழந்தைகளோடு பெண் குழந்தைகளும் படிப்பதற்குப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார்கள்.— இந்த முயற்சிகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்தது காந்தி மகான் தலைமை வகித்து நடத்திய தேசீய இயக்கம்.

செட்டிநாட்டில் காந்தீயமும் சீர்திருத்த ஆவேசமும் குடிகொண்டு விளங்கிய ஊர்களில் ஒன்று அமராவதிபுதூர். அமராவதிபுதூரைச் சேர்ந்த மூன்று செட்டிநாட்டு அன்பர்களின் பெயர்கள் அந்த நாளில் வெளியூர்களில் பிரபலமாயிருந்தன. அவை ஸ்ரீ பிச்சப்பா சுப்பிரமணியம், ஸ்ரீ ராய சொக்கலிங்கம், ஸ்ரீ சொ. முருகப்பா என்னும் பெயர்கள்.

ஸ்ரீ சொ. முருகப்பா அவர்களின் முதல் காதல் இலக்கியக் காதலாகும். அவர் ஆரம்பித்து நடத்திய "குமரன்" என்னும் பத்திரிகை இலக்கிய ரஸிகர்கள் பலருடைய கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது. "குமரன்" பத்திரிகையின் மூலம் ஸ்ரீ சொ. முருகப்பா தமிழ்நாட்டுக்கு ஒரு மகத்தான உதவி புரிந்தார். தமிழர்களுக்கு ஒரு தமிழ்க் கவிஞரைக் கண்டு பிடித்துக் கொடுத்தார்.

"குமரன்" பத்திரிகையில் இருபத்தைந்து வருஷத்துக்கு முன்பு ஒரு பாடல் பிரசுரமாயிருந்தது. குழந்தைகள் கும்மியடித்துக் கொண்டு பாடக்கூடிய பாடல். அந்தப் பாடலில் பின் வரும் இரண்டு வரிகளும் இருந்தன :—

"பாடிய வாய் தேனூறும்
பாரதியின் பாடல்
பண் அமையப் பாடுதற்குப்
பாணிகொட்டும் கையே!"

இந்தப் பாடலைப் பலர் படித்து ரசித்தார்கள். தமிழ் நாட்டின் தலைசிறந்த கவிதாரஸிகரான திரு டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும் மேற்கூறிய பாடலைப் படிக்கும்படி நேரிட்டது. உடனே, "ஆகா! இதோ ஒரு தமிழ்க் கவிஞர் இருக்கிறாரே!' என்று ரஸிகமணி டி. கே. சி. உள்ளம் பூரித்தார். உடனே அந்தக் கவிஞர் வேறு கவிகள் பாடியிருக்கிறாரா என்று புலன் விசாரித்தார். இன்னும் பல கவிகள் அவர் பாடியிருக்கிறார் என்று தெரிய வந்தது.

"ஒரு உண்மையான கவிதை கிடைத்து விட்டால் அதற்காக ஒரு விழாக் கொண்டாட வேண்டும்!" என்ற கொள்கை உடையவர் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள். ஒரு கவிஞரே கிடைத்துவிட்டால் ரஸிகமணியின் ஆனந்தத்துக்கு எல்லை இருக்குமா?

ஊர் ஊராகத் தாம் செல்லும் இடங்களில் எல்லாம், பேசும் இடங்களில் எல்லாம், கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளையைப் பற்றி ரஸிகமணி எடுத்துச் சொன்னார்; அவருடைய பாடல்களைப் படித்து அவற்றின் அழகை விளக்கிக் காட்டினார்.

"குமரன்" ஆசிரியர் ஏதோ சில பாடல்களைத் தமது பத்திரிகையில் பிரசுரித்து விட்டுச் சும்மா இருந்துவிடவில்லை. அச்சமயம் ஸ்ரீ முருகப்பாவும் அவருடைய சகாக்கள் சிலரும் பலியிடுவதை நிறுத்தும் ஜீவகாருண்யப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்கள். கருணாமூர்த்தியான புத்த பகவானுடைய சரிதம் எளிய தமிழ்ப் பாடலில் அமைந்தால் ஜீவகாருண்யப் பிரசாரத்துக்கு உதவியாயிருக்கும் என்று ஸ்ரீ முருகப்பா எண்ணினார். ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளைக்கு எழுதினார். அவருடைய விருப்பத்தின்படி "The Light of Asia" என்னும் நூலையும் வாங்கி அனுப்பினார். தமிழுக்கு ஓர் அற்புத காவிய மலர் கிடைத்தது. "கருணைக் கடல்" என்னும் நூல் வெளிவந்தது. முதலில் அந்நூலை வெளியிட்டவர் ஸ்ரீ முருகப்பா அவர்கள்தான்.

அந்த நூலைப் பன்னிரண்டு வருஷத்துக்கு முன்பு ஒருநாள் ரஸிகமணி டி. கே. சி. படித்துக் காட்டிக் கொண்டிருந்தபோது ராஜாஜி அவர்கள் கேட்கும்படி நேரிட்டது. டி. கே. சி. படித்து முடித்துவிட்டுச் சென்ற பிறகு ராஜாஜி அவர்கள் கூறியதாவது :—"டி. கே. சி. யைப் போல் கவிதையில் ஆசை கொண்ட இன்னொருவரை நான் பார்த்ததில்லை. டி. கே. சி. யைப் போல் கவிதை அழகு இதுதான் என்பதைத் தாமும் உணர்ந்து மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லக் கூடிய இன்னொருவரையும் நான் கண்ட

இல்லை. தமிழ், இங்கிலீஷ் இரண்டு பாஷையிலுந்தான் சொல்லுகிறேன்."

இவ்வாறு, நம் காலத்திய இரண்டு மாபெருந் தமிழர்களைச் சேர்த்துச் சிநேகம் செய்துவைத்த பெருமை ஸ்ரீ சொ. முருகப்பா அவர்களுக்குச் சேரும் என்று சொல்லலாம். ஸ்ரீ சொ. முருகப்பா வெளியிட்ட "கருணைக் கடல்" என்னும் ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிதைப் புத்தகம் ராஜாஜி—டி. கே. சி. யின் நட்புக்கு அடிப்படை ஆயிற்று.

• • •

ஸ்ரீ சொ. முருகப்பாவின் இலக்கியக் காதல் கூட மங்கும்படியாக அவருடைய உள்ளத்தில் சீர்திருத்த ஆவேசம் பொங்கி எழுந்தது. சமூக சேவையில் பரிபூரணமாக ஈடுபட்டார். ஸ்ரீமதி மரகதவல்லி அவர்களைச் சீர்திருத்த முறையில் கலியாணம் செய்து கொண்டார். இருவரும் சமூகப் பணியில் ஈடுபட்டார்கள். பல துறைகளில் தொண்டு செய்த பிறகு குழந்தைக் குலத்துக்குத் தொண்டு செய்யத் தொடங்கினார்கள். அமராவதி புதூருக்கு அருகில் எழுபத்தைந்து ஏக்கர் நிலம் சம்பாதித்து "மகளிர் இல்லம்" என்னும் ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். மாண்டிஸோரி அம்மையாரின் முறைப்படி குழந்தைகளுடைய அறிவுப் பயிற்சியை ஆனந்தமயமான பயிற்சியாக நடத்துவது இந்த ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கம். மூன்று வயதிலிருந்து குழந்தைகள் "மகளிர் இல்ல"த்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். குழந்தைகளைப் படிப்பிக்கும் பொறுப்பு, பராமரிக்கும் பொறுப்பு எல்லாம் இல்லத்தின் நிர்வாகிகளைச் சேர்ந்தது.

'நிர்வாகிகள்' என்றால் ஸ்ரீ சொ. முருகப்பாவும் ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாளுந்தான். தற்சமயம் மகளிர் இல்லத்தில் தங்கி யிருந்து படிக்கும் குழந்தைகள் எழுபத்தைந்து பேர். இவ்வளவு பேருக்கும் தாயும் தகப்பனுமாக ஸ்ரீ முருகப்பா தம்பதிகள் விளங்குகிறார்கள். சொந்தத் தாய் - தகப்பன்மாரிடம் அன்புள்ள குழந்தைகளும் உண்டு; பயம் உள்ள குழந்தைகளும் உண்டு. ஆனால் முருகப்பா - மரகதவல்லி தம்பதிகளிடம் பயமுள்ள குழந்தைகள் மகளிர் இல்லத்தில் இல்லை. அந்த இருவரையும் பார்த்தால் குழந்தைகளுக்கு ஒரே ஆனந்தந்தான். அவர்களுடைய கையைப் பிடித்துக் கொண்டு குழந்தைகள் அவர்களுடைய தோள்மேல் ஏறி உட்காருவார்கள்; அப்புறம் தலைமேலும் ஏறி விடுவார்கள். இதனால் குழந்தைகளின் படிப்புக்கு ஏதாவது குறை உண்டோ என்று கேட்டால், நல்லது,—வேறு பக்கத்தில் வெளியாகியிருக்கும் ஆண்டு விழா வரலாற்றைப் படித்துத் தெரிந்து கொள்க.

தாய்நாட்டுக்கும் சமூகத்துக்கும் மிகச் சிறந்த சேவை புரிந்துவரும் ஊழியர்கள் இருவருடைய படங்களை இந்த இதழின் அட்டையில் மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம். ஸ்ரீ சொ. முருகப்பாவும் ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாளும் நீடூழி வாழ்ந்து நிரந்தரமாகக் குழந்தைக் குலத்துக்குத் தொண்டு புரிந்துவர வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

★ ★ ★ உதவி நாடகம் ★ ★ ★

சென்னை நகர வாசிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒளவையார் நாடகத்தை இம்மாதம் 19-ந் தேதி முதல் ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்கள் சென்னை, ஒற்றைவாடைத் தியேட்டரில் நடத்திவருகிறார்கள்.

25-ந் தேதி பிரதமர் கனம் குமாரசாமி ராஜா அவர்களின் தலைமையில் நடைபெறப்போகும் இந்த நாடகத்தில் கிடைக்கும் தொகை 'புத்து நோய் நிவாரண நிதி'க்குக் கொடுக்கப்படும்.

புத்து நோய் (Cancer) மிகக் கொடிய வியாதி. இந்த நோய் கண்ட பத்துப் பேரில் ஒன்பது பேர் மரணமடைகிறார்கள். இத்தகைய நோய்க்குத் தக்க காலத்தில் சிகிச்சை ஆரம்பித்துச் செய்தால் நோய் குணமாகும்.

புத்து நோய் நிவாரணத்துக்காகச் சென்னை மாதர் சங்கத்தார் ஒரு நிதி ஆரம்பித்திருக்கிறார்கள். சென்னைக் கவர்னரின் மனைவியான பவநகர் மகாராணியின் தலைமையில் மேற்படி முயற்சி தொடங்கப்பட்டிருக்கிறது. 25-ந்தேதி ஒளவையார் நாடகத்துக்குத் திரளாகச் சென்று ஒரு சிறந்த ஜீவகாருண்யத் தொண்டுக்கு உதவி செய்யும்படி சென்னை வாசிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.



பதினோராம் அத்தியாயம்

பட்டாபியின் பதவி மோகம்

சூரியாவைப் பார்த்து ஒரு நிமிஷம் திகைத்துப் போய்ப் பேசாமல் நின்ற லலிதா மறுநிமிஷம் ஒருவாறு சமாளித்துக் கொண்டு முகத்தில் மலர்ச்சியையும் வருவித்துக் கொண்டாள்.

"சூரியாவா! இது என்ன? சொல்லாமல் திடீரென்று வந்து விட்டாய்?" என்று கேட்டுவிட்டுப் பட்டாபிராமனைத் திரும்பிப் பார்த்து, "பார்த்தீர்களா? இந்த மாதிரியெல்லாம் விளையாட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா? சூரியாவாயிருந்ததினால் போயிற்று! நீங்கள் என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியதை வேறு யாராவது பார்த்திருந்தால் நிஜம் என்றல்லவா நினைத்துக் கொள்வார்கள்?" என்றாள்.

பட்டாபிராமன் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "வா, அப்பா! நல்ல சமயம் பார்த்துத்தான் வந்தாய்! தாம்பத்ய கலக நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது!" என்றான்.

சூரியாவுக்குத் தான் கண்ட காட்சியை உண்மை என்று நம்புவதா, நாடகம் என்று நினைப்பதா என ஒரு கண நேரம் திகைப்பு உண்டாயிற்று. எப்படியாவது இருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டு, "நாடகத்தைப் பார்க்க நான் தனியாக வரவில்லை! அம்மாவையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்!" என்றான்.

இதைக் கேட்டவுடன் பட்டாபிராமன், லலிதா இருவருடைய முகங்களும் சுருங்கின. பட்டாபிராமன் மாடிக்குப் போகலாமா என்று அண்ணாந்து பார்த்தான். அங்கே சீதா எதையோ பறி கொடுத்தது போன்ற முகபாவத்துடன் நிற்பதைக் கண்டதும் மேலும் கோபமடைந்து தன்னுடைய ஆபீஸ் அறைக்குள் சென்று படாரென்று கதவைச் சாத்தினான்.

லலிதா சூரியாவை நெருங்கி வந்து "அண்ணா! இவருக்கு என் மேல் நிஜமாகக் கோபம். நீ கொஞ்சம் அவருடன் நல்ல வார்த்தையாகப் பேசிச் சமாதானப் படுத்து!" என்றாள்.

அந்தச் சமயம் சரஸ்வதி அம்மாள் மூட்டை முடிச்சுகளுடனும் ஊறுகாய்

ஜாடியுடனும் உள்ளே வரவே, "வா! அம்மா!" என்று சொல்லிக்கொண்டு அவளை வரவேற்கப் போனான்.

சூரியா அண்ணாந்து பார்த்தான். அங்கே ஒரு நிமிஷத்துக்கு முன்னால் நின்று கொண்டிருந்த சீதா அறைக்குள் போய் விட்டதை அறிந்துகொண்டான். பட்டாபிராமனைப் பார்ப்பதற்கு ஆபீஸ் அறைக்குச் சென்றான்.

* * *

"சூரியா! உன்னிடம் வேஷம் போட எனக்கு விருப்பம் இல்லை. உன் தங்கை அம்மாதிரி பொய் நடிப்பு நடிக்க வேண்டும் என்கிறாள். அது என்னால் முடியாத காரியம். உண்மையைச் சொல்லி விடுகிறேன். நீ உள்ளே நுழைந்து வந்தபோது நான் லலிதாவைக் கழுத்தைப் பிடித்து நிஜமாகவே தள்ளிக் கொண்டிருந்தேன். அதற்குக் காரணம் உன் அத்தங்கா சீதாதான். அந்தப் புண்ணியவதியை நீ தயவு பண்ணி இங்கிருந்து அழைத்துக் கொண்டு போய்விடு. அவள் இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து உன் தங்கையின் குணமே மாறிப் போய்விட்டது. அவளுடைய நச்சையும் ஆத்திரத்தையும் ஆங்காரத்தையும் என்னால் பொறுக்கவே முடியவில்லை. தயவு பண்ணி உன் அத்தங்காளை அழைத்துக்கொண்டு போய்த் தொலை!" என்று மூச்சுவிடாமல் படபட வெனப் பொறிந்தான் பட்டாபிராமன்.

"ஆகட்டும், ஸார்! உங்கள் இஷ்டப்படியே செய்கிறேன். நீங்களும் லலிதாவும் இந்த நிலைமைக்கு வருவீர்கள் என்று நான் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் நான் என்பதை நினைத்தால் மிகவும் வருத்தமாயிருக்கிறது!" என்றான் சூரியா.

"நீ என்ன செய்வாய், சூரியா! உன் பேரில் என்ன தப்பு? ஸ்திரீகளுடைய சுபாவம் இவ்வளவு மோசமாயிருக்கும் என்று உனக்கு எப்படித் தெரியும்? இத்தனை நாளாகக் கிரகஸ்தாசிரமம் நடத்தும் எனக்கே தெரியவில்லையே? இந்த முட்டாள்தனத்தைக் கேள்! உன் அத்தங்கா சீதாவை இங்கே அழைத்து வர வேண்டாம் என்று நான் எவ்வளவோ முட்டிக் கொண்டேன். இவள் கேட்கவில்லை; பிடிவாதமாக அழைத்துக் கொண்டு வந்தாள். 'அத்தங்கா' 'அத்தங்கா' என்று பரிந்து பிராணனை விட்டு விடுகிறவளைப் போலப் பேசினாள். இப்போது சீதாவைக் கண்டாலே இவளுக்குப் பிடிக்கவில்லை. சீதா நாகரிகமாக நாலு பேருடன் பேசுவதையும் பழகுவதையும் கண்டால் இவளுக்கு அசூயையாயிருக்கிறது. அப்படியெல்லாம் இவளை இருக்க வேண்டாமென்று யார் தடுத்தார்கள்? நானோ இந்த 'ரெச்சட்' எலெக்ஷனில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறேன். வேலை விழி பிதுங்குகிறது. இன்னும் இரண்டு வாரந்தான் பாக்கியிருக்கிறது வோட்டுப் போடும் தேதி. பலமாக வேலை செய்யாவிட்டால் இத்தனை நாள் பட்ட கஷ்டமும் செலவழித்த பணமும் வீணாய்ப் போய்விடும். இந்த நெருக்கடியில் நான் எலெக்ஷன் வேலையைக் கவனிப்பதா, இந்தப் பெண் பிள்ளைகளின் சண்டையைத் தீர்த்துக் கொண்டிருப்பதா? நல்ல வேளையாக, மகாராஜன், நீ வந்துவிட்டாய்! சீதாவை அழைத்துக் கொண்டு போய்விடு! நான் நிம்மதியாக என் வேலையைப் பார்க்கிறேன்!" என்று பட்டாபிராமன் பேசி நிறுத்தியபோது பெரும் மழை பெய்து ஓய்ந்தது போலிருந்தது.

"பட்டாபி ஸார்! இந்த எலெக்ஷன் தொல்லையில் நீங்கள் அகப்பட்டுக் கொள்ளாமலிருந்திருக்கலாம்..." என்று சூரியா பேசத் தொடங்குவதற்குள்ளே பட்டாபிராமன் மறுபடியும் குறுக்கிட்டான்.

"நீ இப்படித்தான் சொல்லுவாயென்று எனக்குத் தெரியும். நீ சர்வசங்க பரித்யாகி; நித்தியப் பிரம்மச்சாரி. உன்னைப் போலவே எல்லாரும் உலகத்தை வெறுத்துவிட்டு இருக்க முடியுமா! எனக்கு இந்த உலகத்திலே இன்னும் சில காரியங்கள் இருக்கின்றன. எனக்குச் சில வாழ்க்கை இலட்சியங்கள் இருக்கின்றன. இந்தப் பட்டணத்தில் கொஞ்சம் பொது ஊழியம் செய்ய வேண்டும், நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று ஆசையிருக்கிறது. எனக்குப் பணங்காசில் பற்றுக் கிடையாது. ஆனால் புகழ் என்பது ஒன்று இருந்து தொலைகிறதல்லவா? புகழை விரும்பாமல் யார் இருக்க முடியும்? தன்னோடொத்த

வர்கள், தன்னுடைய ஊர் மனிதர்கள், தன்னுடைய தேசத்தவர்கள் — இவர்களிடம் புகழ் அடைய ஒருவன் விரும்பவில்லை யென்று சொன்னால் அதை நான் நம்பமுடியாது. அப்படிச் சொல்கிறவனை நான் சுத்த 'ஹம்பக்' என்றுதான் சொல்வேன். இந்த தேவ பட்டணத்தில் என் தகப்பனார் எவ்வளவோ செல்வாக்குடன் இருந்தார். அவர் காலம் ஆகிவிட்டது. 'யானைக்குப் பிறந்தது பூனையாயிற்று' என்று பெயர் வாங்க எனக்கு இஷ்டமில்லை. நாலுபேருக்கு மத்தியில் நானும் ஒரு மனுஷன் என்று பெயர் வாங்காவிட்டால் இந்த வாழ்க்கையினால்தான் என்ன பிரயோஜனம்? மேலும், இந்த ஊர் 'பார்ட்டி பாலிடிக்ஸ்' விஷயமும் உனக்குத் தெரியாது. பழைய முனிசிபல் சேர்மன் கள்ள மார்க்கெட்டில் ஏராளமாய்ப் பணம் சேர்த்து இல்லாத அட்டூழியங்கள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறான். தேவபட்டணமே தன்னுடைய சொந்தக் கோட்டை என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். அவனை இந்தத்தடவை தோற்கடித்தாலொழிய, இந்த ஊரில் 'காங்கிரஸ்' என்ற பெயரையே யாரும் எடுக்கமுடியாது. அந்தக் கிராதகனை எதிர்த்து நின்று தோற்கடிப்பதற்கு என்னைத் தவிர வேறு யாரும் கிடையாது. இங்கே எல்லாருடைய ஏகோபித்த அபிப்பிராயமும் இதுதான். இதில் தலையிடுவதற்கு உனக்கு அதிகாரம் இல்லை; உரிமை இல்லை; தகுதியும் இல்லை! இவ்வளவு தீவிரவேலை நடந்து எலெக்ஷன் இன்னும் இரண்டு வாரம் இருக்கும் சமயத்தில் நான் பின் வாங்கினால் அதைக் காட்டிலும் எனக்கு அவமானம் வேறு வேண்டியதில்லை. அப்புறம் நான் வெளியில் தலை காட்டவே முடியாது."

பட்டாபிராமன் மூச்சு விடுவதற்காகப் பேச்சை நிறுத்திய சமயம் பார்த்துச் சூரியா சொன்னான்:—

"பட்டாபி ஸார்! நான் ஒரு வார்த்தை சொல்லுவதற்குள் நீங்கள் நூறு வார்த்தை சொல்லி விட்டீர்கள். இந்த சமயத்தில் உங்களைப் பின் வாங்கும்படி நான் சொல்லவில்லை. அதற்கு அதிகாரமோ, உரிமையோ, தகுதியோ ஒன்றும் எனக்குக் கிடையாது என்பதையும் அறிந்திருக்கிறேன். 'எலெக்ஷனில் இறங்காமல் இருந்திருக்கலாம்' என்று மட்டுந்தான் சொன்னேன். அதுவும் என்னுடைய அபிப்பிராயமே தவிர உங்களைக் கட்டாயப்படுத்த உத்தேசமே எனக்குக் கிடையாது. இப்போது நீங்கள் தேர்தலுக்கு நின்று இவ்வளவு தூரம் வேலை நடத்திய பிறகு உங்களைப் பின்வாங்கும்படி சொல்ல எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? நான் சொல்ல வந்தது வேறு விஷயம். எலெக்ஷன் வேலையில் சீதா ரொம்ப ஒத்தாசையாயிருக்கிறாள் என்று நான் கேள்விப்பட்டேன். ஆகையால் அவளை இந்தச் சமயம் ஊருக்கு அனுப்புவது உசிதமாயிராது. இத்தனை நாள் இருந்தவள் இன்னும் இரண்டு வாரம் இங்கேயே இருக்கட்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால் பார்க்கலாம்..."

"உனக்கென்னடா, அப்பா, சூரியா! வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று சொல்லி விடுகிறாய். கஷ்டப்படுகிறவன் நான் அல்லவா? இந்த இரண்டு பொம்மனாட்டிகளுக்கு மத்தியில் அகப்பட்டுக்கொண்டு என்னால் இனிமேல் சங்கடப்பட முடியாது. வேலை அநியாயமாய்க் கெட்டுப் போகிறது. அப்படிச் சீதா இங்கு இருக்கிறதாயிருந்தால் லலிதாவையாவது நீ அழைத்துக்கொண்டு போக வேண்டும். போதும் போதாததற்கு உன் அம்மா வேறு வந்திருக்கிறாள். சிவ சிவா! வீட்டில் இனிமேல் இருபத்துநாலு மணி நேரமும் ரகளைதான். சூரியா! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். நீ சீதாவையும் உன் தாயாரையும் இன்றைக்காவது நாளைக்காவது அழைத்துக் கொண்டு போய் விடு! தெரிகிறதா? நானும் லலிதாவும் எப்படியோ எங்கள் பாட்டைப் பார்த்துக் கொள்கிறோம். இந்த உலகத்தில் ஒருவரைப் பார்த்து ஒருவர் பிறந்திருக்கவில்லை யல்லவா? சீதாவை நம்பிக் கொண்டுதானா நான் இந்த எலெக்ஷனில் நின்றேன்?......"

"பட்டாபி ஸார்! கொஞ்சம் என் வார்த்தையைக் கேளுங்கள். என்னுடைய அபிப்பிராயத்தில் உங்களுக்கு எப்போதும் கௌரவம் இருந்து வந்தது. நான் அப்படி ரொம்பத் தவறுதலாக எந்தக் காரியத்தையும் சொல்லமாட்டேன் என்ற நம்பிக்கை

உங்களுக்கு இருந்து வந்தது. அதைக் கொஞ்சம் ஞாபகப் படுத்திக்கொண்டு ஒரே ஒரு நாள் எனக்குச் சாவகாசம் கொடுங்கள். அதற்குள் சீதாவிடமும் லலிதாவிடமும் பேசிப் பார்த்துவிட்டு முடிவாக என் அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். ஒன்றிலும் சரிக்கட்டி வராது என்று தோன்றினால் உங்கள் இஷ்டப்படியே சீதாவை அழைத்துக்கொண்டு போய் விடுகிறேன்!" என்றான் சூரியா.

"சரி! உன்னுடைய சாமர்த்தியத்தைப் பார்த்து விடலாம்!" என்றான் பட்டாபிராமன்.

* * *

சீதாவைப் பார்த்துச் சூரியா, "அத்தங்கா! நான் உன்னை வந்த போது நடந்த நாடகத்தை நீயும் மாடியிலிருந்துகொண்டு பார்த்தாய் போலிருக்கிறதே!" என்றான்.

"ஆமாம், சூரியா! அது என் தலைவிதி! காசிக்குப் போனாலும் தன் பாவம் தன்னோடே என்பார்கள் அல்லவா? அதுபோல நான் எந்த இடத்துக்குப் போனாலும் என்னோடு துரதிர்ஷ்டத்தையும் கொண்டு போகிறதாகக் காண்கிறது. நான் நல்லது செய்யப் பார்த்தாலும் அது எப்படியோ கெடுதலாய் முடிந்து விடுகிறது. இன்றைக்கே நான் இந்த வீட்டிலிருந்து கிளம்பி விடுவதாகத் தீர்மானித்து விட்டேன்!"

"இன்றைக்கே கிளம்பி எங்கே போவதாக உத்தேசம்?" என்று சூரியா கேட்டான்.

"எங்கே போகிறது? போகிறதற்கு இடமில்லையா என்ன? கிணறு, குளம், ஏரி, சமுத்திரம் எல்லாந்தான் இருக்கிறது! இல்லாவிட்டால் ரயில் தண்டவாளம் இருக்கிறது! மதராஸுக்குப் போய் ஒரு தடவை வஸந்தியைப் பார்த்துவிட வேணும். அப்புறம், ஏதாவது ஒரு வழி தேடிக் கொள்கிறேன். உனக்கு அதைப் பற்றிய கவலை வேண்டாம்!" என்று சொல்லிவிட்டுச் சீதா கலகலவென்று கண்ணீர் வடித்தாள்.

"அத்தங்கா! எல்லாக் கஷ்டங்களுக்கும் ஒரு முடிவு உண்டு. வாழ்க்கையில் நீ ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறாய் என்பது உண்மைதான். ஆனால் உன்னைவிட அதிகமான கஷ்டம் அநுபவித்தவர்களும் உலகத்தில் உண்டு; அவர்களுக்கெல்லாம் விடிவு காலம் வந்திருக்கிறது."

"என்னுடைய கஷ்டகாலம் என்னோடு மட்டும் போனால் தேவலையே, சூரியா! நான் எங்கே போகிறேனோ, அங்கெல்லாம் தொடர்ந்து வந்து விடுகிறதே! ராஜம்பேட்டைக்கு வந்தேன்; அருமை மாமாவை யமலோகத்துக்கு அனுப்பினேன்! இவ்விடம் வந்தேன்; என் அருமைத் தோழிக்கும் அவளுடைய புருஷனுக்கும் சண்டையை மூட்டினேன். டில்லியிலே அவருக்கு என்னால் உத்தியோகமே போய்விட்டது. சூரியா! வஸந்தியை மதராஸிலிருந்து நான் ஏன் அழைத்துக் கொண்டுவரவில்லை தெரியுமா? 'பள்ளிக்கூடம் வீணாய்ப் போய் விடுமே!' என்று குழந்தை சொன்னது வாஸ்தவந்தான். அது அவளாய்ச் சொல்லவில்லை. பாட்டி சொல்லிக் கொடுத்ததையே சொன்னாள். 'பள்ளிக்கூடம் போனால் போகிறது; என்னுடன் வா!' என்று நான் சொல்லியிருந்தால் கட்டாயம் வந்திருப்பாள். ஆனால் நான்தான் வற்புறுத்திக் கூப்பிடவில்லை. எனக்கென்னமோ மனதில் சதாகாலமும் ஒரு பயம் தோன்றிக் கொண்டிருக்கிறது: என்னுடன் இருப்பவர்களுக்கெல்லாம் ஏதாவது ஆபத்து வரும் என்று. அதனால்தான் குழந்தையை அழைத்து வரவில்லை. பாட்டியிடமே பத்திரமாயிருக்கட்டும் என்று விட்டு வந்தேன்."

"அத்தங்கா! உன்னுடைய பயம் வீண் பயம். உன்னுடைய நம்பிக்கை குருட்டு நம்பிக்கை. ஒருவரால் ஒருவருக்குக் கஷ்டம் வரும் என்பதெல்லாம் முட்டாள்தனம். உலகத்தில் உனக்கு மட்டுந்தானா கஷ்டம் வந்திருக்கிறது? தேசம் தேசமாகக் கஷ்டம் வந்திருக்கிறது. லட்சக் கணக்கான ஜனங்களுக்கு, கோடிக்கணக்கான ஜனங்களுக்கு, ஒரேயடியாகக் கஷ்டம் வந்திருக்கிறது. வங்காளத்தில் அறுபது லட்சம் ஜனங்கள் பஞ்சத்தினால் செத்துப் போனார்கள்! ஹிரோஷிமா என்னும் பட்டணத்தில் வசித்த இரண்டரை லட்சம் ஜனங்களும் ஒரே நிமிஷத்தில் அமெரிக்கர் போட்ட அணுகுண்டினால் செத்துப் போனார்கள்! நேற்று உலகத்தையே

ஜயித்து விட்டதாகக் கனவு கண்ட ஜெர்மானியர் எட்டுக் கோடிப் பேர் இன்று நாலு தேசங்களின் காலடியில் கிடந்து மிதிபடுகிறார்கள். கஷ்டம் ஏன் வருகிறது, எப்படி வருகிறது என்பதெல்லாம் நம்முடைய பகுத்தறிவினால் கண்டறிய முடியாத தெய்வ இரகசியம். ஒருவருக்கு இன்னொருவர் கஷ்டத்தை உண்டு பண்ண முடியாது. ஒருவருடைய துரதிர்ஷ்டம் இன்னொருவரைத் தொடர முடியாது."

"சரி, சூரியா! உன்னோடு தத்துவ வாதம் செய்ய என்னால் முடியாது. பின்னே என்னதான் செய்ய வேண்டும் என்கிறாய்? சொல்!"

"கடவுள் எந்தெந்த நிலைமையில் நம்மை வைத்திருக்கிறாரோ அந்தந்த நிலைமையில் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டியது!"

"இப்போது என்னுடைய கடமை என்ன?" என்று சீதா கேட்டாள்.

"அத்தங்கா! இப்போது உன்னுடைய கடமை இந்த எலெக்ஷனில் பட்டாபி ஜயிக்கும்படி செய்வதுதான். மாப்பிள்ளை பட்டாபியின் மனதை என்னைப்போல் அறிந்தவர்கள் இல்லை. பட்டம் பதவியின் பேரில் அவருக்கு மோகமே கிடையாது. ஆறு மாதத்துக்கு முன்னால் அவரிடம் 'தேர்தலுக்கு நில்லுங்கள்' என்று யாராவது சொல்லியிருந்தால் குலுங்கச் சிரித்திருப்பார். அப்படிப்பட்டவருடைய மனதில் தேர்தல் வெறியை நீ மூட்டி விட்டாய்! இதுவரை தேர்தல் வேலையில் ஒத்தாசையும் செய்து வந்திருக்கிறாய். இந்தச் சமயத்தில் நீ கைவிட்டு விட்டுப் போனால் அடியோடு எல்லாம் மாறிப்போனாலும் போகும். ஆகையால் தேர்தல் தேதி வரையில் இருந்து ஆரம்பித்த காரியத்தை முடித்துக் கொடுக்க வேண்டியது உன்னுடைய கடமை" என்றான் சூரியா.

"நீ சொல்வதெல்லாம் சரி என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை. அப்படியே ஒப்புக் கொண்டாலும் இந்த வீட்டில் இனிமேல் நான் எப்படி இருக்க முடியும்? நீ வருவதற்குச் சற்று முன்னால் இங்கே என்ன பேச்சு நடந்தது என்று உனக்குத் தெரியாது. என்னை இந்த வீட்டை விட்டு விரட்டி விட்டு மறு காரியம் பார்க்கும்படி லலிதா பட்டாபிராமனிடம் சொன்னாள். 'சீதா இந்த வீட்டை விட்டுப் போக மாட்டாள், போகிறதாயிருந்தால் நீதான் போக வேண்டும்!' என்று பட்டாபிராமன் சொன்னார். இந்த வார்த்தைகளை என் காதாலேயே கேட்டேன். நிலைமை இவ்வளவு விகாரமாகப் போன பிறகு நான் இந்த வீட்டில் இருக்கலாமா? இருக்கலாம் என்று நீ சொல்லுகிறாயா?"

"அத்தங்கா! அவர்கள் இரண்டு பேரும் புத்தி நிதானமாயிருக்கும் போது அவ்விதம் சொல்லியிருக்க மாட்டார்கள். லலிதா ஏதோ கோபத்தில் உளறியிருக்கிறாள். பட்டாபியும் ஆத்திரத்தினால் யோசியாமல் ஏதோ சொல்லியிருக்கிறார். நீ தேர்தல் முடியும் வரையில் இங்கே இருக்க வேண்டும் என்று லலிதாவைக் கொண்டே நான் கேட்டுக் கொள்ளச் சொல்கிறேன்."

"அவள் கேட்டுக் கொண்டு என்ன பிரயோஜனம்? மாமி வேறு வந்திருக்கிறாள். மாமிக்கு ஏற்கெனவே என் பேரில் அசாத்தியமான கோபம். இதெல்லாம் மாமிக்குத் தெரிந்தால் என்னை இந்த வீட்டில் ஒரு நிமிஷமாவது இருக்க விடுவாளா?"

"மாப்பிள்ளைக்குச் சேர்மன் வேலை ஆக வேண்டும் என்ற ஆசை அம்மாவின் மனதில் குடி கொண்டு விட்டது. அதற்காக உன் காலில் விழுந்து வேண்டிக்கொள்ள வேண்டுமானாலும் வேண்டிக்கொள்வாள். உண்மையில் உன்னை இங்கே இருக்கும்படி செய்வதற்காகவே அம்மா இப்போது வந்திருக்கிறாள், தெரியுமா?"

இதைக் கேட்டதும் சீதாவுக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. இத்தனை நேரம் வாடிச் சுருங்கியிருந்த அவளுடைய முகத்தில் சிறிது மலர்ச்சி உண்டாயிற்று. "சூரியா! நீ சொல்வது உண்மைதானா? அல்லது பரிகாசம் செய்கிறாயா?" என்று கேட்டாள்.

"பரிகாசம் இல்லை, உண்மைதான்! இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் அம்மாவே உன்னிடம் வந்து சொல்லுவாள். ராஜம்பேட்டை சீமாச்சுவய்யர் பட்டாபிக்கு எதிராகத் தேர்தலில் வேலை செய்கிறாராமே?"

"ஆமாம்; அதைப்பற்றி என்ன?"

"சீமாச்சுவய்யர் இங்கிருந்து கிராமத்துக்கு வந்து அம்மாவிடம் உன்னைப்

பற்றிப் புகார் சொன்னார். நீதான் பட்டாபியின் புத்தியைக் கெடுத்து விட்டாய் என்றும், எலெக்ஷனுக்கு நிற்பதினால் பணம் எல்லாம் போய் விடும் என்றும், லலிதாவுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை யென்றும் சொன்னார். ஆனால் பலன் சீமாச்சுவய்யர் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக ஆயிற்று. மாப்பிள்ளை பெரிய உத்தியோகத்துக்குப் போகவில்லை யென்று அம்மாவுக்கு ரொம்பக் குறை. இப்போது சேர்மன் வேலையாவது ஆகட்டும் என்று நூறு தெய்வங்களை வேண்டிக் கொண்டிருக்கிறாள். பெண்ணுக்குப் புத்தி சொல்வதற்காகவும் உன்னை உற்சாகப்படுத்துவதற்காகவுமே வந்திருக்கிறாள். மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நின்றது தப்பு என்று நான் சொன்னதற்காக என் பேரில் அம்மாவுக்கு அசாத்தியமான கோபம். ரொம்பச் சண்டை பிடித்தாள்."

இந்த அதிசயத்தைக் குறித்துச் சீதா சிறிது நேரம் யோசனை செய்து கொண்டிருந்தாள். பிறகு சூரியாவைப் பார்த்து, "நான் எப்படியும் மதராசுக்கு ஒரு நடை போக வேண்டும், சூரியா! குழந்தை வஸந்தியிடமிருந்து நேற்றுக் கடிதம் வந்திருக்கிறது" என்றாள்.

"வஸந்தி என்ன எழுதியிருக்கிறாள்?" என்று சூரியா கேட்டான்.

"இன்னும் நாலு நாளில் பள்ளிக்கூடம் சாத்தி விடுவார்களாம். என்னைப் பார்க்க ஆசையாயிருக்கிறதாம். உடனே மதராசுக்கு வந்து அழைத்துப் போகும்படி எழுதியிருக்கிறாள்."

"அத்தங்கா! நீ எலெக்ஷன் வேலையைப் பார்! நான் போய் வஸந்தியை அழைத்துக் கொண்டு வருகிறேன்!" என்று சொன்னான் சூரியா.

• • •

சரஸ்வதி அம்மாள் தன் குமாரி லலிதாவைப் பார்த்து, "உன்னைப் போல் அசட்டுப் பெண்ணை நான் பார்த்ததே இல்லை. உன் அகத்துக்காரர் எலெக்ஷனில் ஜயிப்பதற்கு அந்தப் பெண் சீதா எவ்வளவோ பாடுபட்டு வேலை செய்கிறாளாம்; நீ ஏதாவது குற்றம் குறை சொல்லிக் கொண்டிருக்கிறாயாமே?" என்றாள்.

"அம்மா! உனக்குக் கூட எலெக்ஷன் பைத்தியம் பிடித்துவிட்டதா? எலெக்ஷன் என்றால் ஏதோ சாதாரண விஷயம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதனால் எவ்வளவோ விரோதங்கள் வந்து சேரும். என் மாமனார் எலெக்ஷனில் தலையிட்டதினால் எவ்வளவு சங்கடப்பட்டார், தெரியுமா?"

"எல்லாம் தெரியுமடி, தெரியும். எனக்குத் தெரியாததற்கு நீ சொல்ல வந்துவிட்டாய்! எனக்கு முன்னாலேயே நீ பிறந்துவிட்டாயோ? அந்தப்



பிராமணர் வேறு யாருக்காகவோ எலெக்ஷன் வேலை செய்து சங்கடத்தை விலைக்கு வாங்கிக் கொண்டார். இது அப்படி யில்லையே! மாப்பிள்ளையே தானே நிற்கிறார்?''

"மாப்பிள்ளையே நின்றால் என்ன? விரோதம் வராமல் போய்விடுமா?''

"எந்தக் காரியத்திலேதான் விரோதம் ஏற்படாமல் இருக்கிறது? வெற்றிலைப் பாக்குக் கடை வைத்து நாலு காசு லாபம் சம்பாதித்தால் அதற்குக் கூட நாலு பேர் விரோதம். யாராவது ஒரு பொம்மனாட்டி நல்ல புடவை கட்டிக்கொண்டால் அதைப் பார்த்து நாலு பேருக்கு அசூயை. மாட்டு வண்டியிலே போனால் நாலு பேருக்கு விரோதம். மோட்டாரிலே போனால் அதில் நாலு பேருக்கு விரோதம். அப்படியெல்லாம் விரோதம் வரும் என்று பயந்து கொண்டிருந்தால் இந்த உலகத்தில் வாழ முடியுமோ? ஆண்டிப் பரதேசியாய்ப் போக வேண்டியது தான். மாப்பிள்ளை இந்த எலெக்ஷனிலே ஜயித்தால் நானைக்குச் சேர்மன் வேலைக்கு வரலாம் என்று சொல்கிறார்களே? அது நிஜந்தானே?''



"வந்தால் என்ன பிரயோசனம், அம்மா! சேர்மன் என்று நெற்றியில் எழுதிக் கட்டிக் கொள்கிறதா?"

"சீ! அசடே! ஏதாவது ஏடாகூடமாய்ச் சொல்லாதே! சேர்மன் வேலை என்றால் சாதாரணம் என்று நினைக்கிறாயோ? என்னுடைய அம்மாவைப் பெற்ற தாத்தா இதே தேவ பட்டணத்தில் சேர்மனாயிருந்தார். அவருடைய வீட்டுக்குச் சேர்மன் வீடு என்று பெயர். அந்தக் காலத்திலே மோட்டார் வண்டி இல்லை. இரட்டைக் குதிரை சாரட்டில் ஆபீஸுக்குக் கிளம்புவார். அதைப் பார்க்க வீதியில் உள்ளவர்கள் எல்லாம் வீட்டு வாசலில் வந்து நின்று வேடிக்கை பார்ப்பார்கள். தாத்தாவுடன் இரட்டைக் குதிரை சாரட்டில் நான்கூட ஒரு தடவை ஏறிப் போயிருக்கிறேன். நன்றாக ஞாபகமிருக்கிறது."

லலிதாவுக்குச் சிரிப்பு வந்தது: மனதிலும் மகிழ்ச்சி உண்டாயிற்று. சீதாவைப் பற்றிக் கேள்விப்பட்டு அதைப்பற்றித் தன்னிடம் சண்டை பிடிக்கவும் அவளை உடனே வீட்டை விட்டு அனுப்பச் சொல்லவுமே அம்மா புறப்பட்டு வந்திருப்பதாக நினைத்தாள். விஷயம் அதற்கு மாறாயிருக்கவே லலிதாவின் மனதிலிருந்து ஒரு பாரம் நீங்கியது போலிருந்தது.

"அம்மா! முன்னெல்லாம் சேர்மன் வேலைக்கு இருந்த கௌரவம் இப்போது கிடையாது. அப்படியேயிருந்தாலும், அதற்காகச் செலவழிக்கிற பணம் எல்லாம் என்ன ஆகிறது? நம்மிடத்தில் பணம் கொட்டியா கிடக்கிறது? சேர்மன் உத்தியோகத்துக்குச் சம்பளம் கிடையாது என்று உனக்குத் தெரியுமோ, இல்லையோ?" என்றாள்.


"சம்பளம் இல்லாமற் போனால், என்ன? பட்டிக்காட்டில் இருந்தால் எனக்கு ஒன்றுமே தெரியாது என்று நினைத்துக் கொண்டு பேசுகிறாயோ? முன்னேயெல்லாம் சேர்மன் வேலை என்றால் வெறும் கௌரவந்தான். இப்போது கௌரவத்துடன் வருமானமும் உண்டு. இத்தனை நாளும் இந்த ஊரிலே சேர்மன் வேலை பார்த்தவர் இரண்டு லட்சம் ரூபாய் சம்பாதித்திருக்கிறாராம். வியாபாரிகளுக்குச் சர்க்கரை பெர்மிட் வாங்கிக் கொடுத்து ஐம்பதினாயிரம் ரூபாய் சம்பாதித்திருக்கிறாராம். அவர் குழந்தைக்குப் போன வருஷம் ஆண்டு நிறைவுக் கலியாணம் நடந்ததாம். அரை லட்சத்துக்குப் 'பிரஸெண்டு' மட்டும் வந்ததாம். உன் குழந்தைக்குந்தான் ஆண்டு நிறைவு நடந்தது. என்ன கிடைத்தது? வந்தவர்களுக்குப் போலீஸ்காரர்களின் அடிதான் கிடைத்தது!"

லலிதா கலுக்கென்று சிரித்தாள். "என்னடி சிரிக்கிறாய், பெண்ணே? நான் சொல்கிறது சிரிப்பாயிருக்கிறதா!" என்று சரஸ்வதி அம்மாள் கேட்டாள்.

"அதற்காகச் சிரிக்கவில்லை, அம்மா! நீ சொல்லுகிறது ஒரு விதத்தில் உண்மைதான். சில பேர் சேர்மன் வேலையிலே கூடப் பணம் சம்பாதித்திருக்கிறார்கள். ஆனால் உன் மாப்பிள்ளை அப்படிப்பட்டவர் இல்லையே என்பதை நினைத்துக்கொண்டே சிரித்தேன். அவர் கைநீட்டிப் பணம் வாங்கவும் மாட்டார்; பிரஸெண்டு வாங்கவும் மாட்டார். ஒருத்தரை ஒன்று கேட்கவும் மாட்டார்."

"இவர் என்னத்துக்காக வாங்க வேணும்? இவர் கைநீட்டி ஒன்றும் வாங்க வேண்டியதில்லை. ஒருத்தரை ஒன்று கேட்க வேண்டியதுமில்லை. சேர்மன் வேலை ஆகிவிட்டால் எல்லாம் தானே தேடிக்கொண்டு வராதா?"

இதைக் கேட்டுக்கொண்டே சீதா சமையலறைக்குள் வந்தாள். லலிதா அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். தனக்கும் தன் புருஷனுக்கும் நடந்த பேச்சைச் சீதா மேல் மாடியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தது அவளுக்குத் தெரியாது. ஆகையால் கொஞ்சம் குதூகலமாகவே சீதாவைப் பார்த்து, "அத்தங்கா! கேட்டாயா அதிசயத்தை! அம்மா ஒரே அடியாக உன் கட்சி பேசுகிறாள். இந்த எலெக்ஷன் விஷயத்திலே நம் வீட்டில் உன் கட்சிக்குத்தான் மெஜாரிட்டி இருக்கிறது; நான் மைனாரிட்டியாகி விட்டேன். அம்மாவுக்கு இருக்கிற உற்சாகத்தைப் பார்த்தால் மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு இவளே வீடு வீடாய்ப் போய் வோட்டுக் கேட்பாள் போலிருக்கிறது!" என்றாள் லலிதா.


அமரரான
அண்ணலுக்கு
இசைவாணியின் பாமாலை!
ஸ்ரீமதி. எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி
ரிக்கார்டு N.28070
இத்தனை நாள் ஆன பின்னும் ....
மானிலத்தை வாழ வைக்க வந்த மஹாத்மா
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

மகளிர் இல்லம் ஆண்டு விழா



[பலராம ராஜா]

ஏப்ரல் 8உ வெள்ளிக்கிழமை யன்று அமராவதிபுதூர் 'மகளிர் இல்ல'த்தின் பத்தாவது ஆண்டு விழா "கல்கி" ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. இந்த வைபவத்துக்கு ரஸிகமணி டி. கே. ஸி. அவர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

மாலை சுமார் ஐந்து மணி இருக்கும். மோட்டார் கார் 'மகளிர் இல்ல'த்தின் வாசலில் நுழைந்ததும், முந்நூறு வருஷங்களுக்கு முன்னால், ஏன் அதற்கும் முன்னால் சேர சோழ பாண்டிய மன்னர்களின் காலத்துக்குப் போய்விட்ட மாதிரி இருந்தது. பழைய காலத்துக் கொம்பு வாத்தியங்கள் முழங்கின. பழந் தமிழ்நாட்டு மரபுப்படி ரஸிகமணியையும் "கல்கி" ஆசிரியரையும் கட்டியங் கூறி வரவேற்று உபசரித்தார்கள்.

அலங்காரமாக அமைந்த பந்தலில் நிறைந்த ஜனக்கூட்டத்தினிடையே ரஸிகமணியும் "கல்கி" ஆசிரியரும் பிரவேசித்தார்கள். ஆனால் எங்கு உட்காருவது என்று தெரியாமல் நின்று கொண்டிருந்தார்கள். ஸ்ரீ முருகப்பா ஓடி வந்து, "இங்கே அமருங்கள்!" என்று கையைக் காட்டினார். "அது ராஜா ராணி உட்காருகிற சிம்மாசனம் மாதிரி அல்லவா இருக்கிறது? இதிலா எங்களை உட்காரச் சொல்லுகிறீர்கள்?" என்றார் "கல்கி" ஆசிரியர்.



வீர பாண்டியன்

முதலில் 'மகளிர் இல்ல'க் குழந்தைகளின் ஆடல் பாடல் நாடகங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அரங்க மேடையில் திரை நீங்கிற்று. மூன்று வயசு முதல் ஒன்பது வயசு வரை உள்ள பால் மணம் மாறாப் பாலர்கள் அரங்க மேடையில் ஆடவும் பாடவும் அபாரமாக நடிக்கவும் தொடங்கினார்கள்.

நிகழ்ச்சிகளில் "நடக்காத நாடகம்" என்பது மிகவும் விசேஷமாயிருந்தது.

நாடகம் போடுவதாக ஒரு நாடகக் கம்பெனியில் டிக்கட் கொடுக்கிறார்கள். நிறையக் கூட்டம் சேர்கிறது. சிறிது நேரத்தில் சபையோர் நாடகத்தைச் சீக்கிரம் ஆரம்பிக்க வேண்டும் என்று கூச்சல் போடுகிறார்கள். "மானேஜர் வரட்டும், ஆரம்பித்து விடுகிறோம்!" என்று நாடகக்காரர் ஒருவர் சொல்லுகிறார். "எங்கே அந்த மானேஜர்?" என்று எல்லோரும் ஒரே சமயத்தில் கத்துகிறார்கள். "அதுதானே தெரியவில்லை? பணத்தை வசூல் செய்து எடுத்துக்கொண்டு ஓடிப் போய்விட்டார் போலிருக்கிறதே?" என்று தப்பித்து ஓட முடியாத ஒரு நாடகக்காரன் சொல்லுகிறான். இந்தத் தர்க்கம் பிறகு சண்டையாக மூளுகிறது. கடைசியில் சமாதானமாகிறது. காந்தி மகானுக்குப் பிரியமான "ரகுபதி ராகவ" பஜனை பாடச் சொல்லி நாடகக்காரரை அனுப்பி விடுகிறார்கள். இதுதான் "நடக்காத நாடகம்". இதில் குழந்தைகளின் நடிப்பு என்ன, அவர்கள் பேசிய பேச்சு என்ன, பேச்சில் வரும் கோபம் என்ன, ஏளனம் என்ன, ஹாஸ்யம் என்ன, அப்பப்பா! அந்தச் சின்னஞ் சிறு குழந்தைகள் அபாரமாக நடித்துக் காட்டினார்கள். அதிலும் சபையோரில் கலாட்டாத் தலைவனாக விளங்கிய வீர பாண்டியன் என்னும் பத்து வயதுப் பையன் பேசிய பேச்சும், குதித்த குதியும், செய்த அட்டகாசமும் பார்த்தவர்கள் கண்ணை விட்டு அகலுவது அருமை.

"செங்கையில் வண்டு கலின் கலின்" எனத் தொடங்கும் குற்றாலக் குறவஞ்சிப் பாடலுக்கு அபிநயத்துடன் இரண்டு சின்னப் பெண்கள் அழகாக நடனம் ஆடினார்கள். பாடலின் பொருளை நன்றாக விளக்குவதற்கு ஆடல் எவ்வளவு அவசியம் என்று அன்று எல்லோருக்கும் நன்றாய்ப் புரிந்தது.

கடைசியாக, அரங்க மேடைக்கு ஒரு புலவர் வந்தார். அவரது வயது மூன்று

உயரம் இரண்டு அடி மூன்று அங்குலம். அழகாகப் பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு வந்து கம்பீரமாகச் சபை முன்பு நின்றார். பின்னோடு இன்னொரு பிரமுகரும் வந்தார். அந்தப் பச்சினம் குழந்தையைப் பார்த்து, "புலவரே! உமக்குத் திருக்குறள் தெரியுமா?" என்று கேட்டார்.

"ஓ, தெரியும்! இதோ!" என்று ஒரு குறள் சொன்னார் புலவர்.

"புலவரே! உமக்கு நாலாயிர திவ்யப் பிரபந்தம் தெரியுமோ?"

"ஆகா! நன்றாகத் தெரியும்!" என்று சொல்லிவிட்டுத் திவ்யப்பிரபந்தத்தில் ஒரு அருமையான பாடலைச் சொன்னார்.

"புலவரே! கம்பராமாயணம் எப்படிப் பட்ட நூல்?"

"கேட்கவும் வேண்டுமா? கம்பராமாயணம் அருமையான நூல்!"

"கம்ப ராமாயணத்திலிருந்து ஒரு பாடல் சொல்லலாமோ?"

"இதோ சொல்லுகிறேன்!" என்று புலவர் கம்பர் பாடல் ஒன்றைக் கூறினார்.

இப்படியாக எதைக் கேட்டாலும் எத்தனை தடவை கேட்டாலும் தயங்காமலும் ஞானமாகவும் சுத்தமாகவும் டக் டக் என்று பதில் சொன்னார் மூன்று வயதுப் புலவர்.

சுமார் ஒன்றே கால் மணி நேரம் ஒன்றே கால் வினாடியில் ஓடி மறைந்து விட்டது. சரியாக 6-15 மணிக்குக் குழந்தைகளின் ஆடல் பாடல் நிகழ்ச்சி முடிவடைந்தது.

பின்னர், ரவிகமணி அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். அவர்கள் கூறியதாவது:—

"இந்த மகளிர் இல்லத்தில் பாழாய்ப் போன பரீட்சை இல்லை. புத்தகப் பாடமும் இல்லை. ஆகையால் இதுதான் உண்மையான பள்ளிக்கூடம். டாக்டர் மாண்டிசோரி அம்மையாரின் முதிர்ந்த அனுபவத்தின் லட்சியத்தைப் பின்பற்றி நடத்தப் பெறும் இந்தப் பாடசாலையை நான் போற்றுகிறேன். இந்தமாதிரிப் பள்ளிகளே நமக்குத் தேவை. இந்தப் பெரிய பொறுப்பை ஏற்று அரும் பாடுபட்டுத் தொண்டாற்றி வரும் முருகப்பா அவர்களையும் அவர்களது அருமை மனைவியார் மரகதவல்லி அம்மையாரையும் பாராட்டுகிறேன்."

பிறகு ரவிகமணி அவர்கள் மந்திர சக்தியோ என்று எண்ணக் கூடிய பாணியில் இரண்டு அற்புதமான பாடல்களைப் பாடி, சபையிலிருந்தவர்களைக் கவிதையில் மூழ்கி அனுபவிக்கச் செய்தார்கள்.

பிறகு விழாவுக்குத் தலைமை வகித்த "கல்கி" ஆசிரியர் பேச ஆரம்பித்தார்:—

"பெரியோர்களே! எழுத்தாளர்களாகிய நாங்கள் எங்களைப் 'பேனா மன்னர்கள்' என்று சொல்லிக் கொண்டு மகிழ்வதுண்டு. ஆனால் இன்றுவரை நான் சிம்மாசனத்தில் உட்கார்ந்தது கிடையாது. இன்றுதான் முதன் முதலாகக் 'குமரன்' ஆசிரியர் என்னைச் சிம்மாசனத்தில் உட்கார வைத்திருக்கிறார். ஆனால் இந்தச் சிம்மாசனம் பொல்லாத சிம்மாசனமாயிருக்கிறது. இதில் நான் உட்கார்ந்திலிருந்து பிடித்துப் பிடித்துத் தள்ளிக் கொண்டிருக்கிறது. கீழே காலை ஊன்றலாம் என்று பார்த்தால் கால் எட்டவில்லை. இந்தச் சிம்மாசனம் சென்னை மாகாணத்துப் பிரதம மந்திரி ஆசனத்தைவிடப் பொல்லாத, பிடித்துத் தள்ளும் ஆசனமாயிருக்கிறது!" என்று கூறியதும், சபையோர் கலகல என்று சிரித்து மகிழ்ந்தனர்.

"கல்கி" ஆசிரியர் பின்னர் ஸ்ரீ சொ. முருகப்பா "குமரன்" பத்திரிகையின் மூலம் செய்த இலக்கியத் தொண்டையும் அவருடைய சமூக சீர்திருத்த சேவைகளையும் பாராட்டினார். கவிஞர் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை அவர்களை ஸ்ரீ முருகப்பாவின் மூலமாகத் தமிழ் உலகம் அறிந்தது குறித்துச் சொன்னார். ஸ்ரீ முருகப்பா வெளியிட்ட "கருணைக் கடல்" என்னும் நூலின் மூலமாக எப்படி ரவிகமணியும் ராஜாஜியும் சிநேகமானார்கள் என்னும் வரலாற்றை எடுத்துரைத்தார். பிறகு "மகளிர் இல்லம்" வாயிலாகக் கல்வித் துறையில் எத்தகைய அரிய தொண்டை ஸ்ரீ முருகப்பா ஆற்றி வருகிறார் என்று எடுத்துரைத்தார். மேலும் "கல்கி" ஆசிரியர் கூறியதாவது:—

"சமீபத்தில் கல்வி மந்திரி பதவியிலிருந்து விலகிய கனம் ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் நமது கல்வி முறையில் பல சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார். ஆயினும் நாவை எதிர்பார்த்த



மூன்று வயதுப் புலவர்



மாண்டிஸோரி முறையிற் கல்விப் பயிற்சி.

பயனை இன்னும் அளிக்கவில்லை. ஒரு பழைய வீட்டில் ஒட்டடையும் குப்பை கூளமும் நிறைந்து கிடந்தால் அதைப் புதுப்பிக்கும் போது முதலில் குப்பை கூளங்களை அகற்ற வேண்டும். குப்பை கூளங்களை எடுக்காமல் அழகான சோபா, மேஜை, நிலைக்கண்ணாடி முதலியவற்றைக் கொண்டு போட்டால் வீடு சுத்தப்படாது. வௌவால்கள்—எலிகளின் அசுத்தம் நிறைந்துள்ள இடத்தில் துப்புரவு செய்துவிட்டுப் பன்னீரைத் தெளித்தால் நறுமணம் வீசும். துப்புரவு செய்யாவிடில் விலை உயர்ந்த ஸெண்டைக் கொட்டினாலும் துர்நாற்றத்துடன் கலந்துதான் வீசும். அது போல் நமது கல்வி முறையிலுள்ள குப்பை கூளங்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன. அவற்றுடன் திருக்குறளில் 300 பாடல் நெட்டுருச் செய்யவேண்டும் என்று சொல்வதால் திருக்குறள் மீது பிள்ளைகள் அன்பு கொள்வார்களா என்பது சந்தேகந்தான். பரீட்சையில் தேறுவதே இன்னமும் நம் கல்விமுறையில் முக்கிய இலட்சியமாயிருந்து வருகிறது. இது மாறவேண்டும். மாணாக்கர்களுக்குப் படிப்பதில் ஆசை உண்டாக்க வேண்டும்."

பிறகு "கல்கி" ஆசிரியர் தாம் ஒன்றரை வருஷத்துக்கு முன் ஒருநாள் தற்செயலாக இந்த மகளிர் இல்லம் வந்தபோது கண்ட காட்சியை வர்ணித்தார்: "இங்கே குழந்தைகள் காய்க்கும் மரம் ஒன்றைக் கண்டேன்! மரம் கண்ணுக்குத் தெரியவில்லை. நாலு பக்கமும் குழந்தைகள் சூழ்ந்து மரத்தை மூடிக் கொண்டிருந்தன. இன்னும் அருகில் நெருங்கிப் பார்த்தபோது நடுவில் ஒரு மனிதர் நிற்பது தெரிந்தது. அவர் சட்டையைப் பிடித்துக்கொண்டு நாலு குழந்தைகள் இழுத்தன. இரண்டு குழந்தைகள் தோளைப் பிடித்துக்கொண்டு தொங்கின. ஒரு குழந்தை அவருடைய கழுத்திலும் இன்னொரு குழந்தை அவர் தலையிலும் உட்கார்ந்திருந்தன. இன்னும் கூர்ந்து பார்த்தபோது அவர் தான் ஸ்ரீ முருகப்பா என்று தெரிந்தது. இங்கே படிக்கும் குழந்தைகள் ஸ்ரீ முருகப்பாவினிடம் அவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள். அவரிடம் அவ்வளவு செல்லம் கொண்டாடுகிறார்கள். ஆனாலும் இந்தக் குழந்தைகளுக்குப் படிப்பு வராமலிருக்கிறதா? அற்புதமான படிப்பு வந்திருக்கிறது! இது தான் உண்மையில் படிப்பு. மற்றதெல்லாம் பரீட்சைச் சுவரில் முட்டிக்கொள்வதுதான்!"

பிறகு "கல்கி" ஆசிரியருக்கு ஒரு கஷ்டமான வேலை ஏற்பட்டது. ஒரு அபிமானி இரண்டு மெடல்களைக் கொடுத்து அன்று நடித்த குழந்தைகளில் சிறப்பாக நடித்த குழந்தைகளுக்குக் கொடுக்கச் சொல்லி விட்டார். முப்பத்தைந்து குழந்தைகள் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். எல்லாரும் ஒவ்வொரு விதத்தில் சிறப்பாக நடித்திருந்தார்கள். எந்த இரண்டு பேருக்கு மெடல் கொடுப்பது?— இந்தக் கஷ்டத்தைப் பற்றி "கல்கி" ஆசிரியர் விவரித்துவிட்டு, "நியாயமாகப் பார்த்தால் முப்பத்தைந்து மெடல்கள் கொடுக்க வேண்டும். கையில் இரண்டு மெடல்கள் தான் இருப்பதால், நடிக்காத நாடகத்தில் அமர்க்களம் செய்த வீரபாண்டியனுக்கும் மூன்று வயதுப் புலவர் சிகாமணிக்கும் கொடுக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு மெடல்களைக் கொடுத்தார். மூன்று வயதுப் புலவராக நடித்தது ஒரு சின்னஞ் சிறு பெண் குழந்தை என்பதை அப்போதுதான் சபையோர்கள் கண்டு பிரமாதமான கரகோஷம் செய்தார்கள்.

கடைசியாக, கவர்னர்-ஜெனரல் ராஜாஜி அவர்கள் இந்த மகளிர் இல்லத்தின் ஆண்டு விழாவுக்கு வாழ்த்துச் செய்தியுடன் ஐந்நூறு ரூபாய் நன்கொடையும் அனுப்பியிருப்பதைப் பலமான கரகோஷத்தினிடையே கூறிவிட்டு "கல்கி" ஆசிரியர் அமர்ந்தார்.

ஸ்ரீ முருகப்பா வந்தனோபசாரம் கூறினார். ஆனால் அவருக்கு ஏற்பட்டிருந்த சந்தோஷத்தில் தொண்டை அடைத்துக் கொண்டது; பேச முடியவில்லை. பேச வேண்டியதையெல்லாம் அவர் முகம் பேசிற்று; கண்கள் பேசின; கைகள் ஜாடை காட்டும் ஜாலமாகப் பேசின.

சபையில் இருந்த ஆடவரும் பெண்மணிகளும் குழந்தைகளும் ஸ்ரீ முருகப்பாவுடன் ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்தார்கள்.

ஆண்டு விழா முடிந்தது!
மகளிர் இல்லம் சிறந்தது!



கிரிக்கெட்காரர் கீல்வாதத்தினல் அவுட்டாக்கப்பட்டார்



ஒரு முறை 'க்ருஷன்' சாப்பிட்டபின் மறுபடியும் தகுதி

ராம்லாலின் ஓட்டங்கள் கீல் வாதத்தினல் பாழடைந்தன. கூரிய வலி அவனுடைய கீல்களையும் தசைகளையும் பிடித்தன. மட்டையைப் பிடிப்பது கூட பெரும் வேதனையாக இருந்தது. பந்தயத்தினின்று ஓய்வு எடுத்துக் கொண்டபோது தனது கிரிக்கெட் விளையாட்டே ஓர் முடிவெல்லைக்கு வந்து விட்டது என நினைத்தான். அவன் தலைவன் சில யோசனைகள் சொன்னன்: தினமும் காலை உண்டிக்கு முன் 'க்ருஷனை'ப் பரிதுரியுங்கள்.''

ராம்லால் அவ்வாறே செய்தான். மூன்று வாரங்களுக்குப் பின்னரோ ஓர் வலுவுள்ள பந்தயத்தில் அறுபது ஓட்டங்கள் எடுத்துவிட முடிந்தது. அவனுடைய விளையாட்டு முன்னை விட அதிக மேன்மையுடன் விளங்குற்று — 'க்ருஷ'னுக்கு நன்றிகள். நீங்கள் கஷ்டப்படும் எவ்வித கீல்வாதமும் ஓரே ஒரு முக்கிய காரணத்தைக் கொண்டுள்ளது — மூத்திர நீர் கணுவிலும் தசையிலும் சேர்த்துக்கொண்டு விடுவதால். உங்கள் உடம்பினின்று மூத்திர நீரை வெளியேற்ற ஓரே ஒரு வழிதான் உளது — அதுதான் மூத்திரக் காய்களினின்று நீரை வெளியேறச் செய்வது. 'க்ருஷ'னுடைய ரகசியம் அது செய்யும் இரட்டை வேலையில்தான் உள்ளது. அது அங்கேயும் குடல்களிலும் ஒருங்கே வேலை செய்து நீர் தங்குமிடங்களினின்று அவற்றை வெளியேற்றுவதுடன் மறுபடி அவ்விதம் சேராவிடாமலும் செய்கிறது. இன்றே 'க்ருஷ'ன் வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும். விலை ரூ. 1/10 (மஞ்சள் பெட்டியில்.)



நீங்கள் கூட அந்த க்ருஷன் உணர்ச்சியை அடையலாம்

சேற்றில் செந்தாமரை

பாலு

வாழ்க்கையில் கஷ்டங்களும், சுகங்களும் மாறி மாறித்தான் வருகின்றன. இருந்தபோதிலும் சங்கடங்களே இல்லாத நிம்மதியான வாழ்க்கை சற்றும் எதிர்பாராத முறையில் துன்பப் பாதையில் இறக்கிவிடும்போது, அதைச் சமாளிக்கப் போதுமான தெம்பும் தைரியமும் இலகுவில் ஏற்பட்டு விடுகிறதில்லை என்பது என்னவோ மறக்க முடியாத விஷயம். இதையொட்டித்தான் என்னுடைய வாழ்க்கையும் அமைந்திருந்தது. சஞ்சலமில்லாத என்னுடைய சந்தோஷ வாழ்க்கையில் சென்ற இரண்டு வருஷங்களாகவே துன்ப நிகழ்ச்சிகள் பயங்கர நிழல்களைப்போலப் படர்ந்து மனதிற்குச் சொல்ல முடியாத வேதனையையும் வருத்தத்தையும் ஏற்படுத்தி விட்டிருந்தன. என்னுடைய துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம், தற்போதைக்குப் பெரும்பாலோரிடையே குடிகொண்டிருக்கும் வறுமைதான் என்றும் சொல்லிவிட முடியாது. அந்த மட்டும் ஆண்டவன் எனக்கு ஐசுவரியக் குறைவை ஏற்படுத்தியிருக்கவில்லை. ஆனால் போதுமான அளவுக்குச் செல்வம் படைத்திருந்தால் மட்டும் வாழ்க்கையில் நிம்மதியையும் சுகத்தையும் அடைந்துவிட முடியுமா, என்ன?

என்னுடைய மன உளைச்சலை அதிகப்படுத்தி எனக்குமீளா வேதனையைத் தந்தது ஒரு விஷயம். கண்ணைக் கசக்காமல் இருக்க வேண்டுமே யென்று கண் நிறைந்த கணவனுகப் பார்த்துக் கலியாணம் செய்து கொடுக்கப்பட்டிருந்த என் தங்கை லலிதா, சென்ற வருஷம் கணவனுடைய ஹிம்சையின்பேரில் என்னிடம் வந்து சேர்ந்துவிட்டிருந்தாள். தாறுமாறான மன நிலையில் அவன் அமைத்துக்கொள்ள முயற்சிக்கும் ஊதாரி வாழ்க்கைக்கு இவள் இடைஞ்சலாய் இருக்கிறுள் என்ற எண்ணத்தில், கணவனுடைய அன்பிற்காக ஏங்கி நின்ற அவளைப் பிறந்தகத்திற்கு அனுப்பிவிட்டிருந்தான் அந்தக் கிராதகன்.

லலிதா என் வீட்டுக்கு வந்து கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகியிருந்தது. இந்த ஒரு வருஷ காலத்தில் சென்னையில் ஊதாரி வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த அவள் கணவன் கணேசனுடைய நடவடிக்கைகள் வரவர மோசமாகிக் கொண்டிருப்பதை என்னுடைய நண்பன் சந்துருவின் மூலம் நான் அறியாமல் இல்லை. கூடப் பிறந்த ஒரே ஒரு அருமைத் தங்கையின் க்ஷேமத்திற்காக நான் செய்து வைத்த விவாகம் இவ்வளவு விபரீத பலன்களில் முடியும் என்று நான் எப்படி முன்கூட்டியே அறிந்திருக்க முடியும்?

லலிதாவை அழைத்துப் போகுமாறு கணேசனுக்கு நான் எழுதிய கடிதங்கள் அனைத்தும் ஒருவித பலனையும் அளிக்காமற் போகவே, சென்ற சில மாதங்களாகக் கடிதம் எழுதுவதையும் நிறுத்திவிட்டேன். லலிதாவினுடைய கஷ்டங்கள் விடிந்து, உடைந்துபோயிருக்கும் அவளுடைய உள்ளத்திற்குச் சாந்தி எப்போதுதான் ஏற்படும்? அதற்கு வழி.........?

சிந்தனைக் காற்றாடியை எங்கோ பறக்க விட்டுவிட்டு ஈஸிசேரில் உட்கார்ந்து கொண்டிருந்தேன் எதிரே திடீரென்று என் தாயார் பிரசன்னமானுள். பெற்ற மக்கள் படும் வேதனையில் வாடிப் போயிருந்த அவள் உருவத்திற்கு உரக்கப் பேசக் கூடச் சக்தி யில்லை.

"ஏண்டா, அம்பி! எத்தனை நாளைக்குடா இந்தப் பெண் இங்கே இருக்க முடியும்? அதென்னமோ அப்பா, அவள் படும் வேதனையிலிருந்து அவளைப் பட்டணத்திலேயே கொண்டு விட்டுடறதுதான் தேவலென்று தோணுகிறது. அதனும் போறேன்னு சொல்று!"

"என்ன அம்மா, நீ! திடீரென்று கொண்டு போய் விட்டுட்டா மாத்திரம் சரியாய்ப் போயிடுமா? அவனுனல் பொறுப்பில்லாமல் திரியருன்! காமாகவா அவளை இங்கு அழைச்சுண்டு வந்தோம்? சரி, எல்லாம் பார்க்கலாம்!" என்று அப்போதைக்கு நான் பதில் கூறிவிட்டேனே தவிர, லலிதாவினுடைய சங்கடத்தைப் போக்க, அவளை அவள் கணவனுடைய இருப்பிடத்தில்—அவன் விரும்பினுலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி—கொண்டு போய் விட்டுவிட

வேண்டியதுதான் என்ற தீர்மானத்திற்கு வந்தேன்.

ஒரு பெண்ணின் வாழ்க்கையின் இன்பம் முழுதும் அவளுடைய அன்பு ததும்பும் கணவனின் ஆதரவிலேதான் இருக்கிறது என்பதை நான் நன்றாக உணர்ந்திருந்ததால் மேற்படி ஏற்பாட்டிற்கு முற்பட்டேன். நேரே சென்று ராயப்பேட்டையில் இருக்கும் என் நண்பன் சந்துருவின் வீட்டில் இறங்கி, பிறகு மாப்பிள்ளையை அணுகலாம் என்ற ஆலோசனையின் பேரில் ஏற்பாடுகள் நடந்தன.

2

எனக்குப் பிறகு பதினைந்து வருடங்கள் கழித்து என் பெற்றோர்களுக்கு லலிதா பிறந்தாள். தேவைக்கு மேற்பட்ட செல்வம் இருந்த காரணத்தினாலும், வெகு நாட்களுக்குப் பிறகு பிறந்த சலுகையாலும், லலிதா செல்லமாக வளர்க்கப்பட்டாள். வேறு சோதர சோதரிகள் இல்லாததினால் இயல்பாகவே உள்ள சகோதர வாஞ்சை அதிகப்படியான அளவில் எங்களிருவரிடையே பரிணமித்தது. "அண்ணா!" என்று வாய் நிறைய அவள் அழைக்கும் போது நான் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லிமுடியாது.


எங்களைப் பற்றிய இன்பக் கனவுகள் நனவாகு முன்னரே என் தகப்பனார் இறந்து விட்டார். குடும்பப் பொறுப்பையும் லலிதாவின் விவாகப் பொறுப்பையும், அதோடு கூட ஏராளமான செல்வத்தையும் எனக்கு விட்டுவிட்டு அவர் போயிருந்தார்.

லலிதா இயற்கையிலேயே நல்ல அழகி. வாழ்க்கைக்குத் தயாராக இருந்த அவளுக்காக நான் வரன் தேட ஆரம்பித்தேன். சில நாட்களுக்குள்ளேயே நான் கணேசனைச் சந்திக்க நேரிட்டது. இதை என் அதிர்ஷ்டம் என்று கூறுவதைக் காட்டிலும், லலிதாவினுடைய அதிர்ஷ்டம் என்று சொன்னால் அது மிகையாகாது.

கணேசன் அசாதாரணமான அழகு படைத்திருந்தான். அத்துடன் படிப்பும் ஐசுவரியமும் அந்தஸ்தும் உள்ள ஒரு கணவனை அடையப் போகிறோம் என்பதில் லலிதாவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆனால் அந்த அழகுக் கணவனோடு லலிதா ஒன்றரை வருஷம்தான் குடித்தனம் செய்தாள். காலத்தின் சுழற்சியிலே விபரீதப் போக்குகளுக்கு அடிமையாகி விட்ட அவன், லலிதாவிடம் மிகவும் மூர்க்கமாக நடந்துகொள்ள ஆரம்பித்தான். நாகரிகத்தின் பெயரால் நடந்துவரும் பல அக்கிரமங்களுக்கு அவன் தன்னை ஈடுகொடுத்துக் கொண்டதுமல்லாமல், ஒரு பிரபல ஸினிமா நடிகையின் பின்னால் அவளுடைய அன்பைப் பெறுவதற்காகச் சுற்றிக் கொண்டிருந்தான்.

நாளுக்கு நாள் அவன் செல்வமும் புத்தியும் அந்த நடிகைக்காக விரயம் செய்யப்படுவதைக் கேட்க எனக்கு அளவில்லாத வருத்தம் உண்டாயிற்று. அழகுள்ள கணவன் என்று ஆசைப்பட்டுக் கொடுக்கப்போக அது இவ்வளவு தீங்காக முடிந்ததே என்ற ஏக்கத்தில் நான் செயலற்றுப் போனேன். மாப்பிள்ளைகளின் முட்டாள்தனத்திற்கும், முரட்டுச் செயல்களுக்கும் பெண்ணைக் கொடுத்தவர்கள் அனுபவிப்பது வருத்த

அபஸ்வரம்!



சங்கீத வித்வான் :—ரேடியோவை மூடித் தொலைடா! கழுதைபோல ரொம்ப அபஸ்வரமாகக் கத்திக் கொண்டிருக்கிறான்!

சிஷ்யன் (வானொலியைப் புரட்டிப் பார்த்துவிட்டு):—இதோ மூடிவிடுகிறேன்! உங்களுடைய ஒலிப்பதிவு ரிகார்டைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

மும் வேதனையும்தானே? — அது தான் எனக்கும் மிஞ்சிற்று!

3

காற்றைக் கிழித்துக்கொண்டு கடுவேகமாய்ச் சென்னையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது திருவனந்தபுரம் பாஸ்ட் பாஸஞ்சர். 'ஹோ' என்ற காற்றின் இரைச்சல் போலவே, என் உள்ளத்திலும் பற்பல எண்ணங்கள் சுழன்று சுழன்று வந்து சூறுவளிபோல் அடித்துக் கொண்டிருந்தன. இரண்டாம் வகுப்பு வண்டியில் சௌகரியமாகப் பிரயாணம் செய்தபோதிலும் எங்களுக்குத் தூக்கமே வரவில்லை. கவலைகளின் இடைவிடாத நினைவில், உடம்பில் தூக்கத்தின் உணர்ச்சி தலைகாட்டுமா, என்ன?

சோகமே உருவாய் உட்கார்ந்திருந்தாள் லலிதா. கணவனுடைய இன்ப ஸ்பரிசத்தில் ஆனந்தத்தையும், நிம்மதியையும் அநுபவிக்க வேண்டிய அவள் உள்ளம், இருண்ட வாழ்வின் எதிர்காலத்தைக் கற்பனை செய்து கொண்டிருந்தது போலும்!


எப்பொழுதோ காணப்போகும் முடிவிடத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் அந்த ரயிலைப்போல, அவள் எண்ணங்களும் அவளுடைய இருண்ட வாழ்வின் விடிவை நோக்கி ஓடிக்கொண்டிருந்திருக்க வேண்டும். அவளுடைய கஷ்டங்கள் விடிந்து விடுமா ......?

உணர்ச்சியின் வேகத்தால் உந்தித் தள்ளப்பட்ட லலிதா, மௌனத்தைக் கலைத்துக் கொண்டு என்னைக் கேட்டாள் :—

“அண்ணா! என் வாழ்வு இப்படியே வெறிச்சிட்டுப் போய்விடுமா, என்ன?”

“அசடே, எதையாவது நினைச்சுண்டு ஏன் இப்படி அலட்டிக்கிறே? தவறான வழியிலே போறோம்னு அவனுக்கு எத்தனை நாளைக்குத்தான் தெரியாமல் இருக்கும்? தானே எல்லாம் சரியாய் விடும், கவலைப்படாதே!” என்று இலக்கிய ரீதியில் நான் அவளைச் சமாதானப் படுத்த முயன்றேன்.





வீட்டு அம்மாள் (தையற்காரனைப் பார்த்து):—நாலு மாசமாகத் துணியைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்தேன்: ஏதோ இப்போதாவது கொண்டு வந்தீரே!

தையற்காரர்:—எட்டு மாசமாகக் காத்துண்டிருக்கிற வீட்டுக்கு அல்லவா கொண்டு வந்தேன்? அது அடுத்த வீடு போலே யிருக்கிறது! போய் வரேன், அம்மா!

விழுப்புரத்தில் வண்டி நின்றதும் வெளியே போய் நல்ல பழங்களாக நாலு வாங்கிக் கொண்டு திரும்பியபோது, வண்டியில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. ஒரு வயதான கிழவரும், அவருடைய பேத்தி என்று மதிக்கத்தக்க ஒரு யுவதியும் நாங்கள் ஏறியிருந்த பெட்டியில் பிரயாண மூஸ்திபுகளுடன் தென்பட்டார்கள்.

அந்த யுவதிக்கு வயது இருபத்திரண்டு இருக்கும். அவ்வளவாகச் சிவப்பு என்று சொல்ல முடியாதென்றாலும், நல்ல தேகக் கட்டுடன் ஒருமாதிரி அழகுடன் இருந்தாள். 'கலகல' வென்று அவள் கிழவரிடம் பேசிக் கொண்டிருந்த விதத்திலிருந்து, யாரையும் அவள் தன் பேச்சினால் கவர்ந்துவிடும் சக்தியுடையவள் என்பது புலனாயிற்று. வேண்டிய அளவுக்கு மேலேயே பணம் படைத்தவள் என்பதை அவள் போட்டுக் கொண்டிருந்த நகைகளிலிருந்து நிதர்சனமாக யாரும் கண்டு பிடித்து விடலாம். ஒரு முறை பார்த்து விட்டால் யாரும் அவளை மறந்துவிட முடியாது. வண்டி கிளம்புவதற்குள் பெண்கள் ஒரு புறமாகவும், நானும் கிழவரும் மற்றொரு புறமாகவும் மாறி உட்கார்ந்து கொண்டோம்.

ஸ்திரீகளிடம் இயல்பாகவே ஒரு குணம் விசேஷமாக அமைந்திருக்கிறது. பிற ஸ்திரீயுடன் வெகு சீக்கிரத்தில் அவர்கள் சண்டையையும், சிநேகத்தையும் ஏற்படுத்திக் கொண்டு விடுவார்கள். இதை நிரூபிப்பதுபோல லலிதாவும் அந்த யுவதியும் சிறிது நேரத்துக்கெல்லாம் சல்லாபிக்க ஆரம்பித்து விட்டார்கள். கிழவர் என்னிடம் சற்று நேரம் சம்பிரதாயத்திற்காகப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தூங்க ஆரம்பித்தார்.

சக்தியை மீறின அசதியின் காரணமாக என் உடலிலும் தூக்க உணர்ச்சி பரவியது; நான் சற்றுக் கண்ணயர்ந்தேன். எவ்வளவு நேரம் தூங்கியிருப்பேனோ தெரியாது; ரயில் வண்டி பிரிவுப் பாதைகளில் ஓடுவதாலுண்டான சப்தத்திலிருந்து அரைத் தூக்கத்தின் மோன நிலைக்கு வந்தேன்.

வண்டி செங்கற்பட்டைத் தாண்டிக்கொண்டிருக்கும்போது நான் நன்றாக விழித்துக் கொண்டேன். அந்தக் கிழவரும் யுவதியும் அப்போது அங்கில்லை. லலிதா இன்னமும் விழித்துக் கொண்டுதான் இருந்தாள். அந்த முன்பின் தெரியாத ஸ்திரீயிடம் தன் மன உணர்ச்சிகளை ஓரளவு வெளிப்படுத்திக் கொண்டதன் மூலம், அவள் முகத்தில் சற்றுத் தெளிவுகூட ஏற்பட்டிருந்தது.

“அவர்களெல்லாம் செங்கற்பட்டிலேயே இறங்கிப் போயிட்டா, அண்ணா! அவள் ஒரு ஸினிமாக்காரியாம். 'இவ'ரைக்கூட அடிக்கடி பார்த்திருக்கிறாளாம்!” என்று லலிதா என்னிடம் தெரியப்படுத்தினாள், தன் புது சிநேகிதியைப் பற்றி.

தூக்கத்திலிருந்து எழுந்திருந்ததால் உண்டான அறிவுத் தெளிவில், லலிதா கூறிய செய்திச் சுருக்கம் என் மனதில் என்னென்னவோ நினைவுகளைப் பளிச்சிட்டன. அப்படியும் இருக்க முடியுமா, என்ன? ஏன் இருக்கக் கூடாது?

4

ஸ்டேஷனுக்குச் சந்துரு வந்திருந்து எங்களை ராயப்பேட்டைக்கு அழைத்துச் சென்றான். அவன் சொன்னதிலிருந்து

கணேசன் ஊரில் இல்லையென்றும், வருவதற்கு நான்கு நாட்கள் பிடிக்குமென்றும் தெரிந்து கொண்டேன். கணேசனுக்கு வரவரக் கடன் தொல்லைகள் அதிகரித்து வருவதாகவும், அவனே 'அந்த 'வினிமா கடிகை' இப்போது லட்சியம் செய்வதில்லையென்றும், அதனால் கணேசன் ரொம்பவும் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் நான் கேள்விப் பட்ட போது எனக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருந்தது. என் தங்கையின் கஷ்டங்கள் விடிந்து, அவள் சுகவாழ்வு பெற இதெல்லாம் ஏற்பட்டுத்தானே தீரவேண்டும் என்ற மனக் கிளர்ச்சியில், சந்தோஷம் இயல்பாகவே உண்டாகத்தானே செய்யும்?

கடைசியில் கணேசனைச் சந்தித்தேன். ஏதோ பேயறைந்தவன் போல, அவன் உடம்பு இளைத்துப் பரிதாபகரமாகக் காட்சியளித்தான். அவனிடம் எவ்வளவோ சண்டை பிடிக்க வேண்டியிருக்குமென்று நான் நினைத்தேன். அதற்கு மாறாக, நான் மிகவும் சுயமாகவே லலிதாவுடன் குடித்தனம் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சொன்னதும், அவன் என் வேண்டுகோளுக்கு இணங்கிவிட்டான். லலிதாவை இவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாக்கி விட்டதைப் பற்றி வருத்தமும் பட்டான்!

வெகு நாட்களுக்குப் பிறகு இப்போது தான் என் மனதில் சந்தோஷ உணர்ச்சி நிறைந்தது. லலிதாவைக் குடியும் குடித்தனமுமாகப் பார்ப்பதில் என் மனம் பூரித்துப் புளகாங்கித மடைந்தது.

இவ்வளவுக் கிடையிலும் கணேசனின் இந்த மகத்தான மாறுதலுக்குக் காரணம் எனக்குப் புதிராகவே இருந்தது. அதையும் நான் ஊருக்குக் கிளம்பிய மாலை லலிதாவே தீர்த்து வைத்தாள். யதேச்சையாக அவள் கணவன் பையிலிருந்து எடுத்த போட்டோவையும் கடிதத்தையும் என்னிடம் கொடுத்த போதுதான் என் சந்தேகம் தீர்ந்தது. அந்தப் போட்டோவில் இருந்தவர்கள் யார் என்கிறீர்கள்? நாங்கள் ரயிலில் சந்தித்த யுவதியும் கணேசனும்தான்!

கடிதத்தில் பின்வருமாறு எழுதி யிருந்தது:

ஸ்ரீ கணேஷ் அவர்களுக்கு,

தாங்கள் என்னிடம் எவ்வளவோ பிரேமை கொண்டிருக்கிறீர்கள். அந்தப் பிரேமைக்குப் பாத்திரம் நானல்ல என்று அறிந்தபோது எனக்கு மிகவும் வருத்தம் உண்டாகிவிட்டது. தாங்கள் ஏற்கெனவே மணியானமானவர் என்பதை நான் சமீபத்தில்தான் அறிய நேர்ந்தது. தங்களுடைய அன்பிற்காக ஏங்கிக் கிடக்கும் அழகுள்ள மனைவிக்கு நான் துரோகம் செய்வது பாவம். என்னை மறந்துவிடுவதுதான் தாங்கள் எனக்குச் செய்யும் பேருதவி. —கீதா.



நியாயந்தான் !

பிரதிவாதியின் வக்கீல் ஒரு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வக்கீல் :—வாதியும் பிரதிவாதியும் சண்டை போட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்தேன் என்கிறாயே, நீ ஏன் வாதிக்கு உதவி செய்யவில்லை?

சாட்சி :—யார் வாதி, யார் பிரதிவாதி என்று எனக்கு அப்பொழுது எப்படித் தெரியும், ஸார்?

★

எப்படி ?

மனைவி :—இந்தப் புடவை என்ன விலை?

கணவர் :—அதிலேயே ஒரு சீட்டில் விலை எழுதி யிருக்கிறது, பார்!

மனைவி :—சீட்டையும் காணோம், ஒன்றையும் காணோம்!

கணவர் :—எழுபத்திரண்டு ரூபாய்!

மனைவி :—முப்பது ரூபாய் என்றல்லவா இந்தச் சீட்டில் எழுதி யிருக்கிறது?

கணவர் :—சீட்டைக் காணவில்லை என்று சொன்னாயே!

மனைவி :—நீங்கள் உண்மையைச் சொல்லுகிறீர்களா என்று பார்த்தேன்......!

கணவர் :—நானும் அந்தப் புடவையில் சீட்டு இருக்கிறதா என்று தெரிந்து கொள்ளப் பார்த்தேன்......!

★

ஊகம் !

தந்தை :—நான் முதன் முதலில் வெறும் குமாஸ்தாவாகக் கை கட்டி உத்தியோகம் செய்து கொண்டிருந்தேன். எனது இருபத்தைந்தாவது வயதில் நானே எஜமானன் ஆனேன்.........

மகன் :—அதற்குப் பிறகுதான் அம்மாவைக் கல்யாணம் செய்துகொண்டாயாக்கும்!

★

உண்மை

நண்பர் (வக்கீலிடம்) :—உங்களை ஒரு கேள்வி கேட்கணும்; கேட்பதற்குப் பணம் தரவேண்டுமா?

வக்கீல் :—கேள்விக்குப் பணம் தரவேண்டியதில்லை; பதிலுக்குத்தான் பணம்!



அன்புப் பரிசு

விஜயம்

ராஜகுமாரன் வீரசிம்மனுக்கு வேட்டை ஆடுவதில் அலாதி உற்சாகம். தினந்தோறும் காலையில் எழுந்ததும் குதிரையில் ஏறிக்கொண்டு காட்டை நோக்கிப் புறப்பட்டு விடுவான். காட்டில் ராஜகுமாரனுக்கு ஓர் அருமை நண்பன் கிடைத்தான். அவன் ஓர் ஏழை வேடச் சிறுவன். ராஜகுமாரனும் வேடப் பையனும் வெகுநேரம் வேட்டையாடுவார்கள். அப்புறம் இருவரும் அலுத்துப் போய்க் காட்டாற்றங் கரைக்கு வந்து சேருவார்கள். வேடப் பையன் தன் குடிசைக்குப் போய் வள்ளிக் கிழங்குகள் கொண்டு வருவான். அதை இருவருமாகச் சாப்பிட்டு விட்டுச் சலசல வென்று தெளிவாக ஓடும் ஆற்று ஜலத்தை அள்ளிக் குடித்து இளைப்பாறுவார்கள்.

சில வருஷங்களுக்குப் பிறகு வீரசிம்மனின் தகப்பனார்—அவ்வூர் மகாராஜா—காலமாகிவிட்டார். வீரசிம்மன் இப்போது அந்தத் தேசத்துக்கு ராஜாவாகி விட்டான்.

காட்டில் வசிக்கும் அந்த ஏழை வேடச் சிறுவனும் இப்போது பெரியவனாகி விட்டான். அவனுக்குக் கல்யாணமாகி மனைவியும் வீட்டுக்கு வந்து விட்டாள். தானும் அந்த ஊர் ராஜ குமாரனும் சின்ன வயதில் சேர்ந்து விளையாடினதை யெல்லாம் அடிக்கடி வேடன் தன் மனைவியிடம் சொல்லிப் பெருமைப் பட்டுக்கொள்ளுவான். ஆனால் முன்மாதிரி அவன் வாழ்க்கை இப்போது அவ்வளவு சௌகரியமாகச் செல்லவில்லை.

ஒருநாள் அவன் மனைவி, "உனக்குத்தான் ராஜகுமாரனை நன்றாய்த் தெரியுமே! ஒருநாள் அவரைப் போய்ப் பார்த்து விட்டு வாயேன்; நம்ம கஷ்டங்களெல்லாம் விடிந்து போய் விடுமே!" என்று சொன்னாள்.

இதைக் கேட்டதும் வேடன் பெரிய சிரிப்புச் சிரித்தான்.

"ராஜா என்றால் உன் மனசுக்குள் என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நாம் இருக்கிற நிலைமைக்கும் அவர் இருக்கிற நிலைமைக்கும் ஏணி வைத்துத்தான் பார்க்கணும், தெரியுமா?"

"நீயாக அப்படிச் சொல்லாதே! போய்த்தான் பார்த்து விட்டு வாயேன். அப்படி மகாராஜா உன்னை மதித்துப் பேசா விட்டால் உனக்கு ஒன்றும் குறைந்து போய்விடாது. நீகூட மகாராஜாவா, என்ன? ராஜாமாதிரி வீட்டுக்கு வந்துவிடு!"

மனைவியின் தொந்தரவு பொறுக்க முடியாமல், வேடன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றான். போகும்போது வள்ளிக்கிழங்கு நிறையச் சேகரித்து மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டான்.

நீண்ட தூரம் நடந்து போகவேண்டியிருந்தபடியால், வேடன் அந்தக் கிழங்குகளை ஒவ்வொன்றாகத் தின்று கொண்டே போய் நகரத்தை அடைந்தான். அரண்மனைக்கு அவன் எப்படிப் போக முடியும்? மகாராஜாவின் பால்ய நண்பன் என்று அவன் யாரிட

மாவது சொன்னால், அவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அல்லவா அனுப்பி வைப்பார்கள்? ஆகையினால் அவன் மகாராஜா வரும் வழியில் ஒரு மரத்தடியில் நின்று காத்துக்கொண்டிருந்தான். ஒரே ஒரு வள்ளிக்கிழங்கைப் பத்திரமாக வைத்திருந்தான். மகாராஜாவுக்குக் கொடுக்க வேண்டாமா?

டக்டக்! டக்டக்! டக்டக்! டக்டக்!

இதோ, மகாராஜா வருகிறார்!

வேடன் பய பக்தியுடன் கைகுவித்து அந்த வள்ளிக் கிழங்கை மகாராஜாவிடம் கொடுத்தான். அரசன் அன்புடன் அதைக் கையில் வாங்கிக் கொண்டு, தர்பார் மண்டபத்துக்கு வரும்படிச் சொல்லிவிட்டுப் போனான்.

அரசன் உத்தரவுப்படி வேடன் தர்பார் மண்டப வாசலில் காத்திருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அரண்மனைச் சேவகன், வேடனை மரியாதையுடன் அரசனிடம் அழைத்துப் போனான். அரசன் அவன் குடும்ப சௌகரியங்களையெல்லாம் விசாரித்துவிட்டு ஆயிரம் பவுன் கொடுத்து அனுப்பி வைத்தான்.

இதையெல்லாம் காலையிலிருந்து கவனித்து வந்த அரண்மனை வேலையாள் ஒருவன் மறுநாள் காலையில் மன்னனை வேடன் சந்தித்த இடத்திலேயே சந்தித்து, ஒரு கூடை ஆப்பிள் பழத்தை வணக்கத்துடன் கொடுத்தான். அரசன் அதை வாங்கிக் கொண்டு, அவனைத் தர்பார் மண்டபத்துக்கு வரச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ஒரே ஒரு வள்ளிக் கிழங்குக்கே அரசன் ஆயிரம் பவுன் கொடுத்தானே, ஒரு கூடை ஆப்பிள் பழத்துக்கு எத்தனை பவுன் கொடுப்பான்! ஆகா! இதை நினைக்கும்போதே தாங்க முடியாத சந்தோஷத்தினால் அவன் மூச்சுத் திணற ஆரம்பித்தது.

அரண்மனைச் சேவகன் அவனை அரசன் அழைப்பதாகக் கூறி, தர்பார் மண்டபத்துக்குள் அழைத்துப் போனான். அரசன் புன்னகையுடன் அவனை வரவேற்று, ஒரு சின்ன மூட்டையைக் கொடுத்தனுப்பினான். அந்த மூட்டைக்குள் இருந்தது பவுனும் இல்லை; பணமும் இல்லை. பின் என்ன? அந்த வேடன் அரசனுக்குக் கொடுத்த வள்ளிக்கிழங்குதான் இருந்தது!



விபரீத யோசனை வேண்டாம்!

ரஜனி

கொழும்பு, 10—4—49

வியாபாரத் துறையில் சிங்களவர்கள் அதிகமாக ஈடுபட வேண்டுமென்றும் அதற்கு அனுசரணையான சூழ்நிலையை வெகு சீக்கிரத்தில் உண்டுபண்ணப் போவதாயும் இலங்கை வர்த்தக மந்திரி ஸ்ரீ அமரசூரியா சில தினங்களுக்கு முன் ஒரு பொதுக் கூட்டத்தில் சொன்னார். அவர் அப்படிச் சொல்லுவதற்குப் பல வாரங்களுக்கு முன்னிருந்தே, அதாவது சென்ற ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து இந்திய இறக்குமதி வியாபாரிகளுக்கு விரோதமாக அரசாங்கம் ஒரு நடவடிக்கையை எடுத்தது. இலங்கையின் பணம் வெளிநாடுகளுக்குப் போவதைக் குறைக்க வேண்டுமென்று காரணம் சொல்லிப் பல்வேறு சாமான்களையும் இறக்குமதி செய்ய இந்திய வியாபாரிகளுக்கு அளித்திருந்த கோட்டா அளவை ஒன்றுக்குப் பாதியாகவும் கால் பாகமாகவும் குறைத்தது. இப்பொழுது இவ்விதம் குறைத்த கோட்டா, இறக்குமதி வியாபாரத்தில் புதிதாக ஈடுபடுவோருக்குக் கொடுக்கப் படுமென்றும் இலங்கையர்கள் மட்டுமே புதிதாக இறக்குமதி வியாபாரத்தில் இனிமேல் ஈடுபடலாமென்றும் சென்ற வாரம் அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்திருக்கிறது.

இந்தப் புதிய உத்தரவினால் இந்தியர்கள் இரண்டு வகையில் பாதிக்கப்படுகிறார்கள். நீண்ட காலமாக இறக்குமதி வர்த்தகத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் இந்திய வியாபாரிகள் தங்களுடைய தொழிலை ஒன்றுக்குப் பாதியாகக் குறைத்துக்கொண்டு அதற்குத் தக்கபடி சிப்பந்திகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக இந்தியர்கள் புதிதாகக் கடை திறந்து சாமான்களை இறக்குமதி செய்து விற்க முடியாது என்பதோடு, யுத்த காலத்தில் தாற்காலிகமாகத் தொழிலை நிறுத்தி வைத்திருந்தவர்களும் மறுபடி தொழிலை ஆரம்பிக்க முடியாது. இதுமட்டுமல்ல; 1947-ம் வருஷத்தை அரசாங்கம் அடிப்படை வருஷமாகக் கொண்டிருப்பதால் வழக்கமான இறக்குமதி வர்த்தகர்கள் கூடக் குறிப்பிட்ட சில சாமான்கள் கையிலிருந்து, அவைகளை 1947-ம் ஆண்டில் இறக்குமதி செய்யாமலிருந்தால் இவ்வருடம் அந்தச் சாமான்களை இறக்குமதி செய்ய முடியாது. இந்த உத்தரவு இந்திய வியாபாரிகளை வெகு கடுமையாகப் பாதிப்பதாயிருக்கிறது. இதை விட இந்தியர்கள் வியாபாரம் செய்வதை இனி அனுமதிக்கப் போவதில்லை என்று பகிரங்கமாகச் சொல்லிவிடலாம்!

நாடு கடத்தும் முயற்சியா?

1939-ம் ஆண்டில் அரசாங்க சேவைகளிலிருந்த தினச் சம்பள இந்தியத் தொழிலாளரை 'டிஸ்மிஸ்' செய்து இந்தியாவுக்கு நாடு கடத்தியதும், அந்த நெருக்கடியைச் சமாளிக்கப் பண்டித நேரு இலங்கைக்குப் பறந்து வந்ததும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதே போன்ற ஒரு ஆபத்து மறுபடியும் ஏற்படுமோ என்று அஞ்சப்படுகிறது. இலங்கையில் வேலையற்றோர் பிரச்னையைத் தீர்ப்பதற்காகப் பத்து மந்திரிகள் அடங்கிய ஒரு கமிட்டியை மந்திரி சபை நியமித்திருக்கிறது. கொழும்பில் பல்வேறு இடங்களிலும் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளரை உடனே 'டிஸ்மிஸ்' செய்து அந்த இடங்களில் வேலையற்ற சிங்களவர்களை நியமிக்க வேண்டுமென்றும் இதற்குத் தொழிலாளரை அமர்த்திக் கொண்டிருக்கும் எல்லா முதலாளிகளுடைய ஒத்துழைப்பையும் உடனே நாடவேண்டுமென்றும் மேற்படி கமிட்டியிடம் போலீஸ் மந்திரி ஸ்ரீ ஜே. ஆர். ஜயவர்த்தன ஒரு யோசனை சொல்லியிருக்கிறார். அந்த யோசனையைக் கமிட்டியும் ஒப்புக் கொண்டிருப்பதாகச் சென்ற வாரம் ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. இந்த யோசனையை எதிர்க்கட்சித் தலைவரான என். எம். பெரேராவும் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஜீஸும் பெரிய அநியாயமென்று பலமாகக் கண்டித்திருக்கிறார்கள்.

NO. 1

ஜன்னலுக்கு வெளியே...

வேம்பு

'நடக், நடக்' என்று அச்சியந்திரம் ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் பழைய 'ஸிலிண்டர் மிஷின்' நுரை ஒவ்வொரு சமயம் 'பாரம்' ஏற்றிய கட்டை வண்டியின் நினைவை ஊட்டும்; ஆம், அதுவும் ஒரு வகையில் அறிவுப் பாரத்தை எழுத்தளவில் ஏற்றிக் கொண்டுதான் இருந்தது. இதோ, இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் அது ஓடி முடிந்துவிடும். முடிவதற்குள் கையிலுள்ள 'புரூப்'பைத் தயாராகத் திருத்திக் தந்துவிட வேண்டும்.

மேஜையின் மீது 'புரூப்'பும், திறந்த பேனாவும் அப்படியே இருந்தன. அந்த அச்சகம் இருந்த சந்தை நோக்கினாற்போல் என் அறையின் ஜன்னல். அறை என்று பெயரே யொழிய, பழைய பிளாக்குகளும், பழைய 'கட்டிங் மிஷின்' ஒன்றும் காலி மைடின்களும் நிறைந்த பழம்பொருள் சேமிப்பு இலாகாவாகவே அது இருந்தது. உடைந்த நாற்காலி, அதன்முன் நாட்டியமாடும் மேஜை —இவ்வளவு சூழ்நிலைகளையும் மறந்துதான் நான் திருத்திய பத்திரிகை 'தடால், தடால்' மிஷினில் ஓடி, கறுப்பு, சிவப்பு வர்ணமடிக்கப்பட்டு மினுக்குடன் வெளிவருகிறது.

அந்த ஜன்னல் என்றால் எனக்கு அலாதிப் பிரியம். நிசப்தம் நிறைந்த அந்தச் சந்தின் இரண்டு ஓரங்களிலும் குடித்தனம் செய்யும் கூலியாட்கள், ரிக்ஷா வாலாக்களின் மனைவிமார்கள் ஆகியவர்கள் இடும் சத்தத்தைத் தவிர வேறொரு சத்தமும் வராது. அத்தகைய இடம் பட்டணத்து மனுஷனுக்கு நிம்மதியளிக்காவிடில் வேறு யாருக்குத்தான் நிம்மதி அளிக்கும்?

மேஜையின்மீது பேனாவை வைத்து விட்டுச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் போதெல்லாம் வேலாயியோ அவள் தம்பியோ ஜன்னல் கம்பியின் ஓரமாக நின்று என்னுடன் ஏதாவது பேசிக் கொண்டிருப்பார்கள்.

அந்தச் சந்து சிறியதுதான். ஆனால் அந்தச் சந்தின் இரண்டு ஓரங்களையும் குடியிருப்பு இடங்களாகக் கொண்டு, உண்பது முதல் பின்னைப்பேறு வரை அங்கேயே நடத்தி நிம்மதியாக வாழும் குடும்பங்களில் வேலாயியும் ஒருத்தி.

பொதுவாக அந்த நடை பாதைக் குடும்பங்களின் நடவடிக்கையும், ஆபாசமான பேச்சும், சதா சண்டையும் பார்ப்பவர்களை வெறுப்புக் கொள்ளும்படிச் செய்யும்.

ஆனால் அதற்கு விதிவிலக்கு வேலாயி. அநேகமாக அவள் மற்றக் குடும்பங்களோடு சம்பந்தப்படுவதில்லை. இந்த மாதிரியாகச் சென்னையின் தெருக்களில் வந்து குடியேறிப் பாதையின் ஓரத்தில் சமைத்து, சொந்தத் தம்பி அங்கமுத்து ரிக்ஷா இழுக்க, அவளும் பிடித்த வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று ஆறு வருஷங்களுக்கு முன் அவள் நினைத்திருப்பாளா?

அவள் தன்னைப்பற்றிக் களங்கமில்லாமல் சொன்ன கதை இருக்கிறதே, அதுதான் என் மனதைக் கவர்ந்து விட்டது. அவள் நடத்தும் தூய வாழ்வு இருக்கிறதே, அது தான் என்னை ஆகர்ஷித்துவிட்டது.

பொதுவாக ஒழுங்கீனமான மக்களைத் தான் அங்கு பார்க்கலாம். ஆனால் வேலாயியும், அவள் தம்பி அங்கமுத்துவும் ஒருவருடனும் சம்பந்தப்படாமல் தனித்தே வாழ்ந்து வந்தார்கள். அங்கமுத்துவுடனாவது பச்சையம்மாள் என்பவள் சில வேளை தங்கிப் பேசி விட்டுப் போவாள். ஆனால் வேலாயியை நெருங்க அந்த வட்டாரத்தில் ஒருவருக்கும் துணிவு கிடையாது.

2

வேலாயிக்கு இப்பொழுது இருபத்தைந்து வயதிருக்கலாம். கதைகளில் சாதாரணமாக வர்ணிக்கும் அளவுக்கு அழகியாக இல்லாவிடினும் அவள் முகத்தில் ஜீவன் இருந்தது. அமைதி நிறைந்த அந்த முகத்தில் துன்பக் கோடுகள் விழுந்திருந்தாலும் அதில் ஒளியிருந்தது.

அவள் வாழ்வில் நிம்மதியைத் தேடித்தான் பட்டணம் வந்தாள். கண்ணப்பட்டி கிராமத்தில் அவள் இருந்திருக்கலாம்; கழனி வரப்பில் ஏதாவது வேலை செய்துகொண்டு யாரையாவது க லி யா ண மு ம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் நிலவுடையாரின் பரம்பரையில் வந்த அந்த வீரத் தமிழச்சி வடிவேலுவைத் தவிர வேறு யாரையாவது நினைப்பாளா?

கண்ணப்பட்டி கிராமத்தில் சாதாரண குடியானவன் மகளாக வேலாயி பிறந்தாள். துணையாக அங்கமுத்துவும் பிறந்தான்.

இரண்டு பேரின் அதிர்ஷ்டமோ என்னவோ, சின்ன வயதிலேயே அவர்கள் தாயை இழந்து விட்டார்கள்.

பண்ணையில் அண்டிப் பிழைக்கும் தன் அப்பனுக்குத் துணையாக வேலை செய்து கொண்டு வேலாயி வளர்ந்து வந்தாள். கள்ளங்கபடமற்ற வேலாயியின் மனதை வடிவேலு கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. காதல் இலக்கியங்கள் அவர்கள் படித்ததில்லை; கிராமத்து வயலில் நடவு நட்டுப் பணியாற்றும்போது பேசிக் கொண்ட பேச்சுக்கள்தான் அன்பை வளர்த்தன; அது வளர்ந்தது.

வேலாயியும் வடிவேலுவும் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசுவது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் வேலாயியின் தகப்பனாரிடம் செய்தியை ஒன்றுக்கு மூன்றாக முடித்து சொன்னார்கள்.

எழுபது ஆண்டு அனுபவமும், தப்புத் தண்டாவுக்குப் போகாத அளவுக்கு உத்தம குணமும் நிறைந்த வேலாயியின் தகப்பன் மற்றவர்களைப் போல் இதைக் கேட்டவுடன் பதட்ட மடைந்துவிடவில்லை. மிகவும் சாந்தமாக அவன் யோசனை செய்தான்.

அன்று வேலாயியின் குடிசைக்குள் வடிவேலு எதிர்பாராத விதமாக நுழைந்தான். வேலாயி அந்தச் சமயம் அங்கு இல்லை.

"யார், அது?" என்றான் வேலாயியின் தகப்பன்.

"நான்தான் வடிவேலு!" என்றான் வடிவேலு மெள்ள.

அவன் வேலாயியின் தகப்பனை அச்சமயம் அங்கு எதிர்பார்க்கவே யில்லை.

"டேய், பயலே! உனக்குக் காலம் கெட்டு விட்டதாடா? என்ன துணிச்சலடா, உனக்கு? வயசு வந்த மவளோடே பேசறயாமே? இந்த ஊரிலே எந்தத் தலை முறையிலேடா இதுபோல வழக்கம் நடந்திருக்குது?" என்றான் வேலாயியின் தகப்பன்.

காதல் செடிதான் வடிவேலுவின் இதயத்தில் வேரூன்றியிருக்கிறதே, அது இந்தப் புயலுக்கெல்லாம் தலை சாய்ந்து விடுமா?

"அப்பா...!" என்றான் மெதுவாக. "உங்களுக்குத் தெரியாததல்ல, அப்பா! வயசு வந்த பெண்ணோடே திருட்டுத்தனமாக அவள் விரும்பாமே பேசுவது தவறு... இரண்டு பேரும் ஒத்துப் போய், பிறர் அறியப் பேசுவதிலே பயம் ஒன்றுமில்லை என்று நாங்களிருவரும் எண்ணும் அளவுக்கு எங்கள் ஆசை வளர்ந்திருக்கிறபோது, பேசுவதை நாங்கள் தவறு என்று எண்ணவில்லை, அப்பா!" என்றான் ரொம்ப சாவதானமாக.

வடிவேலு 'அப்பா!' என்றதும் சொரேல் என்றது கிழவனுக்கு. 'என்ன உறவு கொண்டாடுகிறான், பயல்!' எனக் கருவினான். 'இவன் சேதி தெரியாதா? ஊர் பேர் தெரியாத பயல். இவன் அப்பன் ஆத்தாளை விட்டுவிட்டு இலங்கைச் சீமைக்கு ஓடிப்போய்த் திரும்பி வராத கதை எனக்குத் தெரியாதா? பேர் தெரியாப் பய வயசு வந்த மவளோடு பேசிப்புட்டுக் கதை படிக்கிறான், கதை!' என்று அவன் இதயத்திலிருந்து ஒரு குரல் வேகமாக எழுந்து அடங்கிக் கிடந்த கோபத்தைத் தூண்டிவிட்டது.

"எய், என்னடா சொன்னே? இரண்டு பேர் மனசும் ஒத்துப்போய் விட்டதா? என்னத்தையடா கண்டே நீ? சிறிசு; கொழந்தை அவள்! டேய், நான் ஆண்டிப் பிள்ளையின் மவன் ஆறுமுகமாயிருந்தா உன்னை ஊரை விட்டுத் துரத்தாட்டிப் போறு, பாருடா!" என்று கூவினான்.

வடிவேலுக்கு ஒன்றும் தோன்றவில்லை. வேலாயியோடு சிறிது நேரம் பேசிவிட்டுப் போகலாம் என்று வந்த இடத்தில் இந்தக் கர்ஜனையும், சவாலும் கிடைத்தது பற்றி

ஆஸ்பத்திரியில்!



க்யூவில் நிற்பவர்:—என்ன, ஸார்! கிளம்பி விட்டீர்கள்?

புறப்பட்டவர்:—மருந்துக்காக இந்த க்யூவில் நான் கடுக்க நின்று சாவதைக் காட்டிலும் வீட்டுக்குப் போய்ச் சாவதே நல்லது, ஸார்!



அவனது உள்ளம் ஒரு கணம் திகைத்தது; தடுமாறியது; இளம் ரத்தம் சூடடைந்தது. வேறு யாராவது அவனை அப்படிச் சொல்லியிருந்தார்களானால் அவனது காய்ப்பு காய்த்த கை ஒரு 'பதம்' பார்த்திருக்காதா?

'சரி, இன்று வந்த வேளை சரியில்லை' என்று அவன் நினைத்தான். 'இவரோடு என்ன பேச்சு? பேசாமல் போயிடலாம். வேலாயி சொன்ன யோசனைதான் சரி. சந்தடி செய்யாமல் அவளை அழைத்துக் கொண்டு போய் உப்பிலியப்பன் கோயிலில் தாலி கட்டிப்புட்டு, பட்டணம் வந்துடறது. ஓடிப் போயிட்டான்னுதானே சொல்லுவாங்க; நல்லாச் சொல்லட்டும்!' என்று எண்ணிக்கொண்டு திரும்பினான்.

"டேய், இனி இந்தப் பக்கம் சேஷ்டை பண்ணினேயோ, ஜாக்கிரதை!" என்ற கிழவனின் குரல் அரைகுறையாக அவன் காதில் விழுந்தது.

இதுவரை நடந்ததை யெல்லாம் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த வேலாயி, அன்று இரவு முழுவதும் தூங்கவேயில்லை.

வடிவேலுவின் மனமோ பெரும் யோசனையில் ஆழ்ந்திருந்தது.

மறுநாள் இருவரும் சந்தித்தனர். இன்னும் இரண்டு நாட்களில் உப்பிலியப்பன் கோயிலுக்குப் போய், சாமி எதிரில் கல்யாணம் செய்து கொள்வதென்றும், நான்காம் நாள் பட்டணம் போய்விடுவதென்றும் முடிவு செய்து கொண்டனர்.

அன்று விடியற்காலையில் குறிப்பிட்ட இடத்துக்கு வேலாயியும் வடிவேலுவும் வந்து சேர்ந்தனர். உப்பிலியப்பன் கோயில் மணி 'ஓம், ஓம்' என்று முழங்க, அவர்கள் 'ஜாம், ஜாம்' என்று மணம் முடித்துக் கொண்டனர். இந்த உலகத்திலேயே அதுவரை கண்டிராத இன்பத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

3

வீட்டிலே வேலாயியைக் காணாது ஆறுமுகம் துடித்தான். அந்தத் தள்ளாத வயதிலும் இங்குமங்கும் பரபரப்புடன் ஓடினான். ஆனால் மனுஷன் கெட்டிக்காரன். வெளியே மூச்சுக்கூட விடவில்லை. 'சரி, இந்தப் பயலோடே மகள் ஓடி விட்டாள்!' என்று முடிவு செய்து விட்டான். அடக்க முடியாத ஆத்திரம் உண்டாயிற்று அவனுக்கு.

அன்று சாயங்காலம் வேலாயி குடிசையை யடைந்தாள்.

மகள் திரும்பி வந்து விட்டாள்; ஆறுமுகம் அவளைப் பார்த்தான். தான் எண்ணியது

போல் அவன் ஓடிப் போகவில்லை. ஆனால்... அவள் கழுத்தில்...!

"டேய், கெடுத்து விட்டாயா, காரியத்தை?" என்று குதித்துக் கொண்டு வெளியே ஓடினவன்தான்; அப்புறம் திரும்பி வீட்டிற்கு வரவில்லை.

நேரே கருப்பண்ணனிடமும், பிச்சமுத்துவிடமும் ஓடினான். அவர்கள் ஏற்கெனவே வடிவேலு மீது ஆத்திரம் கொண்டவர்கள். செம்மையாய் மடக்கி நொறுக்கிவிடுவதென்று தீர்மானித்து மூவரும் மதகடியில் வடிவேலுக்காகக் காத்திருந்தார்கள்.

என்ன நேரப்போகிறதோ என்று வேலாயி குடிசைக்குள் உட்கார்ந்திருந்தாள். அன்று காலை இன்ப வேதனை; மாலையிலோ துன்ப வேதனை.

கல்ல மையிருட்டு. குறிப்பாகக் கையிலிருந்த டார்ச்சை அடித்தான் பிச்சமுத்து. 'அதோ, அவன்தான்!' என்றான் மெள்ள. தூரத்தில் இருந்த பஞ்சாயத்து போர்டு விளக்கு வெளிச்சத்தில் வடிவேலு வந்து கொண்டிருந்தது மங்கலாகத் தெரிந்தது.

அடுத்த விநாடி 'தப்பிப்' என்ற சத்தம்; 'சடக்...சளக்' என்ற ஒலி; 'ஐயையோ!' என்ற ஒரு பெருத்த குரல்; 'திடுதிடு' வென ஓடும் ஓசை.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஊரே திரண்டு விட்டது. வேலாயியின் தகப்பன் இரத்தவெள்ளத்தில் கிடந்தான். கருப்பண்ணன் அந்தப் பெரியவரின் தலையைத் தன் தொடை மீது வைத்துக் கொண்டிருந்தான். "பிடியுங்கோ, வடிவேலை! பாவியின் வேலை......!" என்று அவன் கூவினான்.

கூட்டத்தில் இருந்த வேலாயிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அப்பா!" என்று அலறியபடி தகப்பன் மீது விழுந்தாள். அவள் கழுத்திலிருந்த மஞ்சள் கயிறு, கையில் லாந்தர் விளக்குகளுடன் அங்கே நின்று கொண்டிருந்தவர்களின் கவனத்தைக் கவர்ந்தது.


ஆறுமுகம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். ஒன்றும் புரியாமல் திக்பிரமையோடு தன் தகப்பன் தலைமாட்டிலேயே கிடந்தாள் வேலாயி.

வடிவேலு கைது செய்யப்பட்டான். ஆறுமுகம் இறந்துவிட்டான் என்று கேள்விப்பட்டதும் அவன் திடுக்கிட்டான். அன்று இருட்டில் யாரோ தன் மண்டையில் அடிக்க வந்ததையும், யாரோ அலறி விழுந்ததையும், தான் பயந்து ஓடிவிட்டதையும் அவன் அறிவானே யொழிய, ஆறுமுகத்தைத் தான் கொலை செய்தது பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரியாது!

ஆனால் அவன் கேள்விப்பட்டபடி ஆறுமுகம் அப்பொழுது இறக்கவில்லை. சுயநினைவு வரவில்லையே யொழிய உயிர் இருந்தது. வேலாயியின் கண்ணெதிரே வடிவேலுவின் உருவமும், அவன் செய்ததற்காக அவனுக்குக் கிடைக்கப்போகும் தண்டனையும் மாறி மாறி வந்தன. அப்படியே எழுந்து தாலும் அவன் அடைக்கப்பட்டிருக்கும் 'ரிமாண்டு'க்கு ஓடிப் போய்விடலாமா என எண்ணினாள். தகப்பனை விட்டுவிட்டு எப்படி ஓடுவது?

மறுநாள் காலை கண் விழித்தபோது போலீஸ்காரர்கள் நாலு பேரும், அந்த ஊர் மாஜிஸ்டிரேட்டும் தன் தகப்பனாரைச் சுற்றிச் சூழ்ந்திருப்பதைக் கண்டு அவள் திடுக்கிட்டாள். அவர்களுடைய பேச்சிலிருந்து வடிவேலு எப்படியோ அன்று விடியற்காலை ரிமாண்டிலிருந்து தப்பி யோடிவிட்டான் என்பதை அவள் அறிந்தாள். 'ஐயோ! இவருக்கு என்ன இப்படிப் போதாத காலம்! என் வாழ்க்கை பாழாகவா?' என்று எண்ணி அவள் உள்ளம் நொந்தாள்.

பதினெட்டு மணி நேரங்களுக்குப் பிறகு ஆறுமுகம் மெள்ளக் கண் விழித்தான்.



மனைவி:—இந்த மாதச் சம்பளம் பூராவும் கரியாக அடுத்துவிட்டீர்களா? கையில் பாக்கி ஐந்து ரூபாய்கூட இல்லையா?

கணவன்:— உனக்கு எதற்காக ஐந்து ரூபாய்?

மனைவி:—கரி மூட்டை ஒன்று வாங்க வேணும்!

அடி அவ்வளவு பலமில்லை யென்றாலும் வயோதிகத்தின் அதிர்ச்சி அவனுக்குப் பலவீனத்தை உண்டாக்கிவிட்டது.

மெள்ளக் கண் திறந்தான். மாஜிஸ்டிரேட் மரண வாக்குமூலம் கேட்டார். இறப்பதற்கு முன்பே அவன் இறந்துவிடுவான் என்று அவர்கள் வழக்கம் போல் முடிவு செய்துவிட்டார்கள்!

மெல்லிய குரலில் தந்தை கூறி வந்ததைக் கேட்கும்போது 'கோ'வெனக் கதறி விட்டாள் வேலாயி. வடிவேலுவைத் தாக்கப்போன கதையையும், அந்த இருட்டில் தான் மனம் மாறி வடிவேலுவைக் கட்டிப் பிடித்துக் கொண்டதையும், மங்கிய ஒளியில் தன்னுடன் கூட இருந்த கருப்பண்ணனும், பிச்சமுத்துவும் ஒங்கி வடிவேலுவை அடித்த அடி தன் மண்டை மீது பட்டதையும், தான் கீழே பிரக்ஞையற்று விழுந்ததையும் கிழவன் கூறியதைக் கேட்டபோது அவளை யறியாமல் பெரும் விம்மல் ஒலி எழுந்து, அந்த ஆஸ்பத்திரிக் கட்டிடத்தில் எதிரொலித்து, முற்றிலும் பரவியது.

மாஜிஸ்டிரேட்டும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். "அன் லக்கி டாய்!" என்றார் மாஜிஸ்டிரேட். "வடிவேலுவின் மீது குற்றமில்லை என்று ருஜுவாகும்போது அந்தப் பைத்தியக்காரன் சிமாண்டிலிருந்து தப்பி போடிவிட்டானே! பெரிய 'அபென்ஸ்' ஆச்சே!" என்றார் அவர்.

இதற்குள் ஆறுமுகம் மெள்ள வேலாயியின் கையைப் பிடித்து மெல்லிய குரலில், "அம்மா, நீயும் வடிவேலுவும் சுகமாயிருங்கள்! அக்கமுத்துவையும் பார்த்துக்கோ!" என்றான்.

வேலாயிக்கு நெஞ்சை அடைத்தது; 'கோ'வெனக் கதறியபடி அந்த உயிரற்ற பிணத்தின்மீது அவள் விழுந்தாள்.

4

ஒரு வாரம் இரண்டு வாரமென ஓடியது. அப்பாவும் போய், வடிவேலுவும் திரும்பி வாராமற் போகவே, அந்தக் கிராமத்தில் இருக்கப் பிடிக்கவில்லை வேலாயிக்கு. ஊரில் அபவாதம் அதிகமாயிற்று; அவர்களுடைய இழிச்சொல் ஊசி குத்துவது போலிருந்தது. இந்த லட்சணத்தில் வேலாயியினுடைய பைத்தியக்கார மனம் 'ஒரு வேளை வடிவேலு சென்னைப்பட்டணம் போயிருந்தாலும் போயிருக்கலாமல்லவா?' என்று எண்ணியது.

அவளும், அக்கமுத்துவுமாகப் பட்டணம் கிளம்பினர். "ஏன் அக்கா! அம்மாம் பெரிய பட்டணத்தில் ஒரு வேலையாவது கிடைக்காமே போவுதா? வேலையும் தேடிக்கினு, வடிவேலுவையும் தேட முயற்சிப்போமே!" என்ற அக்கமுத்துவின் தைரிய வார்த்தையும், கிராமத்தில் ஏற்பட்ட கசப்பும் அவளைப் பட்டணம் செல்வதற்குத் துரிதப்படுத்தின.

பட்டணம் வந்தடைந்த அக்காவும் தம்பியும் அந்த மாபெரும் ஊரில் வேலை தேடித் திரிந்தார்கள். காது ஓலை, மூக்குத்தி இவைகளை விற்றுச் சாப்பிட்டார்கள்.

அப்பொழுதுதான் அக்கமுத்துவுக்கு ரிக்‌ஷா ஓட்டும் வேலை கிடைத்தது. வேலாயிக்கு விருப்பமில்லைதான்; இருந்தாலும் காலக் காற்றில் 'கௌரவம்' என்ற காற்றாடி எந்த மூலைக்கு?

பிளாட்பார வாழ்க்கை ஆரம்பமாயிற்று. பழைய மோட்டாரின் முன்பக்க மூடிதான் அவர்களது சிறு குடிசை.

ஜன்னலிடம் நான் உட்கார்ந்து யோசிக்கும் வேளைகளில் மெள்ள அவள் வருவாள்; சில வேளைகளில் அக்கமுத்துவும் வருவான். "இந்தப் பிளாட்பார மக்களில் நீ ஒரு அனாதைப் பிறவியாக இருக்கிறாயே!" என்று சொன்ன பின்பேரில் அவள் இந்தக் கதையை என்னிடம் கூறினாள்.

5

அன்று வேலாயி—அக்கமுத்துவுடன் மற்றொருவனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். உள்ளே 'தடக், தடால்' என்று மிஷின் ஓடிக்கொண்டிருந்தது.

வழக்கத்துக்கு விரோதமாக வேலாயி யாருடனோ பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதும் நான் அவளை ஒரு திறுசாகப் பார்த்தேன்.

என்னை ஜன்னல் அருகில் கண்டதும், அவள் ஓடி வந்தாள்.

"சாமி! என் கஷ்டம் விடிஞ்சதுங்க!... அவரு வந்துட்டார்! இவ்வளவு நாள் எங்கெங்கேயோ சுத்தி, துப்பு பிடிச்சு வந்துட்டாரு, சாமி!"

நான் வடிவேலுவையும் வேலாயியையும் மாறி மாறிப் பார்த்தேன். அவர்களுடைய துன்பத்துக்கும் ஒரு வழி பிறந்தது என்று எண்ணி என் உள்ளம் மகிழ்ந்தது.

அடுத்த நிமிஷம் 'தடால், தடால்' என்ற மிஷின் ஓசை நின்றது. "ஸார், புறப்!" என்ற பையனின் குரல் என்னுடைய சிந்தனையைக் கலைத்தது.

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

249. கதையைக் கேள்!

ராவணன் விபீஷணனைப் பார்த்துப் பேசுகிறான்.

"எனக்கு உவந்த லாபமான காரியங்களைச் சொல்லுவதாகச் சொன்னாய்!"

'இச்சை நல்லன
உறுதிகள் இசைக்குவென்
என் றாய்;

பிச்சர் சொல்லுவ
சொல்லினை; என்பெரு
விற லைக்



எஜமானி (புதிதாக வந்த வேலைக்காரியிடம்):—இதோ பார்! நான் அதிகமாகப் பேசமாட்டேன். என் கை விரலை ஆட்டினால் 'வா!' என்று அர்த்தம். தெரிந்து கொண்டாயா?

வேலைக்காரி:—தெரிஞ்சுக்கிட்டேனுங்க. நானும் அதிகமாகப் பேசற வழக்கமில்லைங்க. நான் தலையை ஆட்டினால் 'வர மாட்டேன்' என்று அர்த்தம். தெரிஞ்சுக்குங்க!

கொச்சை மானுடர்
வெல்குவர் என்றனை;
குறித் த(து)
அச்ச மோ, அவர்க்(கு)
அன்பினோ! யாதினோ
ஐ யா!'

[இச்சை நல்லன உறுதிகள் இசைக்குவென் என்றாய்: ஏதோ எனக்கு உவந்த லாபமான, வெற்றிக் கான விஷயங்களை ஒட்டிச் சொல்லப் போவதாகச் சொன்னாய்; பிச்சர்: பைத்தியக்காரர்; என் பெரு விறலை: என்னுடைய பெரும் சக்தியை; கொச்சை மானுடர் வெல்குவர் என்றனை: கேவலமான மனிதர்கள் வென்று விடுவார்கள் என்று சொன்னாய், அப்படிச் சொன்னது:—அச்சத்தினாலோ அல்லது அந்த மானுடர் பால் கொண்ட வாஞ்சையில்த் தானோ?

குறிப்பு:— கோபம் தாங்க முடியாதபடி வந்து விட்டது ராவணனுக்கு. "ஐயா" என்ற அருமைச் சொல் கோபத் தீயையே உட்கொண்டிருக்கிறது.]

கோபம் மேலும் மேலும் வருகிறது. அதில் ராவணனுக்கு வார்த்தைகள் ஏளனமாகவே வருகின்றன.

'வெம்சி னம்தரு
போரில்என் உடன்எழு
வேண் டா;

இஞ்சி மாநகர்
இடம்உடைத்(து), ஈண்டினி(து)
இருத் தி;

அஞ்சல் அஞ்சல்', என்(று)
அயல்இருந் தவர்முகம்
நோக் கி

நஞ்சின் வெய்யவன்
கைஎறிந்(து) உரும்என
நக் கான்.

[வெம் சினந் தரு போரில்: பெரும் கோபாவேசத்தோடு தாங்கள் செய்யும் போருக்கு;

இந்த மாநகர் இடம் உடைத்து: இந்தக் கோட்டைக்குள் பந்தோபஸ்தாய் இருக்க வேண்டிய மட்டும் கட்டிடம் இருக்கிறது: என்று இனிது இருத்தி: இங்கே நீ சௌக்கியமாய் இரு. பயப்பட வேண்டாம்—என்று சொல்லிவிட்டு; பக்கத்தில் இருப்பவர்களைப் பார்த்து முகத்தைத் திருப்பிக்கொண்டு—நஞ்சின் வெய்யவன்: நஞ்சினும் கொடியவனான ராவணன்: கை எறிந்து உரும் என நக்கான்: கையோடு கையை வேகமாக அறைந்து பேரிடி போன்ற சிரிப்புச் சிரித்தான்.]

ராவணனுடைய கோபத்தி ஏளனச் சிரிப்பு இரண்டும் யாரையும் மேலே பேச விடாதுதான். ஆனால் விபீஷணனது ஆழ்ந்த அமைதியானது கலங்கவில்லை. பேசுகிறான்:

பின்னும் வீடணன்
'ஐயநின் நாம்அலை
பெரி யோர்

முன்னை நாள்அவன்
முனிந்திடக் கிளையொடு
முடிந் தார்;

இன்னம் உண்டுயான்
இயம்புவ(து): இரணியன்
என் பான்

தன்னை நேர்ந்தவா
கேட்டி' என்(று) உரைசெயச்
சமைந் தான்

[நின் நாம் அல்ல பெரியோர்: உன்னைவிட எவ்வளவோ சக்தி வாய்ந்தவர்களான பேர் பெற்ற நம்முடைய மூதாதைகள் பலர்; முன்னை நாள் அவன் முனிந்திட: பண்டைக் காலத்தில் அந்த விஷ்ணுமூர்த்தி கோபம் கொண்ட காரணத்தால்—விஷ்ணுவை ராமன் என்ற உபசாரத்தில் குறிப்பிடுகிறான் விபீஷணன்—கிளையோடு முடிந்தார்: சுற்றத்தாரோடு ஒரு படியாய் மாண்டு ஒழிந்தார்கள்; இன்னம் உண்டு யான் இயம்புவது: நான் சொல்லவேண்டியது இன்னும் இருக்கிறது; இரணியன் என்பான் தன்னை நேர்ந்தவா: இரணியனுக்கு நேர்ந்த விதத்தை: கேட்டி: கேட்பாயாக என்று பேச: சமைந்தான்: உறுதியில் நின்றான், மடங்கினவனாக இல்லை.]

இரணியனது கதை எப்படி வருகிறது, பார்க்கலாம்.

திருப்பணிக்கு உதவுங்கள்!

தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுக்காவில் உள்ள போலகம் என்ற கிராமத்தில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத கைலாசநாதர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலையும் திருக் குளத்தையும் செப்பனிடும் திருப்பணியில் சென்ற 1945-ம் வருஷக் கடைசியிலிருந்து ஈடுபட்டேன். திருக்குளத்தை ஆழமாக வெட்டி மூன்று பக்கங்களுக்கும் சௌகர்யமாகப் படிக்கட்டுகள் கட்டித் திருக்குளத்தின் வேலை முடிந்துவிட்டது. ஸ்ரீ கைலாசநாதரின் திருக்கோயில் திருப்பணியும் ஏறக்குறைய முடிவடையும் தருணத்தில் இருக்கிறது. இந்தப் பணிக்கு ஆஸ்திக அன்பர்கள் பலர் தாராளமாகப் பொருள் கொடுத்து உதவியிருக்கிறார்கள். அன்பர்கள் கொடுத்த பணம் ரூ. 20,279-13-6; என்னுடைய சொந்தப் பணம் ரூ. 20,770-13-9; ஆக மொத்தம் ரூ. 41,050-11-3 செலவில் திருப்பணி வேலையை நடத்தியிருக்கிறேன். பாக்கியிருக்கும் கோயில் திருப்பணிக்கும் கும்பாபிஷேகச் செலவுகளுக்குமாக ரூ. 15,000 வேண்டும். வரும் வைகாசி மாதம் 19-ந்தேதி கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்திவிட வேண்டும் என்று பெரியோர்கள் நிச்சயித்து விட்டார்கள்.

இரண்டு வருஷங்களுக்கு மேலாக என்னுடைய உடல் நிலை சரியாக இல்லை. ஈசுவரன் எனக்கு அளித்த செல்வத்தை எல்லாம் அவன் திருப்பணிக்கே அர்ப்பணித்து விட்டேன். கோவில் திருப்பணியை மேற்கொண்டு நடத்துவதற்கு வேண்டிய பொருள் என்னிடம் இல்லை. அலைந்து திரிந்து பொருள் திரட்டவும் உடல் சக்தி இல்லை. ஆஸ்திக அன்பர்களே! ஈசுவர கைங்கரியத்துக்குப் பொருள் உதவி செய்து கும்பாபிஷேகத்தையும் நடத்திக் கொடுத்துச் சகல சௌபாக்கியங்களையும் அடைய வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு
பாபநாசம் சிவன்

குறிப்பு:—பரம பக்தரான ஸ்ரீ பாபநாசம் சிவன் மேற்கொண்டிருக்கும் திருப்பணிக்கு இயன்ற உதவி புரியும்படி நேயர்களைக் கேட்டுக்கொள்கிறோம். நன்கொடைகளை, "பாபநாசம் சிவன், மயிலாப்பூர், சென்னை" என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

—ஆசிரியர், கல்கி.

வட்ட மேஜை

★ சரஸ்வதி மஹால்

தாங்கள் 'சரபோஜியின் கலைக் கோயில்' என்ற தலைப்பில் தஞ்சை சரபோஜி சரஸ்வதி மகால் நூல் நிலையத்தைப் பற்றி மார்ச் 20-27 தேதி "கல்கி" இதழ்களில் கட்டுரைகள் வெளியிட்டிருக்கிறீர்கள்.

இன்றைய தமிழன் லண்டன், அமெரிக்கா போன்ற வேற்று நாடுகளின் நூல் நிலையங்களைப் பற்றியும், அதன் பெருமைகளைப் பற்றியும் செவ்வனே தெரிந்து வைத்திருப்பான். ஆனால் தன் நாட்டில் எங்கெங்கே நூல் நிலையங்கள் உள்ளன? அவைகளின் சிறப்பு யாவை எனச் சிறிதும் அறியான்.

மேலைத் தேசத்துள்ளவர்களோ வெளியில் நம்மைப் பற்றியும் நம் கலைகளைப் பற்றியும் நம் புராதனத்தைப் பற்றியும் ஆராய்ந்து நல்லவைகளைக் கொள்ளையிட்டுச் செல்வார்கள்; இது கண்கூடு.

சரஸ்வதி மஹாலிலுள்ள சமஸ்கிருதச் சுவடிகளை ஆராய்ந்து முதன் முதல் கேட்லாக் (Catalogue) தயாரித்தவர் ஒரு ஜெர்மானியர். அவர் பெயர் ஏ. சி. பர்னல், PH. D. அக் கேட்லாக் (1) ஸ்டீபன் ஆஸ்டின் அண்டு சன்ஸ் ஹெர்போர்டு (Stephen Austin and Sons, Hertford) (2) டிரம்ப்னர் அண்டு கம்பெனி, 57-59. (Trumbner and Co., 57-59) என்ற பதிப்பகத்தில் அச்சாயிற்று. இவர் பதினைந்து வருட காலம் சரஸ்வதி மகாலிலேயே தங்கி ஒவ்வொரு சுவடியாகத் துருவிப் பார்த்துக் கேட்லாக் தயாரித்திருக்கின்றார்.

இச் சரஸ்வதி மஹாலிலிருந்து பல சுவடிகள் களவாடப்பட்டுள்ளன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. அவற்றுள் 'விமானத் தந்திரம்' என்ற சுவடியும் ஒன்று. தற்போது அது காணப்படவில்லை. மேலும் தற்சமயம் உள்ளவற்றுள் "சமராங்கண சூத்ரதாரம்" என்பதுமொன்று. அதனுள் பதினெட்டு விதச் சக்திகள் கூறப்பட்டுள்ளன. அதில் ஒன்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'அணு சக்தி'யாம். பதினேழுவிதச் சக்திகள் கண்டுகொள்ள முடியாதிருக்கின்றன. அவை அக்கால பாஷையில் இருந்ததால் தற்காலம் விளங்கவில்லை. சமஸ்கிருதம் நன்றாய் அறிந்து பல பாஷைகளும் தெரிந்த விஞ்ஞானிகளெல்லாம் ஒன்று கூடிப் பல வருடங்கள் ஆராய்ந்தால் உண்மை கண்டுபிடிக்கப்படலாம்.

சரபோஜி மன்னரின் ராஜ்யத்தைவிடப் பெரும்பெரும் சாம்ராஜ்யங்கள், ஹைதராபாத் உள்படச் சரிந்து விழுவதைக் காண்கிறோம். மன்னர்கள் ஆட்சியும் வாழ்வும் நிலைக்காது என்பதனை நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னமே நன்குணர்ந்து தம் ராஜ்யத்தை ஒப்படைத்தார் சரபோஜி மன்னர் பிரிட்டிஷாரிடம். ஆயினும், தமது புகழைக் கொடுத்தாரில்லை. ஏனெனில் அவருக்கே தெரியும், பிரிட்டிஷ் ஆட்சியும் சரிந்துவிழும் ஒரு காலத்தில் என்பது. ஆகவே சரபோஜி மன்னர் கண்டார் கலைக் கோயிலை; கொண்டார் இறவாப் புகழுடம்பை!

வல்லம்
9—4—49 வித்வான் எஸ். பரமசிவன்

●

சினிமாவும் சட்டமும்

சமீபத்தில் இந்திய சர்க்கார் சினிமாப் படங்களைப் பார்ப்பதில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களை ஒரு சாராராகவும் கீழ்ப்பட்டவர்களை ஒரு சாராராகவும் பிரித்துப் பார்லிமெண்டில் இயற்றிய சட்டம் அறிவுள்ள எல்லோராலும் வரவேற்கத் தக்கதே. சிலர் இச் சட்டத்தை எதிர்த்ததாகவும், சிலர் ஒத்திப் போட வேண்டும் என்று கேட்டதாகவும் அறிந்து நான் ஆச்சரியமடைந்தேன். என்னைக் கேட்டால் இச்சட்டம் சினிமா ஆரம்பித்த நாளன்றே அமுலுக்கு வந்திருக்க வேண்டும் என்று சொல்லுவேன்.

இன்று சினிமா செல்லும் மக்களில் முப்பது சத விகிதம் சிறுவர்கள் சிறுமிகள் என்று சொன்னால் அது மிகையாகாது. கஷ்டம் அறியாத இச் சிறுவர் சிறுமியர்களைத் தாய் தந்தையர்கள் தம்முடன் சினிமாவுக்கு அழைத்துச் செல்கின்றனர். இவர்கள் பார்க்கும் படங்கள் எப்படி என்றால்—காதல் ரஸம் ததும்பும் படம், சிற்றின்பத்தைச் சிலேடையாகச் சித்தரிக்கும் படம், உடை அணிவதில் 'ஹாலிவுட்' நாகரிகத்துக்கு ஒருபடி மேலாக முன்னணியில் இருக்கும் படம். இதுபோன்ற படங்களைச் சிறுவர்கள் அடிக்கடி பார்த்து வருவதனால் தங்களுடைய வாழ்க்கையையும் சிறு வயதிலேயே பாழ்படுத்திக்கொண்டு விடுகின்றனர். ஆதலின், இச் சிறுவர்களை இது போன்ற படங்களைப் பார்ப்பதைத் தடுத்து, கல்வி புகட்டும் படங்களை—இயற்கையின் வனப்பு, தொழிற்சாலைகளின் அமைப்பு இவைகளைச் சித்திரிக்கும் படங்களைப்—பார்க்கும்படி செய்விக்க வேண்டும். இந்திய சர்க்கார் கட்டுப்பாட்டினால் மட்டும் இதை வெற்றிகரமாக்க முடியாது. தாய் தந்தையர்களும், முதியோர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

சென்னை
11—4—49 டி. ஆர். ஸ்ரீநிவாசன்
தலைவர்
சினிமா ரஸிகர்கள் சங்கம்

●

நீதி வேண்டும்!

இந்திய மக்களாகிய எங்களைப் பிரஞ்சு இந்திய மக்கள் என்று பிரித்து வைத்திருப்பது நீதியா? தற்போது பிரஞ்சு இந்தியாவில் மக்களிடையே ஒற்றுமை கிடையாது. அதி

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ம் "சரஸ்வதி மஹால்" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ வித்வான் எஸ். பரமசிவத்துக்கும், "பற்றுக்குறை விசிக்கட்" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ ப. நா. அர்ஜுனனுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

கார வெறி பிடித்த சில பதவிப் பித்தர்கள் தங்கள் சுயபோகத்துக்காக அன்னியரை ஆதரிக்கிறார்கள். சில வியாபாரிகள் எப்படியும் இந்த நெருக்கடியான சமயத்தில் தனித் திருத்தல் நலத்தைத் திரட்டிவிடலாமென்று எண்ணுகிறார்கள். இவர்கள் கையில் எங்களை ஒப்படைத்தல் நீதியா?

காரைக்கால் நகர சபையைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் அங்கத்தினர், "எங்களுடைய கூட்டுச் சேகரிப்புப் பணம் 25,000 ரூபாயால்தான் நீங்கள் சட்ட சபைத் தலைவராக முடிந்தது" என்று பக்கிரிசாமிப் பிள்ளை மீது குறை கூறி ஓர் அறிக்கை விட்டார். அதற்கு எங்கள் நகர அதிகாரியும் சட்டசபைத் தலைவருமான உயர் திரு. பக்கிரிசாமிப் பிள்ளை அவர்கள், "என்னுடைய சொந்தப் பணச் செலவினால்தான் இந்தப் பதவிகளைப் பெற முடிந்தது" என்று அறிக்கை விட்டவருக்குப் பதில் கூறியிருக்கிறார். இந்தக் கேள்வியும் பதிலும் எதைக் குறிக்கின்றது என்பதை எண்ணிப் பாருங்கள். இந்த நிலைமையில் டிசம்பர் மாதம் 11-ம் தேதி தேர்தல் நாள் என்றும் குறித்திருக்கிறார்கள். யாருக்கு யார் தேர்தல் நடத்திப் பார்ப்பது? தனி ஒருவனே ஒரு பதவிக்கு வர 25,000 ரூபாய் செலவு செய்தால், ஆட்சிக்கு அலங்கார பீடமாய் ஐந்து பேர்களை வைத்துக்கொள்ள ஒரு சர்க்கார் எவ்வளவு பணச் செலவு செய்யும் என்பதைச் சென்னை சர்க்கார் கவனிக்கவேண்டும். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பிரதம மந்திரியாய் இருந்தபோது மதுவிலக்கை இங்கேயும் ஒழிக்கப் பாடுபட்டார். ஓரளவு வெற்றியும் கண்டார்.

மக்களிடையே பிரிவை உண்டு பண்ணிப் பணத்தைச் செலவு செய்து பிரான்ஸின் ஆதிக்கத்தை இங்கே நிலைநிறுத்த ஒரு சிலர் பார்க்கிறார்கள்.

நீதியின் பேரால் எங்களை நேர்மையுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். இங்கு தேர்தல் அவசியமில்லை. நாங்கள் உங்களுக்குச் சொந்தம் என்பதை உணருங்கள்.

காரைக்கால்
6—4—49 எஸ். ஆர். பெலிக்ஸ்

●



மனைவி:—கார்டு கவர் விலையெல்லாம் ஒசந்து போச்சே! லெட்டர் எழுதறதைக் கொஞ்சம் குறைச்சுக்கப்படாதோ!

கணவன்:—எப்படிக் குறைச்சுக்கிறது! பம்பாய்க்கு உன் அப்பாவுக்கு எழுதுகிறதைக் குறைக்க முடியுமா? இல்லே, பூனாவிலே உன் மாமாவுக்குப் போடறதைக் குறைக்க முடியுமா? அல்லது உன் தாத்தா மாயவரத்திலே இருக்காரே, அவருக்குப் போடாமல் இருக்கலாமா?

மனைவி:—ஏன்? எல்லா லெட்டர்களையும் ஒரே கவருக்குள் வைத்து அனுப்பினால் போச்சு!

பற்றுக் குறைக் கிரிக்கட்

ஏப்ரல் 3-ம் தேதி "கல்கி" இதழைப் படித்தபோதுதான் நம் நாட்டுக்கும் ஏறக்குறைய எங்கள் 'கிரிக்கட் கிளப்'பின் அளவிற்குப் பற்றுக்குறை இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். உயர்தரப்பள்ளி மாணவர்களாகிய நாங்கள் நாலைந்து பேர் முதலில் குச்சிகளை நட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். நன்கொடை வசூல் செய்யலாம் என்ற யோசனை தோன்றியது. நாங்கள் ஊருக்குச் சென்றபொழுது, எங்கள் காகிதத்தில் உள்ள மூன்று காலங்களில் எல்லோரும் போட்ட எண்களெல்லாம் மத்திய காலத்திலேயே பதிவாயின. எப்படியோ சமாளித்து ஒரு 'பேட்' மட்டும் வாங்கி, இரவல் 'ஸ்டம்பு'களை வைத்துக்கொண்டு விளையாடி வந்தோம். வாரத்திற்கு முக்காலணா சந்தாவும் வாங்கி வருகிறோம். அப்படியும் ஸ்ரீதேவியின் சகோதரிதான் எங்கள் 'கிளப்'பைச் சூழ்ந்து கொண்டிருக்கிறாள். இப்பொழுது வாங்கின 'பேட்'டும் 'ரிடையர்' ஆகிவிட்டது. இந்த நெருக்கடியான சமயத்திலும், 'ரிடையர்' ஆன 'பேட்'டுக்கும் 'பென்ஷன்' கொடுக்க வேண்டியிருக்கிறது. நாங்கள் விளையாடும் இடம் மிகவும் மட்டமாய் இருக்கிறது. கற்கள் நிறைந்திருக்கின்றன. இப்பொழுது இருக்கும் சரியான நிலையை கீழ்க்கண்ட பாட்டு ஒன்றே விவரிக்கும்.

அருமையான கிரிக்கட்டு
அனைவர் ஆடும் கிரிக்கட்டு

இரசிகர்தம் வாழ்வையே
இன்பமாக்கும் கிரிக்கட்டு

ஒன்று பேட்டுக்கு நூல்கட்டு
மற்றொரு பேட்டுக்கு ரப்பர் கட்டு

எங்கள் - தலைவர் பெயரும்
திருவாளர் பி. ஆர். கிட்டு!

கோடை விடுமுறையும் ஆரம்பமாகிவிட்டது. புது 'பேட்' வாங்கினால்தான் கிரிக்கட் விளையாடிப் பொழுதுபோக்கலாம். இவ்வளவு

பொருளாதார நெருக்கடியான சமயத்தில் 'கவரு'க்காகச் செலவழிக்கப்பட்ட இரண்டணாவும் வீண்போகாது என நம்புகிறேன்.

கோபிசெட்டிப்
பாளையம், 6-4-49 ப. நா. அர்ஜுனன்
நேத்தாஜி கிரிக்கட் கிளப்

●

படித்ததின் பயன் என்ன?

இந்த வருஷம் நான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதி யிருக்கிறேன். எங்கள் ஊரில் ஒவ்வொரு பாடத்தின் பரீட்சைக் கேள்விகளும் அநேகருக்குப் பரீட்சை நடந்ததற்கு முன்பே தெரிந்துவிட்டன என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் மிகச் சுலபமாக அக் கேள்விகளின் விடைகளை மட்டும் படித்துப் பரீட்சை நன்கு எழுதிவிட்டனர். ஆனால் என்னைப் போன்ற சிலரோ ஒன்றுமறியாமல் பெரிய சமுத்திரம் போன்ற இரண்டு வருஷத்திய (5-ம், 6-ம் பாரம்) பாடங்களை யெல்லாம் படித்துக்கொண்டு சென்று, ஞாபகத்தி லுள்ளவைகளை எழுதினோம். சாதாரணமாக வகுப்பில் நன்கு படித்துப் பள்ளிக்கூடப் பரீட்சைகளில் அதிக மார்க்குகள் பெற்ற நான் கஷ்டப்பட்டுப் படித்து இப் பரீட்சையிலும் என் திறமைக்கேற்ப எழுதினேன். ஆனால் பள்ளிக்கூடப் பரீட்சைகளில் குறைந்த மார்க்குகள் பெற்றனர் இப் பரீட்சையின் கேள்விகளை முன்பே அறிந்ததால் கஷ்டமின்றி விடைகள் எழுதிவிட்டனர். இப்பொழுது என்னைப் போன்றவர்கள் கஷ்டப்பட்டு, இரவு பகலாகப் படித்ததின் பயன் என்ன? இவ்வாறு பரீட்சைக் கேள்விகள் முன்பே வெளியாக்கப்பட்டு, மாணவர்கள் பரீட்சைகள் எழுதுவதைவிடப் பரீட்சைகள் இல்லாமலிருப்பதே நலம். இப்பொழுது கீழ்வகுப்புகளில் படிக்கும் எங்கள் தம்பி, தங்கைகளாவது இவ்வித துன்பங்களுக் குள்ளாகாமலிருக்கும்படி சர்க்கார் கவனிப்பார்களா?

கோயமுத்தூர்
6—4—49 எஸ். எஸ். ஜெயலக்ஷ்மி



“ஸ்வாமி! விக்னேஸ்வரா! கேள்விப் பேப்பர் ‘அவுட்’ ஆகியிருந்தபோதே என்னால் சரியாக ‘ஆன்ஸர்’ எழுத முடியவில்லையே? மறு பரீட்சையிலே என்ன செய்யப் போகிறேனோ?”

●

வையம் பேறும்!

ஏப்ரல் மாதம் 12-ம் தேதி "கல்கி" இதழின் அட்டைப்பட விளக்கத்தில் வரும் "இட்ட அடி நோவ" என்னும் பாட்டைக் குறித்து வேறொரு வரலாறு வழங்கி வருகிறது.

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் மகன் 'அம்பிகாபதி' குலோத்துங்க சோழன் மகள் அமராவதியிடம் காதல் கொண்டிருந்தான். இந்த அந்தரங்கக் காதல் புவிச்சக்கரவர்த்தியின் காதுகளுக்கு எட்டி விடுகிறது. ஒரு நாள் அரண்மனை விருந்தின்பொழுது கம்பர்பெருமானும் அவர்தம் அருமைப் புதல்வரும் மற்றும் பல புலவர்களும் கூடி விருந்துண்ணும் பொழுது புவிச்சக்கரவர்த்தி மகள் அமராவதி நெய் பரிமாறுகிறாள். இதைப் பார்த்த அம்பிகாபதி தன் காதலியின் அடி நோவதைக் குறித்து முன்னிரண்டு அடிகளையும் பாடப் புவிச்சக்கரவர்த்தியின் சந்தேகம் பலமுற்றுச் சீறி எழுங்கால் கம்பர் பின்னிரண்டு அடிகளையும் பாடுகிறார். வட்டில்—நெய்க் கிண்ணம்; நெய்க் கிண்ணம் சுமந்ததால் கனந்தாங்காமல் இடை வளைந்து அசைவதாகவும், மெல்லிய பாதங்கள் அடி பெயர்த்து வைப்பதால் கொப்பளித்து விடுவதாகவும் கொள்ள முடியாதா?


சோழர் பெருமான் மேலே சொன்ன பாட்டுக்கு வியாக்யானம் கேட்ட பொழுது தெருவில் கிழங்கு விற்கும் ஒருத்தியின் குரல் கேட்டதாகவும் ஆகையால் மேற்படி வெண்பா எழுந்தது என்றும் கூறுகிறார்.

சோழர் பெருமானுக்கோ அல்லது அங்கு கூடியிருந்த வேறு புலவர்களுக்கோ இந்தக் குரல் கேட்கவில்லை. ஆகையால் மன்னர் பெருமான் பணியாளை ஏவிப் பார்க்கச் சொல்கிறார். கலைச் செல்வனைப் போற்றுவான் வேண்டிக் கலைமகள் கிழங்கு விற்பவளாக உருவெடுத்துத் தப்புவிக்கிறாள்.

இந்த இரண்டு விளக்கங்களிலும் பாடலுக்கேற்றபடி பொருள் அமைக்கப் பட்டிருப்பதால் எது உண்மை இலக்கியத்தை ஆதாரமாகக் கொண்டது என்று கூற முடியுமா?

துறையூர்
9—4—49 இரா. சேஷாத்திரி

[கம்பர் வாழ்க்கையைக் குறித்துப் பல கதைகள் வழங்கி வருகின்றன. பாடல்களை வைத்துக்கொண்டு சில கதைகள் கற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. கம்பர் குலோத்துங்க சோழன் காலத்தவர் என்று முடிவு கட்டுவதற்குக் கதைகளைத் தவிர சரித்திர பூர்வமான ஆதாரம் இல்லை. அட்டைப்பட விளக்கத்தில் குறிப்பிட்டிருப்பதுதான் அந்தப் பாடலுக்கு இயற்கையான — பொருத்தமான—விளக்கம் என்று கருதுகிறோம். அம்பிகாபதி கதையை விரும்புவோர் அதையே விளக்கமாக வைத்துக் கொள்ளலாம். —ஆசிரியர்]



"ஏத்தம் இறைக்கிற
 எங்க மாமா!
எந்தப் பொண்ணு
 வேணும் மாமா?"
"சீட்டிச் சேலே
 கட்டின பொண்ணு—அந்தச்
சின்னப் பொண்ணு
 வேணும் தம்பி!"

நானும் என் ஒன்றுவிட்ட அக்காளின் மகன் தங்கவேலுவுமாக, கத்தரித் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே, மேலே சொன்ன பாட்டைப் பாடிக் கொண்டிருந்தோம்.

எங்கள் பாட்டைக் கேட்டுக் கூட இருந்த மற்றப் பெண்கள் எல்லோரும் 'கொல்' லென்று சிரித்துவிட்டார்கள். ஆனல், அஞ்சுகம் மட்டும் தலே நிமிர்த்து எங்களே எரித்துவிடுவதுபோல் பார்த்துவிட்டு மீண்டும் ஏனைனங்களைத் தேய்க்கத் தொடங்கினுள். நான் பாடிய பாட்டில் 'சீட்டிச் சேலே கட்டிய சின்னப் பொண்ணு' என்று குறித்தது அஞ்சுகத்தைத்தான். அதனுல் தான் அவளுக்கு அவ்வளவு கோபம். கோபத்திலும் அவள் முகம் அழகாகவே யிருந்தது!


அந்தப் பாட்டைக் கேட்ட முதல் இரண்டு மூன்று தினங்கள் வரை முகத்தைக் கோபமாக வைத்துக் கொண்டிருந்த அஞ்சுகம், பிறகு மெள்ள மெள்ள என்னுடன் சிரித்துப் பேசத் தொடங்கினுள்.

ஒருநாள் தோட்டத்தின் மூலே முடுக்கெல்லாம் நீர் பாய்ந்த பிறகு ஏற்ற மரத்தை நாட்டிவிட்டு, 'உஸ், அப்பாடா!' என்று மகிழ மரத்தடியில் வந்து உட்கார்ந்தோம். என் கண்கள் மட்டும் மெள்ள பக்கத்துக் குளத்துப் படித்துறையில் வட்டமிட்டது. பாத்திரங்களைத் தேய்த்துப் படித்துறையில் அழகாக அடுக்கிவைத்த அஞ்சுகம், மெதுவாகத் தோட்டத்தை நோக்கி வந்தாள். நான் அவளேப் பார்த்தபடியே இருந்தேன். வெட்கத்தால் சிவந்த முகத்தோடு வேலியருகில் வந்து நின்ற அஞ்சுகம் தயக்கத்துடன், "அத்தான்! கொஞ்சம் மகிழம்பூ தருவீங்களா?" என்றுள்.

'மாடிவீட்டு அண்ணன்' என்று கேட்டுக் கேட்டு அலுத்திருந்த எனக்கு, அஞ்சுகத்தின் அருமையான 'அத்தான்' என்ற அழைப்பு என்னே, அப்படியே ஆகாயத்தில் தூக்கிப் போடுறமாதிரி யிருந்தது.

"அட, இதுக்குத்தானு இத்தனை தயக்கம்? இந்தா வேண்டிய பூ!" என்று சொல்லிக் கொண்டே மேல் துண்டில் நிறையப் பூக்களே அள்ளி, வேலிக்கப்பால் நின்ற அவள் முந்தானையில் கொட்டினேன். கொட்டிய பூக்களே வாங்கிக் கொண்டு, மகிழ்ச்சி பொங்கும் கண்களால் என்னே எதிட்டுப் பார்த்தவள் சட்டெனத் தலையைத் தாழ்த்திக் கொண்டு ஓடிவிட்டாள். பிறகு இந்த நாடகம் அனுதினமும் நடந்து வந்தது.

வேலைக்கு மனு



"ஏண்டாப்பா! ஆறுமாதமாக வேலை கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கயே? மந்திரி வேலை ஏதோ காலியாயிருக்கிறதாமே? அதற்காவது ஒரு மனுப் போட்டு வைக்கிறதுதானே?"

இப்படியே நாட்கள் சென்று கொண்டிருந்தன. திடீரென்று ஒருநாள் அந்தப் படித்துறை இருண்டு கிடந்தது! காரணம், 'சிட்டிச் சேலை கட்டிய சின்னப் பெண்ணு' அன்று வராததே. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்; என்னால் பொறுக்க முடியாமல் போகவே, "என் தங்கவேலு, ஒரே இருட்டாகக் கிடக்கே? இன்றைக்கு ஏன் நம்ம படித் துறையில் உதயமாகும் சூரியனைக் காணோம்?" என்றேன்.

தங்கவேலு விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கிவிட்டான். அவன் சிரிப்புத் தானாக ஓய்ந்த பிறகு, "கதை, புராணம் படிக்கிறவங்க கூடப் பெண் பிள்ளைகளைச் 'சூரியன்'னு வர்ணிச்சு நான் கேட்டதில்லை. கண்தான் சரியில்லேன்னு, அறிவு கூடவா சரியில்லே! இனிமேலாச்சும் சரியாச் சொல்லு. சூரியனில்லே; சந்திரன்!" என்றான்.

"சரி, சரி, உன் இஷ்டம்போலவே இருக்கட்டும். அந்தச் சந்திரன் ஏன் இன்று வரவில்லை? அதைச் சொல்லு முதலில்" என்று அவனை உலுக்கினேன்.

"இது தெரியாதா உனக்கு? இன்று காலை நாம் வரும்போது மேலக் கோடி வீட்டில் மேளச் சத்தம் கேட்டதே, நீ கவனிக்கவில்லையா? இல்லே, கவனித்துத்தான் சும்மா வாவது கேட்கிறாயா?" என்றான் தங்கவேலு.

மற்றெல்லா விஷயங்களிலும் நான் தங்கவேலுவை விடப் பெரியவன்தான். ஆனால், சில விஷயங்களை அவ்வப்போது தெரிந்து கொள்ளும் விஷயத்தில் மட்டும் அவனை யாரும் மிஞ்ச முடியாது. மேளச் சத்தத்தை நானும்தான் கேட்டேன்; ஆனால், விஷயம் என்ன என்பது மட்டும் விளங்கவில்லை. தங்கவேலு "இனி, 'அஞ்சுகம்' என்கிற 'சந்திரனை' 'வீடு' என்கிற, 'ராகு' பலமாகப் பிடித்துக் கொண்டு விட்டது. 'பெரிய பெண்' ஆகிவிட்டாள் என்ற காரணத்தால் இனி அவள் நம்ம வழக்கப்படி வீட்டை விட்டு வெளியே வரமாட்டாள். கலியாணமான பிறகுதான் 'ராகு'விடமிருந்து அவளுக்கு விடுதலை கிடைக்கும்" என்று சொன்ன பிறகுதான் எனக்குப் புரிந்தது.

2

இதற்குப் பிறகு அஞ்சுகத்தைப் பற்றிய நினைவையே நான் மறந்திருக்கலாம். ஆனால் இந்தத் தங்கவேலு நான் அவளை மறக்க முடியாதபடி ஏதாவது விஷயங்களைக் கொண்டு வந்து கொண்டேயிருந்தான். தங்கவேலு எனக்கு எப்படி உறவோ அது போல அஞ்சுகத்திற்கும், 'அண்ணன்' என்ற முறைமையில் உறவு. அதாவது அஞ்சுகத்தின் பாட்டனும், தங்கவேலுவின் பாட்டனும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். ஆகவே, அந்த உறவில் அவன் அஞ்சுகத்தின் வீட்டுக்குப் போக நேரும்போதெல்லாம் அவளைப் பற்றிய விஷயம் ஏதாவது கொண்டுவராமல் இருக்கமாட்டான். "இப்போ நீ அஞ்சுகத்தைப் பார்க்கவேண்டும், மாமா! அது எவ்வளவு நல்லா வளர்ந்திருக்கு, தெரியுமா? நீ ஒரு முறை அஞ்சுகத்தை மட்டும் நேருக்கு நேராகப் பார்த்துவிடு, அப்புறம் உனக்கு வேறு எந்தப் பெண்பிள்ளையையாவது நிமிர்ந்து பார்க்கவேண்டும் என்று தோணினாச்சொல்லு" என்பான்.

நாட்கள் செல்லச் செல்லத் தங்கவேலு அஞ்சுகத்தைப் புகழ்வதும் அதிகரித்தது. 'எப்படியாவது ஒருமுறை அஞ்சுகத்தைப் பார்த்தே விடுவது' என்ற முடிவிற்கு வந்தேன். தங்கவேலுவும் தகுந்த ஏற்பாடு செய்வதாக ஒப்புக் கொண்டான்.

அஞ்சுகம், மத்தியான வெய்யில் நேரத்தில் தன் வயதுப் பெண்களோடு கொல்லைத் தாழ்வாரத்தில் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருப்பாள். அந்நேரத்தில் அவன்

வீட்டுப் பக்கத்தில் உள்ள மாந்தோப்பில் நுழைந்து மாமரம் ஒன்றில் ஏறி அவளைப் பார்ப்பது; அந்த வெய்யில் நேரத்தில் அயர்ந்து கிடக்கும் யாரும் இதைக் கவனிக்க மாட்டார்கள்; அப்படியே கவனித்தாலும் மாங்காய் பறித்ததாகச் சொல்லிவிடலாம் என்று ஒரு தந்திரம் சொன்னான் தங்கவேலு. நானும் அதற்குச் சம்மதித்தேன்.

அந்த ஏற்பாட்டின்படியே மாந்தோப்பில் நுழைந்து, மாமரம் ஒன்றில் ஏறிக் கொண்டேன். வசதியான கிளையொன்றில் சாய்ந்து நின்றுகொண்டு கவனித்தேன். கூச்சலும், கொம்மாளமும் போட்டுக்கொண்டு பல்லாங்குழி யடியில் கூடியிருந்த அந்தப் பெண்கள் கூட்டத்தில் நான் அஞ்சுகத்தைச் சரியாகப் பார்க்கமுடியவில்லை. 'எப்படியும் கடைசிவரை இருந்து, அஞ்சுகம் எழுந்து உள்ளே போகும் போதாவது பார்த்துவிட்டுத்தான் இறங்குவது' என்ற தீர்மானத்துடன் கிளையில் வசதியாக உட்கார முயன்றேன். சமயம் பார்த்து என் பாரம் தாங்காமல் கிளை மடமட வென்று முறியவே திடுக்கிட்டு வேறொரு கிளையைத் தாவிப் பிடித்தேன். அச்சமயம் கீழே,

"ஆ! மாடி வீட்டு அத்தானில்லே!" என்ற அஞ்சுகத்தின் இனிமையான குரலைக் கேட்டுப் பரபரப்புடன் கிளையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு திரும்பினேன். தன் அகன்ற பெரிய விழிகளால் என்னை விழுங்கிவிடுபவள்போலப் பார்த்துக் கொண்டு நின்றாள் அஞ்சுகம். நானும் கண்ணை இமைக்காமல் அதிசயத்துடன் பார்த்தேன். அந்த நிமிஷத்தில், தங்கவேலுவின் வாயிலே ஒரு பிடி சர்க்கரையைத் திணிக்க வேண்டும் என்றுதான் தோன்றியது.

அடுத்த கணம் அஞ்சுகம் சிவந்த முகத்துடன் உள்ளே போகத் திரும்பினாள். அதே சமயம் நான் பிடித்திருந்த மற்றொரு கிளையும் மடமட வென்று முறியவே 'பொத்'தென்று பூமியில் குதித்துவிட்டேன்.

"மாமரத்துக் கிளை மடமட வென்று முறியுமென்று நீ கேட்டதில்லையா, மாமா?" என்று கேட்டுக் கடகடவென்று சிரித்தான் கீழே நின்ற தங்கவேலு.




3

மறுநாள் காலை மகிழ மரத்தடியில் உட்கார்ந்து மனோராஜ்யத்தில் மகிழ்ந்திருக்கையில், "இப்படிக் கல்லுமாதிரி குந்தியிருந்தா கத்தரித் தோட்டம் காய வேண்டியதுதான்" என்று சொல்லிக் கொண்டே என் தோளைப் பிடித்து உலுக்கினான் தங்கவேலு.

"எனக்கு என்னவோ இன்றைக்கு ஒரே அலுப்பாக இருக்கிறது தங்கவேலு. நீதான் இன்று தண்ணீர் பாய்ச்ச வேண்டும்" என்று சொல்லிவிட்டு மகிழ மரத்தின் மீது நன்றாகச் சாய்ந்து கொண்டேன்.

"அலுப்போ, எங்க மாமனுக்கு அஞ்சுகத்தின் நினைப்போ?" என்று ராகம் இழுத்துக் கொண்டே, ஏற்றமரத்தை நோக்கி நடந்தான் தங்கவேலு. அவன் பாடிய அந்தப் பரிகாசப் பாட்டால் மறுபடியும் தன்னை மறந்து உட்கார்ந்திருந்த என்னை "அத்தான்!" என்ற ஒரு மெல்லிய குரல் விழிப்படையச் செய்தது. திமிர்ந்து வேலிப் பக்கம் திரும்பினேன். அஞ்சுகத்தின் ஆறு வயதுத் தம்பி வேலிக்கப்பால் நின்று மறுபடியும், "அத்தான்!" என்றான். நான் எழுந்து வேலியருகில் சென்று, "என்ன, தம்பி!" என்றேன். அவன் தயங்கித்



"உன் பிள்ளை கடைத்தெருவிலே ஒரு மோட்டாரைப் பார்த்துவிட்டு அதை வாங்கித்தர வேண்டும் என்று ரொம்பத் தொந்திரவு செய்தான். கடைசியில் இரண்டு வாங்கினேன்."

"பைத்தியந்தான் பிடித்திருக்கிறது உங்களுக்கு! இரண்டு மோட்டார் வாங்குவார்களா?"

"போடி, பயித்தியம்! அவன் முதுகிலே பளீர் பளீர் என்று இரண்டு வாங்கியதை யல்லவா சொல்லுகிறேன்?"

தயங்கி, "உங்களுக்குப் பலமா அடிபட்டுடிச்சா?" என்றான். நான் ஆச்சரியத்துடன், "இல்லை தம்பி! எனக்கு அடியே படவில்லையே! இப்படி உன்னை யார் கேட்டு வரச் சொன்னது?" என்று கேட்டேன். "அஞ்சுகத் தக்கா" என்று சொல்லி விட்டு சிறுவன் ஓடக் கிளம்பினான். நான் அவனைத் தடுத்து, வேலிக்கு இப்பால் வரச்செய்து அவன் சட்டைப் பை நிறைய மகிழ மலர்களைத் திணித்து வீட்டுக்கு அனுப்பினேன்.

அஞ்சுகத்திற்குத்தான் என்னைப் பற்றி எவ்வளவு கவலை! கிளையோடு குதித்த என்னை விழுந்துவிட்டதாக எண்ணியவள், பாவம், இரவெல்லாம் தூங்காமல் கவலைப் பட்டிருக்கிறாள். இதை நினைத்தவுடன் அஞ்சுகத்தின் அழகிய முகம் என் கண் முன் வந்தது. அந்த நிமிஷத்தில், 'எப்பாடு பட்டாவது அஞ்சுகத்தையே கலியாணம் செய்து கொண்டுவிடுவது' என்று தீர்மானித்தேன்.

4

அஞ்சுகத்தைப் பெண் பேசப் பலர் வந்து போவதாக அறிந்தேன். அதன் பிறகும் நான் எப்படிச் சும்மா இருப்பது? தைரியமாகச் சென்று தாயாரிடத்திலே விஷயத்தை — அதாவது என் விருப்பத்தை வெளியிட்டேன். அவ்வளவுதான்; ஒரு பெரிய பூகம்பமே ஏற்பட்டு விட்டது மாதிரி எங்கள் வீடு அமளிப்பட்டது.

"நம்ம அந்தஸ்தென்ன? அழகென்ன? கால் காசுக்கு யோக்யதை இல்லாதவங்க வீட்டுப் போய்ப் பெண் எடுப்பாங்களா? என்றான் உன் புத்தி இப்படிப் போச்சோ!" என்று சொல்லி என் தாயார் ஆயிரம் முறை தன் தலையிலே அடித்துக் கொண்டாள். தகப்பனார் அம்மானத்துக்கு இம்மானம் எகிரிக் குதித்தார்.

"எனக்குத் தெரியாம பிள்ளைக்குக் காசு கொடுத்துக் காலிப்பயலுகளோடே கூட்டி, டிராமாவுக்கும், சினிமாவுக்கும் அனுப்பி வைச்சயே, இந்த அழகான மகனை! இப்ப கேட்டுக்கோ அவன் பேசற பேச்சை! 'ராஜபார்ட்' ஆளு மாதிரில்ல பேசறான்! நல்லா வேணும் உனக்கு!" என்று சத்தம் போட்டார் என் தந்தை.

என் தாயார் எனக்கு எவ்வளவோ எடுத்துச் சொன்னாள். நான் ஒன்றிற்கும் அசைந்து கொடுக்கவில்லை. இதற்கிடையில் அஞ்சுகத்திற்குப் 'பரிசம்' போடக்கூட நாள் குறித்து விட்டார்கள் என்று அறிந்ததும் என் மனம் கொதித்தது.

"இதோ, பாருங்க அம்மா! இப்ப பரிசம் போட வரப்போகிறவங்க கூட நம்ம அந்தஸ்து உள்ளவங்க தான். இன்றைக்கே நீங்க போய் அந்தப் பரிசப் பேச்சை நிறுத்திப் பெண் பேசி வராட்டா நான் இந்த வீட்டை விட்டே வெளியேறி விடுவேன்! இது சத்தியம்..." என்று நான் முடிப்பதற்குள், ரௌத்திராகாரமான கோபத்தோடு ஓடி வந்தார் என் தகப்பனார். "காலிப்பயலே! இப்பவே நடடா வெளியே!" என்று என் கழுத்தில் கைகொடுத்து வெளியே தள்ளினார். எனக்கும் ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. நான் எங்கும் போய்விட மாட்டேன் என்ற எண்ணத்தினால்தானே அவர் என்னை இப்படித் தள்ளினார்? இருக்கட்டும், 'பிள்ளை! பிள்ளை! என்று இவர் கதறும்படி செய்கிறேன்' என்று கருவிக் கொண்டே வீட்டை விட்டு வெளியேறினேன். கால்போன போக்கில் நடந்தேன்.

'இந்தப் பரந்த உலகில் பிழைக்க வழி கிடைக்காமலா போகும்?' என்று தைரியமாகக் கிளம்பிய எனக்குப் பெரும் ஏமாற்றமே மிஞ்சியது. முதலில் மளிகைக் கடையொன்றில் வேலைக்கு அமர்ந்தேன். எப்

படியோ பல்லைக் கடித்துக்கொண்டு ஐந்தாறு மாதங்களைக் கடத்திவிட்டேன். அதன் பிறகு ஒருநாள் கடை முதலாளியே என்னைக் கூப்பிட்டு, "தம்பி! நீ ரொம்ப சொகுசாக வளர்ந்த பிள்ளை என்று தெரிகிறது. நம்ம கடைக்கும் உனக்கும் லாயக்குப் படாது. இந்த மாதத்தோடு உன் கடையைக் கட்டிக் கொள்" என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு, சோற்றுக்கடை, பலகாரக்கடை, ஜவுளிக்கடை, பழக்கடை, பலசரக்குக்கடை என்று பல கடைகளுக்கு மாறினேன்! மாறி என்ன கண்டேன்? வாழ வகை தெரியாமல் வாடி வருந்தினேன். என்னமோ கதைகளைப் படித்துப் படித்துக் காதல், கீதல் என்று மனதைக் கலவரப்படுத்திக் கொண்டு விட்டோம். அஞ்சுகம் ஒரு குழந்தைக்குக்கூடத் தாயாகி யிருப்பாள். அவளென்ன, "உன்னைத்தான் கலியாணம் செய்து கொள்வேன்" என்று சொன்னாளா? நாம்தான் பயித்தியக்காரத்தனமாக என்னென்னவோ எண்ணி வாழ்வை வீணாக்கிக் கொண்டோம் என்றெல்லாம் எண்ணிப் பெருமூச்சு விட்டேன். கடைசியாகக் கையிலே மிஞ்சிய காசை வைத்துக் கொண்டு, ஊரை நோக்கித் திரும்பினேன்.

5

நான் ஊருக்குத் திரும்பியவுடன் தங்கவேலுதான் முதலில் என் கண்ணில் பட்டான். அவன் ஊர் விஷயங்கள் முழுதும் என்னிடம் சொன்னான்.

நான் வீட்டை விட்டுச் சென்றதற்கான காரணங்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகி ஊரில் பரவி விட்டன. அஞ்சுகத்திற்குப் பரிசம் நடக்க இருந்த அன்று, பிள்ளை வீட்டாருக்கு ஒரு மொட்டைக் கடிதம் வந்ததாம்! அதில், "நீங்கள் பரிசம் பேசும் பெண் அஞ்சுகமும், மாடிவீட்டுப் பிள்ளை நல்லமுத்துவும் ஒருவரையொருவர் மணம் செய்துகொள்ளத் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் அதற்குப் பெரியவர்கள் சம்மதம் கிடைக்காததால், இருவரும் ஒரு நாள் இரவு ஓடிவிடத் திட்டம் போட்டிருந்தார்கள். இது விஷயம் நல்லமுத்துவின் தகப்பனாருக்குத் தெரிந்துபோகவே பிள்ளையை வீட்டை விட்டே துரத்தி விட்டார். வேண்டுமானால் ஊராரைக் கேட்டு நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்..." என்று எழுதியிருந்ததாம். இதைப் படித்ததும் பிள்ளை வீட்டார்கள் பரிசத்தை நிறுத்தி விட்டுக் கிளம்பி விட்டார்களாம். இந்த அவமானம் தாங்காமல் அஞ்சுகத்தின் வீட்டார்கள் வெளியில் வருவதையே விட்டு விட்டார்களாம்.

என்ன கொடுமை! இதற்கெல்லாம் மூல காரணம் நான்தானே? பாவி என்னால் அல்லவா அஞ்சுகத்தின் வாழ்வே பாழ்பட்டு விட்டது? நான் செய்த காரியம் எத்தனை பேருக்கு இடைஞ்சலையும், வருத்தத்தையும், அவமானத்தையும் உண்டாக்கி விட்டது! 'அஞ்சுகத்தை அழைத்துக் கொண்டு ஓட வேண்டும்' என்று நான் மனத்தால்கூட நினைத்ததில்லையே! ஊர்க் கட்டுப்பாட்டுக்கு அடங்கி வீட்டை விட்டே வெளிவராத அந்தப் பெண்தான் அப்படி நினைத்திருப்பாளா? ஒருநாளும் நினைத்திருக்க மாட்டாள். ஒரு பாவமும் அறியாத அஞ்சுகத்தின்மீது எத்தனை பெரிய அவதூறு!

பெரியோர்கள் பேச்சைத் தட்டாமல் நான் வீட்டோடு இருந்திருந்தால் இவ்வளவு குழப்பமும் நேர்ந்தே இராதல்லவா? இனி நடந்து போனதைக் குறித்து விசனித்து என்ன புண்ணியம்? இனிமேலாவது பெற்றவர்கள் காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு புத்தியோடு பிழைக்க வழி தேடுவோம் என்ற முடிவுடன் வீட்டிற்குள் நுழைந்தேன்.

சோகத்தால் இளைத்துக் கிடந்த என் தாயார் என்னைக் கட்டிக் கொண்டு, "ஆற்றிலே குளத்திலே விழுந்து என் வாயிலே மண்ணைப் போட்டு விட்டாயோ என்று பயந்தேண்டா! அந்தக் கலியப் பெருமாள்தான் கண் திறந்து என் கவலையைத் தீர்த்து வைத்தாரு!" என்று சொல்லி, 'கோ' வென்று கதறி விட்டாள். தகப்பனார் கண்களிலும் நீர் முட்டியது. அவர் வாயைத் திறந்து எதுவும் சொல்லவில்லை. அவர் முகம் இருந்த நிலையில் அவரும் சந்தோஷமே அடைந்தார் என்று அறிந்து கொண்டேன்.

6

விளையாட்டுப் போல நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. அஞ்சுகத்தைப் பற்றிய கவலை மட்டும் என் மனதின் ஒரு மூலையை அரித்துக் கொண்டேயிருந்தது.

அன்று தங்கவேலுவே அந்த நல்ல சேதியைக் கொண்டு வந்தான். பட்டணத்தில் சேர்ந்து வேலை செய்து வரும் அஞ்சுகத்தின் மாமன் ஒருவர் வந்திருப்பதாயும், அவரே அஞ்சுகத்தை மணந்து கொள்ளப்

போவதாயும் அறிந்து சந்தோஷம் அடைந்தேன். 'பாவம், இப்பொழுதாவது அஞ்சுகத்திற்கு விடிவு ஏற்பட்டதே!' என்று எண்ணியபோதே என் கண்களைக் கண்ணீர் மறைத்தது.

என் சந்தோஷம் நீடித்து நிற்கவில்லை! அஞ்சுகத்தின் 'மாமன்', 'பென்ஷன்' பெற்ற ஆசாமி என்றும், அவரை மணக்கச் சம்மதிக்காத அஞ்சுகம் அழுதழுது தன் கண்களைப் புண்ணாக்கிக்கொள்வதாகவும் அறிந்து திடுக்கிட்டேன். அதுவும் அன்று அந்த 'மிலிடரி' ஆளை நான் நேரில் பார்த்தபோது மனம், 'திக்'கென்று நின்று விட்டுச் சிறிது நேரம் கழித்தே ஓட ஆரம்பித்தது. 'பாவம், அஞ்சுகத்தின் அதிர்ஷ்டம் இவ்வளவு கட்டையாகவா இருக்க வேண்டும்?' என்று அங்கலாய்த்தேன்.

அன்று வீதியில் பெரும் இரைச்சல் கேட்கவே வீதி ஜன்னலண்டை நின்று கவனித்தேன். குறட்டோரத்தில் நின்று என் தகப்பனாரும் கவனித்துக் கொண்டிருந்தார். அஞ்சுகத்தின் மாமனாகிய அந்த மிலிடரி ஆசாமிதான் வீதியில் நின்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்!

“நீங்களே சொல்லுங்க ஐயா, நியாயத்தை! ஏதோ ஒரு மொட்டைக் கடிதாசியைப் பார்த்துப் புட்டுப் பரிசத்தை நிறுத்திவிட்டுப் போவதும், அதைப் பார்த்துக்கொண்டு ஊரார் சும்மா இருப்பதும் நல்ல ஒழுங்கு! அந்தப் பெண் அழுதழுது சாவுது. இந்த வயசான காலத்திலே எனக்கென்னத் துக்குக் கலியாணம்? நான் தீர்மானித்து விட்டேன்; அந்தப் பெண் பேரிலே இரண்டாயிரம் ரூபாய் எழுதிவைக்கப் போகிறேன். இன்னும் ஒரு வாரத்திற்குள் பெண் பேச யாரும் முன்வராவிட்டால், இந்த ஊர்க்காரங்க முன்னிலையிலே இதுக்கெல்லாம் காரணமாக இருந்த பயலை இழுத்து வந்து, அந்தப் பெண் கழுத்திலே தாலி கட்டச் செய்யாவிட்டால் நான் ஒரு ஆண் பிள்ளை இல்லை! இதனால் என் உயிரே போவதானாலும் அக்கறையில்லை ......” என்று மேலும் ஏதேதோ இரைந்து கொண்டே போனார்.

ஊர்க்காரர்கள் எல்லோரும் ஒன்றுகூடி அவரை ஒருவாறு சமாதானப் படுத்தினார்கள். பிறகு அவர்கள் என் தகப்பனாரிடத்தில் வந்து நடந்தது நடந்து விட்டது; வீணாக ஊரில் கலவரத்தை உண்டாக்காமல் இரண்டாயிர ரூபாய் ஸ்ரீதனத்தோடு வரும் பெண்ணை ஏற்றுக்கொள்வது நல்லது என்று கூறினார்கள். மேலும் அந்த மிலிடரி ஆசாமியின் விரோதத்தை சம்பாதித்துக் கொள்வது தவறு என்றும் புத்தி சொன்னார்கள். அதுமட்டுமன்றி ஒரு பாவமும் அறியாத அந்தப் பெண் அஞ்சுகத்தின் கண்ணீர் ஊராரைச் சும்மா விடாதாகையால், என் தகப்பனார் இதற்குச் சம்மதிக்காவிடில், ஊராரே ஒன்றுகூடி இந்த விவாகத்தை நடத்திவிட நேரும் என்றும் பலவாறு எடுத்துச் சொன்னார்கள். இவ்வாறெல்லாம் பேசி என் தகப்பனாரைச் சம்மதிக்க வைத்ததுடன், என் தாய் தகப்பனார் இருவருமாக நேரில் சென்று பெண்பேசி வரும்படியான ஏற்பாடுகளையும் செய்து விட்டுத்தான் கலைந்தார்கள்.

எதிர்பாராத முறையில் மாறிய அஞ்சுகத்தின் அதிர்ஷ்டத்தையும் என் அதிர்ஷ்டத்தையும் எண்ணி எண்ணி வியப்புக் கடலாடினேன். ஒரு சுபதினத்தில் என் பெற்றோரின் பரிபூரண சம்மதத்துடனும், ஊராரின் பூரண ஆசியுடனும் அதிர்ஷ்டக்கார அஞ்சுகத்தின் கழுத்திலே மஞ்சள் கயிற்றால் அஞ்சு முடிச்சுக்களைப் போட்டும் விட்டேன்.

* * *

ஒருநாள் எங்கள் அதிர்ஷ்டத்திற்கு ஆதி காரணமாக இருந்த அந்த மகிழ மரத்தடியில் உட்கார்ந்து மலர்களைக் கோர்த்துக் கொண்டிருந்த அழகி அஞ்சுகத்தின் நினைப்பிலே மூழ்கி யிருந்தேன். அப்போது “எந்த நினைப்பிலே அப்படி மூழ்கிக் கிடக்கிறீங்க?” என்ற அஞ்சுகத்தின் கேள்வி என்னைச் சுயநினைவிற்குக் கொண்டுவந்தது. நான் சிரித்துக் கொண்டே, “எல்லாம் இந்த அஞ்சுகத்தைப் பற்றிய நினைப்புத்தான்!” என்று முடிக்கும் பொழுது அங்கு வந்த தங்கவேலு “அஞ்சுகத்தை நினைக்கிறதிலே மாமனுக்கு அனுப்பே கிடையாது என்கிறதைத் தெரிந்து கொண்டுதானே அந்த மொட்டைக் கடிதத்தை எழுதிப் பரிசத்தைத் தட்டிப் போகச் செய்தேன்!” என்றான்.

“அட, பாவிப் பயலே!” என்றேன் என்னை யறியாமல்.

“என் அவரைத் திட்டுகிறீர்கள்?” என்று கூறிவிட்டு, வெட்கத்தால் சிவந்த தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்ட அஞ்சுகம், தலையில் சுமந்த மகிழ மலர்கள் காற்றில் விளையாட வீட்டை நோக்கி வேகமாக நடந்து சென்றாள்.


தேர்ச்சி பெற்ற கைகளில் அழுக்குப்படிகின்றது . . .
எங்கு அழுக்கிருக்கிறதோ அங்கு கிருமிகளாலான
அபாயம் ஏற்படும் !
அடிக்கடி லைப்பாயினால் சுத்தம்
செய்துகொள்ளுங்கள் !
LIFEBUOY
LIFEBUOY SOAP
லைப்பாய்
சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைக்காப்பாற்றுகிறது
L. 112-172 TM

அமெரிக்கன் மாடல் ரிவால்வர்
லைசென்ஸ் வேண்டியதில்லை

NO LICENCE NEEDED



அமெரிக்கன்
மாடல்
ரிவால்வர்


உங்கள் உயிரையும், சொத்தையும், மானத்தையும், குண்டர்கள், விலங்குகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

வீட்டிலும், பிரயாணம் செய்கையிலும் இந்த அழகிய உறுதியான ரிவால்வர் உங்களுக்குச் சிறந்த, நம்பகமான நண்பனாக விளங்கும். ஒன்றன்பின் ஒன்றாக தானே 6 தரம் சுடுவதற்கு 6 ரவைகள் பொருந்திய இது, அசல் அமெரிக்கன் பிஸ்டல்களுக்குச் சமமானது. 15 அவுன்ஸ் கனமும், 9 அங்குல நீளமும் உள்ள இது நெருப்பைக் கக்கிக் கொண்டு பயங்கர சப்தத்துடன் வெடிக்கிறது. இன்றே இதில் ஒன்றுக்கு ஆர்டர் கொடுங்கள். குறைந்த விலையுள்ள இந்த மெய்க்காப்பாளன் இன்றி ஒரு நாளும் இருக்காதீர்கள்.

ரகம் நெ.	222	ரூ. 6/8
,,	333	ரூ. 7/8
,,	444	ரூ. 8/8

மேல்கொண்டு 4 டஜன் ரவைகள் விலை ரூ. 4/8. பிஸ்டல் உறை கொண்ட தோல் பெல்ட் ஒன்றின் விலை ரூ. 5/- ஜாப்ரிகேடிங் ஆயில் ஒரு பாட்டில் விலை ரூ. 1/- மேற்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

WILSON TRADING CORPORATION
P. B. 247. CAWNPORE (U. P.)



போனோமிண்ட்
பேதி மிட்டாயிக்கு ஜே!

திவ்வியமான பெப்பர்மிண்ட் மிட்டாய் போல் சுவையுள்ளது. அடங்கியுள்ள மருந்துச் சத்துக்கள் உமிழ்நீரோடு கலந்து உதர கோசங்களில் சேர்கின்றன. இது மலபோக்கை செம்மையாக எளிதில் சரிப்படுத்துகிறது.


சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள் :
மெஸர்ஸ். ஓரியண்டல் மர்க்கண்டைல் ஏஜன்ஸி
99-A, அரமனைக்காரத் தெரு :: மதராஸ் - 1

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI ஏப்ரல் 24, 1949 4 அணா



டி.எஸ்.ஆர். கோகுல் ஹேர் ஆயில்



டி.எஸ்.ஆர் கோகுல் கூந்தல் தைலம், அதன் அரிய வாசனைக்கும் அபூர்வ குணத்திற்கும் பெயர் போனது. இது கூந்தலைகருகருவென்று நீண்டு வளரச் செய்வதோடன்றி, மூளைக்கு குளு குளுப்பையும், அலாதி சுறுசுறுப்பையும் அளிக்கிறது.



டி.எஸ்.ஆர் & கோ., கும்பகோணம்.

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:

B. பாலபட்டாபி

(ESTED. 1933)

P. B. No. 182, கோயமுத்தூர்

ஸ்டாக்கிஸ்டுகள்:

சுந்தரம் ஸ்டோர்ஸ், மயிலாப்பூர்

விஜயா ஸ்டோர்ஸ், மயிலாப்பூர்

கேசரியின் மூன்று பிரசித்த மருந்துகள்

•

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

சங்காதோஷம், கீல் வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகு வலி முதலியவற்றைக் குணப்படுத்தும்.

•

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச் சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

•

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக் கட்டிகளும் குணமாகும்.

•

விவரங்களுக்கு எழுதுங்கள்

கேசரி குடீரம் லிட்.

ராயப்பேட்டை, மதராஸ் - 14

REGD No. M. 4392



½ கப் கோதுமைமாவு, 1 கப் மைதாமாவு, ருசிக்குத் தகுந்தபடி உப்பு இவைகளை கலக்கவும். 3 தேக்கரண்டி டால்டாவை மாவுக்கலவையில் தேய்த்து, பூரிக்கு தயாரிப்பதுபோல் பிசைந்தமா செய்து சிறிய பந்துகளாக உருட்டிக் கொள்ளவும். பந்துகளை 3 அங்குலம் குறுக்களவுள்ள வட்டவடிவமாக பரத்தி இருபாதியாக துண்டிக்கவும். ஒவ்வொரு பாதியையும், விளிம்புகளை தண்ணீரால் நனைத்து ஒன்றோடொன்று பொருத்தி திருகோணமாகச் செய்து கொள்ளவும். மசாலா சேர்த்து பொடிசெய்த உருளைக்கிழங்கும் பயறுமோ அல்லது சிறு மாமிசத்துண்டுகளோ, இந்த திருகோணத்தினுட் திணித்து மூடி பொருத்தவும். சூடான டால்டாவில் சமோசாக்களை இரு சிவப்பாகும் வரை நன்கு பொரித்து எடுக்கவும்.

வடித்த கஞ்சி ஒரு உணவா?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



HVM. 96-172 TM